www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
மார்ச்.27-ஏப் .02,1994,1994
ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 44

மகாபாரதம்

## தென் மாகாணசபைத் தேர்தலும் திடமற்றவர்களின் வாய்வீச்சுக்களும்!

அரசியல் அலசல்

## பெண் புலிகள் ஏற்படுத்தும் மாற்றங்கள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்





பரிசு பெற்ற பலே பூனை!

மலைப்பாம்பு விழுங்கிய குழந்தை!

ஸ்போட்லைட்

சினி விசிட்

சூடான புதுத் தகவல்கள்

இலக்கிய நயம்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

## இவர்களை மன்னியும்

ஒளியாகி வந்த தேவன்
மெழுகாகி தனை ஈந்தான் அங்கே
கடவுளின் மைந்தனுக்கு
கல்வாரியே சொந்தமாகி
கழுமரம் தனை சுமந்து
எமை மீட்க சென்றார் அன்று

கன்னத்தில் அறைந்த போதும்
காறி உமிழ்ந்தபோதும்
பதிலேதும் கூறாது
தேவமகன் அன்று
'மௌன விரதம்' இருந்தாரோ?
இல்லை.
'அறியாது செய்தனர் தந்தாய்
மன்னியும் இவர்களை' என்று
'கண்ணுக்கு-கண்; பல்லுக்கு-பல்
என்ற இதிகாசம் மாற்றி
புதுவழி சமைத்த தேவன்
இன்றும்
கல்வாரிப் பாதையிலே- மீண்டுமொருமுறை

அன்று ஒரு 'யூதாஸ்' இறைமகனை
முத்தமிட்டான்.

இன்றோ பல 'யூதாஸ்கள்'
'கழுமரம்'சுமந்த தோள்கள்
'யுத்த மரம்' சுமந்து செல்ல
கசையடிபட்ட மேனி குண்டடிபட்டு
வதைகிறது.
வசைச்சொல் கேட்ட செவிகள்
வஞ்சகச் சொல் இன்று கேட்டு
தோள்கொடுக்க ஒரு 'வெரோணிக்கா'
எவருமே இல்லாது
தவிக்கின்றார் நம் தேவன்.

மும்முறை வீழ்ந்தும் எழுந்து சென்ற
இறைமகன்
முதல்முறை வீழ்ந்தே
எழமுடியாது தவிக்கின்றார்.

தாகத்திற்கு அன்று
'காடி' பருகிய இறைமகன்

## ஆன்மீகம்



'காடி' கூட இன்றி
நாவரண்டு போயிருந்தும்
மௌனமாயிருக்கின்றாரோ....?
இல்லை
இன்றும்தான் கூறுகின்றார்
'தந்தாய் இவர்கள் அறியாமற்
செய்கிறார்கள் இவர்களை
மன்னியும்!'

ஜி.எம்.ஜே-வத்தளை.

## பொறுமை கொள்ளுங்கள்!

"ஈமான் கொண்ட விசுவாசிகளே! பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக இறைவன் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்." -அல்குர் ஆன்-

"பொறுமை கொண்ட உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக. எனவே (மறுமையின்)வீடு உங்களுக்கு நல்லதாகி விட்டது. -அல்குர் ஆன்-

ஒரு சமயம் ஸஹாபாக்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் "யாரசூலல்லாஹ் மீஜான் தராசை அதிகமாக கனக்கச் செய்யும் பொருள் யாது?" என்றார்கள். அதற்குப் "பொறுமை" என நாயகம் (ஸல்) அவர்கள் பதிலுரைத்தார்கள். "கேள்விக் கணக்குகளை இலகுவாக்கும் பொருள் யாது?" என்றார்கள். அதற்கும் "பொறுமை" என்று பதிலுரைத்தார்கள்."பின் ஸியாரத்துல் முஸ்தகீம் பாலத்தைச் சுலபமாக கடக்கச் செய்யும் பொருள் யாது?" என்றார்கள். அதற்கும் பொறுமையே என்று அருமை நாயகம் (ஸல்) பதிலுரைத்தார்கள்.

நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் விளங்கிய மூன்று முக்கிய அம்சங்கள் 1. தூய்மை 2. எளிமை 3. பொறுமை. தூய்மை அவர்களின் தூய உள்ளத்தை உலகிற்குக் காட்டியது. எளிமை அவர்களின் ஏழ்மை வாழ்வை அகிலத்தாருக்கு அறிவித்தது. பொறுமை எத்தகைய இன்னல்களையும், இடர்பாடுகளையும் இனிய முகத்தோடு ஏற்று ஈடு இணையற்ற இஸ்லாத்தை உலகிற்குக் காட்டியது. ஒரு சமுதாயத்தின் காவலராக, ஒரு சமயத்தின் ஒப்புயர்வற்ற தலைவராக வளர்ந்த போதும்கூட பொறுமை அவர்களின் பொன்னான நெஞ்சில் சுடர்விட்டுப் பிரகாசித்தது. வறுமை கண்டும் பொறுமை கொண்ட அருமை நபியாகத் திகழ்ந் தார்கள். பொறுத்துப் புடம்போட்ட தங்கமாக மிளிர்ந்த அண்ணலவர்களின் பொறுமை பற்றி உலகம் வாழ்த்திக் கொண்டே இருக்கின்றது. எனவே நாமும் எம் கோமான் நபியினைப் போன்று பொறுமையுடன் வாழ்வோமாக!

செல்வன் மசூத் அஹமத், காத்தான்குடி-03.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
"நாட்டைப் பிரித்திட அனுமதியேன்"
என்று-ஜனாதிபதி கூறிவருகிறார்.
அதே சமயத்தில்-
வடக்கையும்-கிழக்கையும்
பிரித்தே தீருவது என்றும்
பிடிவாதமாகப் பேசுகிறார்.

வடக்கு-கிழக்கு பிரிப்பு
தமிழர்களை-
ஆத்திரமூட்டும் செயல் என்று
புலிகள் அறிவித்திருக்கிறார்கள்.

சலக தமிழர் அமைப்புக்களும்
வட்க்கு-கிழக்குப் பிரிப்பை
தாம் ஒத்துக்கொள்ளோம் என்று
எப்போதோ எடுத்துச் சொல்லிவிட்டன.

முஸ்லிம் காங்கிரசும்
வடக்கு-கிழக்கு பிரிப்பை
ஏற்கவில்லை தாம், என்றே
தேர்தல் பிரச்சாரங்களில் தெளிவாக்கியது.

தமிழ்-முஸ்லிம் கட்சிகள் யாவும்
பிரிப்புக்கு எதிராக இருக்கும்போது
பெரும்பான்மை இன தலைமைத்துவ
கட்சிகள் மட்டுமே- பிரிப்போம் என்று
கச்சைகட்டிக்கொண்டு புறப்படுவது
கருத்தொற்றுமையை உருவாக்காது.

ஏற்கனவே சிக்கலாகி இறுகிப்போயுள்ள
இனப் பிரச்சனையின் பரிமாணங்களை
விளங்கிக்கொண்டு,
சகல அரசியல் கட்சிகளும்
ஒரு வழிக்கு வரவேண்டிய நேரத்தில்,
தமிழ்-முஸ்லிம் கட்சிகளின்
கருத்துக்களுக்கு காது கொடாமல்

வெளியாகும் பேச்சுக்கள்
விரிசல்களை விசுவரூபமாக்கிவிடும்.

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்கள்
நாட்டுப் பிரிவினைக்கு-
எதிரான கருத்துக்களை எடுத்துக்காட்டியுள்ளதாக
ஜனாதிபதி கருத்துச் சொல்லியிருக்கிறார்.

அதே சமயத்தில்,
வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு
எதிரான கருத்துடைய அமைப்புகளுக்கே
பெரும்பாலான தமிழ்-முஸ்லிம் மக்கள்
வாக்களித்திருக்கிறார்கள்-என்பதையும்
ஜனாதிபதி அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை
ஆர்வத்தோடு துரிதப்படுத்தவேண்டிய
அவசியமான இந்த வேளையில்
அரசியல் முரண்பாடுகளை உருவாக்குவது
அவசியமா என்பதை
நாட்டின் தலைமையில் உள்ளவர்கள்
எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரச கரும மொழி சட்டத்தை
அமுல்படுத்தவேண்டும் என்று
ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் வரை
அடிக்கடி சொல்லி வருகிறார்கள்.

ஆனால்-நடைமுறையில்
ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது
என்ற நிலையில்தான்
அரச கரும மொழிச் சட்டம்
ஆமை வேகத்தில் நகர்கிறது.

ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள்
சட்டங்களை இயற்றினாலும்
அதை அமுல்நடத்தும் பொறுப்பு
அதிகாரிகளைச் சார்ந்தது.

சில சமயங்களில்
சட்டம் ஒன்று இருக்கிறதே
என்பதற்காக
ஏனோ தானோவென்று
மொழி பெயர்த்து தள்ளிவிட,
அதைப் படித்து புரிய முடியாமல்
தமிழ் பேசும் மக்கள் முழிக்கிறார்கள்.

எனவே-சட்டங்களால் முடியாததை
சமத்துவ உணர்வுகளாலும், புரிதல்களாலும்
மட்டுமே சாதிக்க முடியும்.
இன ஒற்றுமைக்கும் அதுவே முக்கியம்.
அதே சமயம்
அரச கரும மொழியாக்கலுக்கு தடையாக-
அலட்சியமாக உள்ளவர்கள் மீது
தகுந்த நடவடிக்கைகளும் முக்கியம்.
ஏனெனில் சிலருக்கு எடுத்துச் சொல்வதைவிட
அடித்துச் சொல்வதே விளங்கும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

### கவிதைப்போட்டி இல-41

களம் காண வந்த கவிதைகளில் வெற்றி முகம் கண்டதுவும்—வியக்கப்பட்டவையும்.

**பரிசுக்குரிய கவிதை**

**அவலம்**

போலியோ
மகனை முடமாக்கியது
போர்....
வாழ்வையே முடமாக்கியது.

ஜீவி-திருமலை.

**வியக்கப்பட்டவை**

**கலங்கிக் கரைகின்றேன்**

ஐயிரெண்டு திங்களாய்
அங்கமெலாம் நொந்தபோதும்,
வேதனை புரியவில்லை.
கையிரண்டில்
நீ தவழ்ந்த பின்போ!
கலங்கிக் கரைகின்றேன்.

எம்.சண்முகம்-கிரான்.

**போரின் விளைவு!**

போரின் கர்ப்பத்தில்,
புதல்வர்களாய் பிரசவித்தோம்.
பாரில் இப்போர் நீடித்தால்,
பார்ப்பீர் இது போன்று
பலபேரை!

சு.அருள்ஜோதி-வேலணை-06.

**அடையாளம்**

தேசமே!
எங்கள் நிலையைப்பார்.
ஓ....
உன்னை அடையாளம் காட்டவா
நாங்கள்?

அ.குமணன்(அமரன்)-பாண்டியூர்-1.

**கொடூரம்**

அணு ஆயுதம்
வையகத்துக்கு
தந்த
விசிடிங்
கார்ட்டா
இவன்.

முஹம்மட் பௌமி
அனுராதபுரம்.

**போசாக்கு**

ஆயுதப் போசாக்கே
அவர்களுக்கு வேண்டியது.
மனிதர்களின் போசாக்கு
அவர்களுக்கு எதற்கு?

அ.தருஷாந்த்
திருகோணமலை.

**பரிதாபம்**

தொடர்கின்ற யுத்தத்தில்
துளிர்விட்ட கிளை ஒன்று
துன்ப நிலை துயரத்தில்
தன் நிலை கெட்டு
வாடுதிங்கே.

தெ.லோஜனா-கொழும்பு-15.

**இதய துடிப்பு**

ஆயுதம் மலிய
அன்பு ஒழிய
ஏழ்மை நிறைய
தாய்மை துடிக்க
ஊனம் தவிக்கிறதே

எஸ்.தயாளினி-மட்டக்களப்பு.

**சந்ததி**

வற்றிப் போன
மானுட்டத்தின்
வருங்கால
சந்ததியோ?
வாழ்வில்லார்க்கு
வருகின்ற
வசந்தமும்
வலது
குறைந்ததுவோ?

வெ.பன்னீர்ச்செல்வன்
பூண்டுலோயா.

**வேண்டுதல்**

இறைவா
வயிற்றுக்கு கஞ்சி
வேண்டாம்
பூமிக்கு
அமைதி(யை)கொடு!

எப்.லெனாட்குமார்
ஹப்புத்தளையூர்.

போர் என்ற
பரீட்சையால்
வந்த
ஊனமுற்ற
பெறுபேறு!

இளங்கோவன் தமிழ்வண்ணன்
இரத்தினபுரி.



ஆயுத நச்சரிப்பால்
இந்த-
நாடு மட்டுமல்ல;
நாங்களும்தான்
ஊனமாய்ப்
போனோம்!!

ஏ.ரகுபதி-கல்கிசை.

**நீ அறிவாயோ?**

ஊனம் என்பது
உனக்கு உடலில்
ஆனால்,
இன்று பலருக்கு
அதுவே உள்ளத்தில்.

செல்வி.ஆ.லெ.பஸ்லியா
காத்தான்குடி-04.

### கவிதைப் போட்டி இல-44



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.
அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 26.3.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 44
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ், கொழும்பு-5

**ஊனக்குழந்தை**

வடக்கில் 2000ம் ஆண்டில்
அனைத்து அன்னைக்கும்
கிடைக்கும்?

நேரியகுளம் சந்திரன்.
வவுனியா.

**துப்பாக்கி ஊனங்கள்**

துப்பாக்கி ஊனத்தால்
துயருறும் தாய்மார்முன்
நீ ஒன்றும்
துர்ப்பாக்கியவதியல்ல தாயே

சரண்யா யோகேந்திரன்
ஆரையம்பதி-02.

**காரணம்?**

படைத்தவன் விதியா?
பயங்கரவாதத்தின் சதியா?
ஐயோ!
தலை சுற்றுகிறது
கொஞ்சம் பிடியுங்கள்.

கே.கவிதா-வவுனியா.

## வாசகர்சாலை

அன்பின் முரசே,

வாராவாரம் நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம், சிறியவர் என்ன பெரியவர் என்ன? அத்தனை பேரையுமே நீ கவர்ந்து விட்டாய். வாரம்தோறும் நீ சுமந்து வரும் மகாபாரதத் தொடர் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. நான் கடல் கடந்து இருந்தாலும் உன் வரவுக்காக தினமும் தினமுரசு எப்போது வரும் என்று வழி பார்த்துக்கொண்டிருக்கின்றேன். வாழ்க தினமுரசு. வளர்க உன் பணி.

சாகுல் கமீட் சுபியான்-குவைத்.

•

உன்னை 24 வாரங்களாகக் காதலித்தேன். ஆனால் எதிர்பாராத விதமாக திடீரென கடல் கடந்து செல்ல வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. உடனே உன் முகவரியைத் தேடி என் டயரியில் எழுதிக் கொண்டேன். மனம் நொந்தவனாக உன்னைவிட்டுப் பிரிந்தேன்-தபாலிலாவது சந்திப்போமென்று. என்ன அதிசயம்! உன்னை இங்கே சந்தித்துவிட்டேனே, கடல் கடந்தாலும் உன்னை மறப்பதாக இல்லை.

ஏ.எச்.சாஜஹான்-குவைத்.

•

மாறுபட்ட, வேறுபட்ட சூழ்நிலையில், புதுயுகம் படைக்க புறப்பட்ட மலரின் இதயத்துக்கு, (ஆசிரியருக்கு) எனது வாழ்த்து. மேலும், மேலும் இன்னும் சுவை கூட்டி, தந்திடட்டும் தினமுரசை.

தினமுரசு வாரமலரே!

கடல் கடந்த குட்டி பஹ்ரைன் தீவில்-உன் சேவை மணம் வீசுகின்றது. என்றும் நிலைக்க எனது வாழ்த்துக்கள்.

இர்சாத் ரஹூமத்துல்லா
பஹ்ரைன்.

•

நான் தினமுரசின் ஒரு தீவிர வாசகன். இளம் கன்று பயமறியாது. முரசோ பத்து மாதப் பாலகன். துப்பாக்கியைவிட உங்கள் பேனா முனை மிகமிக கூரானது. (அரசியல் கத்தி நெஞ்சில் குத்தாது. முதுகில் குத்தும்) முரசை இழக்க நாம் தயாராக இல்லை. மிக மிக நிதானம் வேண்டும்.

யாசின்பிசு-நுவரெலியா.

•

வாரம்தோறும் வலம் வரும் வண்ண மலரே என் முரசே!

உன்மேல் படரும் ரசிகனின் தரமான படைப்பு அடி தூள். அது உன் சேவைக்கு மென்மேலும் மெருகூட்டுகிறது. என்றென்றும் நீ மலர என் பொன்னான வாழ்த்துக்கள்.

எம்.யுவன்-
மட்/கரையாக்கந்தீவு.

•

எங்கள் சிந்தனைக்கு விருந்தான சிறப்பிதழே, முரசே!

வாரம் ஒருமுறை மலர்ந்து எங்கள் இதய சோலையில் மணம் வீசும் வண்ணமலரே! தித்திக்கும் தேன் தமிழ் காவியமே! உன் பயனுள்ள அம்சங்கள் அனைத்திலும் பயனடைகிறோம். அனைவர்க்கும் உகந்த குடும்பமலர் தினமுரசு என்பதில் பெருமை கொள்கிறோம்.

ஜெகதீஸ், பிரான்சிஸ்-வத்தளை.

•

தினமுரசே!

உன் இதழ்களில் தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் சுவையோ சுவை. நாங்கள் அறிந்திராத புதுமையான சினிமா, அரசியல், வெளிநாட்டு நடப்புகளை தருவது தினமுரசு என்றால் அது மிகையாகாது.

புஸ்பா,நித்தியா,ராஜி,சுஜி-வந்தாறுமூலை.



தித்திக்கும் தினமுரசே!

சிந்தையை கவரும் பல சிறப்பான அம்சங்களை சுமந்துவரும் உனக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

பெருமாள் ராஜேந்திரன்-பொரலங்கடை.

அன்பின் முரசிற்கு,

ரசிகனின் "கொலைவிழும் நேரம்" தொடர் ரொம்பவும் விறுவிறுப்பாயுள்ளது. அடுத்த வாரம் என்ன நடக்குமோ என ஏங்க வைத்து எதிர்பார்க்க வைக்கிறது.

தொடர்ந்தும் ரசிகனின் எழுத்துப்பணி தொடர வாழ்த்துக்கள் முரசினூடே.

ரசிகை-இக்கிரி கொல்லாவ.

•

திக்கெட்டும் இடமெல்லாம் முரசொலிக்கும் தினமுரசே! நீ சுமந்து வரும் இனியதும் புதியதுமான பல்சுவை அம்சங்களும் நெஞ்சினில் நிறைந்ததுவே. ஆக மொத்தத்தில் நீ ஒரு கலைமகளே. உன் வீரமுரசொலிகளை உலகமெங்கும் தித்திக்க என் மனமார்ந்த வந்தனங்கள்.

எம்.இக்ராம்-கொழும்பு-12.

•

தித்திக்க வைக்கும் முரசே,

நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் வெகு ஜோர். குறிப்பாக தமிழின் மிகப்பெரிய காவியமான மகாபாரதத்தை, தகவல்பெட்டி, தேன்கிண்ணம் போன்றவற்றை பாராமல் என் விழிகள் ஓயாது. இதற்கு எனது நீண்டநாள் நன்றிகள் முரசுக்கு உரித்தாகட்டும்.

ஆர்.பாண்டியன்-நோர்வூட்.

•

எங்களின் அபிமான தினமுரசே,

உனதின் முன் அழகும் பின் அழகும் உள்ளழகும் ஆஹா அற்புதம். சிறுகதைகளும், தொடர்கதையும் ரசிகனின் இலக்கிய நயமும் சிந்தியாவின் பதில்களும் பார்க்க பார்க்க மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். எட்டுத்திக்கும் நீ உலாவி வர வரவேற்கிறோம்.

எஸ்.செல்வநாதன்,யோகராஜாமஞ்சுளா,
தீபா, ரமேஷ், சுதா,சிவா-புபுரஸ்ஸ.

# கிழக்கில் இராணுவத் தாக்குதல்கள் தீவிரமாகும்!

# சமீபத்திய தாக்குதல்களில் புலிகள் தரப்பில் பாரிய இழப்புக்கள்!!

## வடக்கே தரைவழி தாக்குதல்கள் தள்ளிவைக்கப்படும்

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு படையினரின் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் திட்டமிட்டபடி நடந்து முடிந்துள்ளமையால் கிழக்கில் உள்ள பாதுகாப்புப்படை வட்டாரங்களில் புதிய உற்சாகம் காணப்படுகிறது.

தேர்தல் நடந்து முடிந்தமையானது தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நிலமை கட்டுக்குள் இருக்கிறது என்பதை உணர்த்தியிருப்பதாக கருதும் அந்த வட்டாரங்கள் புலிகளுக்கு எதிரான தொடர் நடவடிக்கைகளை முடுக்கிவிடத் தீர்மானித்துள்ளன.

கடந்த 16ம் திகதி படையினருக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் புலிகளின் தரப்பில் 21 பேர் பலியானார்கள்.

அவ்வாறு பலியானவர்களில் ஒருவர் புலிகளின் உள்ளூர் தலைவராவார். புலிகள் அமைப்பில் மேஜர் தரத்தில் உள்ள அருளப்பு என்றழைக்கப்படும் ஞானமுத்து அருளம்பலம் என்பவரே அந்த முக்கிய உறுப்பினராவார். அவரோடு கப்டன் தரத்தில் உள்ள மூன்று பேரும், லெப்டினன்ட் தரத்தில் உள்ள நான்குபேரும் பலியானார்கள்.

கிழக்கில் அண்மைக் காலத்தில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் அவர்களுக்கு பாரிய வெற்றியளித்துள்ள நடவடிக்கை அதுவாகும்.

அந்த நடவடிக்கையை அடுத்து கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை படையினர் முடுக்கிவிடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கில் இருந்து வடக்கை தனியாக பிரிப்பது எனவும், கிழக்கில் புலிகளை இல்லாமல் செய்யப் போவதாகவும் ஜனாதிபதியும் பேசிவருகிறார்.

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை கிழக்கில் நடத்தப் போவதாகவும் ஜனாதிபதி கூறிவருகிறார்.

அவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை அரசாங்கம் நடத்துவதாக இருந்தால் அதற்கு புலிகளின் தரப்பில் இருந்து எதிர்ப்பு ஏற்படக்கூடும். எனவே அதற்கு முன்னர் கிழக்கில் இருந்து புலிகளை முற்றாக வெளியேற்றும் நடவடிக்கைக்கு அரசாங்கமும், படைகளும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடும் என்றே கருதப்படுகிறது.

அவ்வாறு முக்கியத்துவம் கொடுக்கப் படுமானால் வடக்கே உடனடியாக தரைவழித் தாக்குதல்களை படையினர் மேற்கொள்ள மாட்டார்கள்.

கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு அதன் பின்னரே வடக்கில் தரைவழித் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

வடக்கிலும், கிழக்கிலும் ஒரே சமயத்தில் பாரிய தரை வழித் தாக்குதல்களை நடத்தி முடிக்கக்கூடிய நிலமை தற்போது இருப்பதாக தெரியவில்லை.

எனினும் வடக்கே விமானங்கள் அடிக்கடி பறந்து நோட்டமிடுகின்றன. குட்டித் தாக்குதல்களும் நடைபெறுகின்றன.

தரைவழித் தாக்குதல் இல்லாத போதும் போர் சூழ்நிலையில் மாற்றமில்லை.

அதே சமயத்தில் கிழக்கில் படையினரின் ஒருமுகப்பட்ட கவனத்தை திசை திருப்பவும், அங்கு படையினரின் தாக்குதல் திறனின் பலத்தை குறைக்கவும் புலிகளும் தமது கெரில்லா உத்திகளை பயன்படுத்த முனைவர் என்றே நம்பப்படுகிறது.

தென் மாகாணசபைத் தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் அரசாங்கம் பாராளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வியூகங்களை வகுக்க வேண்டியிருக்கும். அதனால் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை களில் சொல்லிக்கொள்ளக்கூடிய வெற்றி ஒன்றைப் பெறுவதற்கு இராணுவ நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கும். வடக்கிலும் பாரிய தாக்குதல் களுக்கு திட்டமுண்டு என்றே புலிகள் கூறிவருகின்றனர்.

கிழக்கில் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி முடித்துள்ளமையை அரசாங்கம் வெளியுலகுக்கு சொல்லக்கூடிய ஒரு சாதனையாகவும், அரசியல்- இராணுவ ரீதியில் கிழக்கே தனது நிலையை பலப்படுத்தியுள்ள நடவடிக்கையாகவும் கருதுகிறது.

அதனால் தலைநகரில் புலிகள் ஊடுருவி தமது இராணுவ பலத்தை வெளிப்படுத்த முனையலாம். என்று கருதி பாதுகாப்பு ஏற்பாடுகள் இறுக்கமாகி வருகின்றன.

மீண்டும் தேடுதல் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா இராணுவத்தின் போராடும் ஆற்றலை வளர்க்க வேண்டும். உளவியல் ரீதியாகவும், ஆயுத பலத்தை அதிகரிப்பதன் மூலமும், படையினரின் தேவைகளை நிறைவு செய்வதன் ஊடாகவும் யுத்தத்தில் முன்கை எடுத்து செயற்பட முடியும் என்று கருதுகிறார்.

இராணுவத்தினரும், புலிகளும் தாக்குதல், தாக்குதலை எதிர்கொள்ளல், பதில் தாக்குதல் நடத்துதல், இராணுவ பலத்தை அதிகரித்தல் பற்றிய சிந்தனைகளில் ஈடுபட்டுள்ளபோது, இரு தரப்பையும் சாராதவர்கள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க உதவுவது பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இரு தரப்பினரும் வகுத்துவரும் யுத்த வியூகங்களுக்குள் அவர்களது முயற்சிகள் இரு தரப்பாலும் வரவேற்கப்படுவதாக மேலோட்டமாக வெளியே கூறப்பட்டாலும், மேலான கவனத்தில் கொள்ளப்படுமா என்பது தற்போதைய நிலையில் சந்தேகமே.

## தோட்ட நிர்வாகத்தின் தொடர்ச்சியான அலட்சியம்!

## கடனாளிகளாகும் பத்தாயிரம் தொழிலாளர்கள்!!

**(இராகலை நிருபர்)**

ஆண்டுதோறும் ஜனவரி மாத நடுப் பகுதியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த லீவு போனஸ், மதுரட்ட பிளான்டேஷன் கம்பனியை சேர்ந்த தோட்டங்களில் இதுவரை கொடுக்கப்பட வில்லை.

இதனால் இக்கம்பனியைச் சேர்ந்த பிறெம்லி, அல்மா, கூரகல, ஜபொரஸ்ட், கோணப்பிட்டிய, மதுரட்ட, மாகுடுகல, லிடஸ்டேல், இராகலை, மகாஊவா, சென்லேனாட்ஸ் ஆகிய தோட்டங்களில் உள்ள சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கஷ்டப்படுகின்றனர்.

இது தொடர்பாக தொழிற் சங்கங்கள் இக்கம்பனியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்ற போதிலும், தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர் களுக்குரிய லீவு போனஸை கொடுக்க அக்கறை கொள்வதாக தெரியவில்லையென இ.தொ.கா இராகலை மாவட்ட பிரதிநிதி திரு.பி.எம். சந்திரன் கவலை தெரிவித்தார். எனினும் இராகலை தோட்டத்தில் சுமார் 50 தொழிலாளர்களுக்கு மாத்திரம் லீவு போனஸ் கொடுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது.

தற்போது தொழிலாளர் ஒருவருக்கு ஒரு நாள் வேதனம் 72/50 கொடுக்கப்பட்டு வருகின்றது. இதில், ஒரு தொழிலாளியின் மொத்த சம்பளத்திலிருந்து சுமார் 700/= ரூபாவுக்கு மேல், ஊழியர் சேமலாப நிதி, தீபாவளி முற்பணம், தொழிற்சங்கம், டோபி, பாபர், மரண ஆதார நிதி போன்ற பல்வேறு விடயங்களுக்கு அறவிடப்படுகின்றது. மிகுதியாக கிடைக்கும் சம்பளம் மிக சொற்பமே. இதனைக் கொண்டு இன்றைய வாழ்க்கை செலவு உயர்வுக்கேற்ப, தமது குடும்பங்களை கொண்டு செல்ல மிக சிரமப்பட வேண்டிய நிலையில் தோட்டத்தொழிலாளர்கள் இருக்கின்றனர்.

மேலும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் இப்பகுதியில் பெய்ய ஆரம்பித்த மழை இதுவரை தொடர்ந்து கொண்டிருப் பதால், சிறு சிறு மரக்கறி தோட்டங்களில் மரக்கறி செய்கையும் பாதிப்படைந்துள்ளது. இதனால் இதனை நம்பியிருந்தோரும் கடனாளிகளாகியுள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில், வழக்கமாக ஜனவரி மாத முற்பகுதியில் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த லீவு போனஸ், இம்முறை கொடுக்கப்பட்டால் உதவியாக இருக்குமென எதிர்பார்த்து ஏமாற்றமடைந் துள்ளனர். ஏப்ரல் மாதம் கொடுக்கப்பட்ட விருக்கும் ஆதாய போனஸுக்கும் இந்த நிலைதான் ஏற்படுமோ என கலக்க மடைந்துள்ளனர்.

இது தொடர்பாக தொழிற் சங்கங்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற் கொண்டு இக்கொடுப்பனவுகள் கிடைக்க வழி வகைகள் செய்ய வேண்டுமென இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கிழக்கில் அத்துமீறும் ஆயுதக் குழுவினர்!

## வாக்களிக்காதவர்களிடம் கப்பம் கேட்டு மிரட்டல்!!

கிழக்கு மாகாணத்தில் சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் "மோகன் குழு" என்றழைக் கப் படுபவர்கள் சுயேச்சையாகப் போட்டியிட்டனர்.

தமக்கு வாக்களிக்காவிட்டால் மக்கள் நிம்மதியாக இருக்கமுடியாது என்று அக்குழுவினர் தாம் போட்டியிட்ட பகுதிகளில் உள்ள வாக்காளர்களை மிரட்டினார்கள்.

புலிகளுக்கு எதிரா செயற்படுவதாக சொல்லியபடி பொதுமக்களை மிரட்டுவது, ஆட்களை கடத்துவது, கப்பம் திரட்டுவது என்று அடாவடித்தனங்களில் ஈடுபட்டுவரும் மோகன் குழுவினருக்கு எதிராகப் பேசவே மக்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள்.

தமக்கு வாக்களிக்காதவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோரிடம் மோகன் குழுவினர் பயமுறுத்தி பெருந்தொகையான பணத்தை கப்பமாகக் கேட்டு வருவதாகவும், வவுணதீவுப் பகுதியில் அக்குழுவின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளதாகவும் "யுக்திய" என்னும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக அப்பாவி மக்களை புலிகள் என்று பிடித்து அச்சுறுத்தி வருவதாகவும் "மோகன் குழு" பற்றி பொதுமக்கள் பலர் தெரிவிக்கின்றனர்.

மிரட்டல், மற்றும் குறுக்கு வழிகள் மூலம் "மோகன் குழு" தனது வேட்பாளர்கள் சிலரை வெற்றிபெற வைத்துள்ளது. அவர்களும் இப்போது மக்கள் "பிரதிநிதி"களாகிவிட்டனர்.

## அறிக்கை தந்துவிட்டார் தேர்தல் ஆணையாளர்!

## இனித் தேவை துரித நடவடிக்கை!

### சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்களா?

கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும் அரங்கேறியதை தேர்தல் ஆணையாளரின் அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

தனக்குரிய வரம்புகளுக்குள் நின்று தேர்தல் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஜனநாயக மரபுகள் மீது அக்கறையுடைய வர்களால் வரவேற்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் குறித்து எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வுள்ளன? அதிகார துஷ்பிரயோகங்களுக்கு காரணமாக இருந்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்களா? அதன்மூலம் தேர்தலை கேலிக்கூத்தாக்கும் விபரீதம் தடுக்கப்படுமா? என்பதே தற்போதுள்ள கேள்விகளாகும்.

அவ்வாறு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல், அல்லது பூசி மெழுகும் நடவடிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்டவர்களை பாதுகாக்க முற்படுவதாக ஒரு எண்ணம் மக்களிடம் ஏற்படுமானால் ஜனநாயக நடைமுறைகள் மீது நம்பிக்கையீனங்கள் தோன்றுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கை ஓரளவு நம்பிக்கை தந்திருக்கிறது. அதனை வலுப்படுத்த வேண்டியது தக்க நடவடிக்கை எடுக்கும் பொறுப்பில் உள்ளவர்களின் கடமையாகும்.

## கனடாவில் கள்ளப் பாஸ்போர்ட் உற்பத்தி!

## முன்னாள் போராளிக்கு 15 மாதச் சிறை!!

### போலி என்ற போதும் தரத்தில் உசத்திதான்

**(கனடாவிலிருந்து லியோ-டெ)**



லோகநாதன்

யாழ் நகர மேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவை கொலை செய்தவர்களில் ஒருவர் என்று முன்னர் தேடப்பட்டவர் லோகநாதன் சபாநாயகம் என்னும் மாறன்.

இந்தியாவில் தமிழ் நாட்டில் இருந்து போலிக் கடவுச் சீட்டுக்களை தயாரித்துவந்த மாறன் பின்னர் கனடா சென்றார்.

அங்கு அவருக்கு அகதி என்ற அந்தஸ்த்தும் கிடைத்தது. எனினும் கை சும்மா இருக்கவில்லை. கனடா கடவுச்சீட்டு போன்ற போலிக் கடவுச்சீட்டுக்களை தயாரிக்கத் தொடங்கினார்.

தகவல் அறிந்த கனடியப் பொலிசார் மாறனை மடக்கிப் பிடித்து விசாரித்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள்.

வழக்கை விசாரித்த நீதிபதி லோகநாதன் சபாநாயகம் என்னும் மாறனுக்கு 15 மாதச் சிறைத் தண்டனை வழங்கியுள்ளார்.

நீதிபதி திரு. லூஷியன் பியூலியூ தனது தீர்ப்பின்போது, "தனக்கு அகதி அந்தஸ்து வழங்கிய கனடாவை அவமதிக்கும் விதத்தில் லோகநாதன் நடந்துகொண்டுள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.

அந்த வழக்கில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்த அரச தரப்பு சட்டத்தரணி, கனடாவில் உள்ள ஒன்ராறியோ மாநிலத்தின் தலைநகரில் போலிக் கடவுச் சீட்டுக்கள் தயாரிக்கும் சட்ட விரோத அச்சகங்கள் உண்டு எனவும், அவை அனைத்தும் இலங்கைத் தமிழர்களால் நடத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

அதே சமயம் அந்தப் போலிக் கடவுச் சீட்டுக்களது தரம் மிகச் சிறப்பாக இருப்ப தாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் மேலதிக சிறப்பம்சங்களோடு புதிய வடிவிலான கடவுச்சீட்டை தயாரிக்கும் நிலைக்கு கனடா அரசாங்கம் தள்ளப்பட்டுள்ள தாகவும் அரச தரப்பு சட்டத்தரணியின் அறிக்கை கூறுகிறது.

## சபாநாயகர் யாழ் விஜயம் புலிகள் மீண்டும் ஊர்ஜிதம்!

சபாநாயகர் எம்.எச்.முகமட் ஏப்ரல் முதலாம் திகதி யாழ் வருவார் என்று புலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.

சபாநாயகர் மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்து பேச்சு நடத்துவார் என்றும் அவரோடு மனித உரிமைகள் சங்கத் தலைவர் முஸ்தபா, சபாநாயகரின் தனிச் செயலாளர், மற்றும் உதவியாளர் ஆகியோரும்கூட வருவார்கள் என்றும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது.

சபாநாயகரோடு தொடர்புடைய வட்டாரங்கள் அவரது யாழ் விஜயத்தை மறுக்காத போதும் எப்போது செல்லப் போகிறார் என்பதை அவை உறுதியாகத் தெரிவிக்கவில்லை.

## இந்திய ஜெனரல் புலிகளுக்கு பாராட்டு!

இந்திய அமைதிப்படையில் அதிகாரியாக கடமையாற்றியவர் மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா.

அவர் சமீபத்தில் எழுதிய கட்டுரை ஒன்றில் புலிகள் இயக்கத்தின் கெரில்லா நடவடிக்கைகளை பாராட்டியுள்ளார்.

உலகில் மிகப் பெரிய கெரில்லா இயக்கம் புலிகளே என்றும், உலகின் மிகச் சிறந்த கெரில்லா இயக்கத் தலைவர் பிரபாகரனே என்றும் அவர் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

## பெண் புலிகள் மூவருக்கு மரணதண்டனை!

## தண்டனை தவறு என்று மக்கள் ஆர்ப்பாட்டம்!!

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறையில் புலிகள் அமைப்பின் பெண் உறுப்பினர்கள் மூவருக்கு அந்த அமைப்பினால் பகிரங்க மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெளியார் ஒருவரோடு தொடர்பு வைத்திருந்தார்கள் என்று கூறப்பட்டே தண்டனை வழங்கப்பட்டதாக யாழ்ப்பாணத் திலிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த மூன்று உறுப்பினர்களோடும் தொடர்பு வைத்திருந்த நபருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெண் புலிகளுக்கு தண்டனை வழங்கப் பட்டதற்கு எதிராக வல்வெட்டித்துறையில் பொதுமக்கள் பலர் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### காரைதீவுக்கு தனியான பிரதேச சபை வேண்டும்

"காரைதீவுக்கென்று தனியான பிரதேச சபை வேண்டும் என்று கோரிக்கைக்கு கிடைத்த வெற்றியே தனக்களிக்கப்பட்ட வாக்குகள்" என்று நிந்தவூர் பிரதேச சபையில் சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள திரு. த. தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். "தனியான பிரதேச சபை ஒன்றே தேவை என்பதே காரைதீவு மக்களது மூலாதாரமான பிரச்சனை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

கொழும்புவாழ் நகர வாசிகளின் நலனைக் கருதி ஒவ்வொரு மாதமும் (எம்மாதமும்)
வினோத் இன்
இல.33, மூன்றாவது மாடி
சிறீ குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.
"VINNODH INN"
No. 33. 3rd Floor
Sri Gunanantha Mawatha
Kotahena.

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வழியாவும், ஸ்ரீகுணானந்த மாவத்தை உபதபால் கந்தோர் முன்பாகவும் வீற்றிருக்கும் எமது துர்க்கையம்மனை நாட நினைத்ததை நினைத்தவாறு நினைத்தபோதே எமது மலையாள உச்சாடன பீடத்திற்கு வந்து உங்களுக்கு பில்லியா, சூனியமா, கணவன் மனைவி பிணக்கா, கல்யாணத் தடையா, காதலில் படுதோல்வியா, தீரா நோயா, ஆஸ்துமாவா? வியாபார விருத்தி இல்லையா, பொருளாதாரத் தங்கு தடையா? அச்சொட்டான விதியின் சுவடி ஜாதகங்கள் எதுவானாலும்-

நிர்வாக அமைப்போ ஆலோசனையோ-072-27024
மாந்திரீகக் குரு: 072-26088
வெளிநாட்டுத் தொடர்பு: 078-61933, 052-2508, 052-3093
நிர்வாகக் குழு: 072-27098
கடிதத் தொடர்பு: ஜோதிட மாந்திரீக தத்துவஞானி P.K.சாமி,
தபால் பெட்டி 33, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
நுவரேலியா, சிறி லங்கா

P.K. SAAMY ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

BAJAJ SUPER THREE WHEEL சகல உதிரிப்பாகங்களும் விஷேட கழிவுடன் பெற்றுக்கொள்ள எமது காட்சி அறைக்கு விஜயம் செய்யுங்கள்.
BOSCO
21, FIRST DIVISION, TECHNICAL JUNCTION
MARADANA.
Tel. 445823

### தங்க நகை சேமிப்பு திட்டம்

மாதாந்த ரூபா.150/= திட்டத்தின்கீழ் கடந்த மாதங்களில் ரூபா.3600/= பெறுமதியான தங்க நகைகளைப் பெற்ற அதிஷ்ட சாலிகள். இவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

1st
Miss.Sinnasamy Brinda.
Main Street.
Kandapola.
Date- 14-11-1993.

2nd
Mr.M.Kulandavel
Police Station,
Nuwara Eliya.
Date- 15-12-1993.

3rd
Mrs.R.Jothimalar
Rajah Moters,
Main Street,
Kandapola.
Date-15-01.1994.

4th
Mr.Nissanka Aberathna
No.103 Ruwan Eliya,
Nuwara Eliya.
Date-15-02.1994.

**குறிப்பு:**
மாதாந்த ரூபா 3000த்துக்கான திட்டம் வெகுவிரைவில் ஆரம்பமாக உள்ளது. இத்திட்டத்தில் சேர விரும்புவோர் தாமதியாமல் தொடர்பு கொள்ளவும். பரிசுத் தொகை ரூ.7200/=

**விபரங்களுக்கு:**
SURESH COMBINE
AMUTHA JEWELLERS
NO, 20, DALIY FAIR COM:
NUWARA ELIYA

**விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.**

### முகவர்கள் தேவை

எப்பாவெல, முரிசிக்கண்டி, பலுகஸ்வெவ, ஒபனாயக்க, கோழிபந்தாவ, ஹெட்டிப்பொல, கம்பிரிகஸ்வெவ, யால, கலேன்பிந்தினவெவ, கிரிந்த, இப்பாகமுவ, மஹாகந்தராவ, சீப்புக்குளம், கெப்பிட்டிகொல்லாவ.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு விற்பனை செய்வதற்கு முகவர்கள் கோரப்படுகின்றார்கள். முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

CIRCULATION MANAGER
THINAMURASU
88/14, Somadevi Place,
Kirilapone, Colombo-6.
Phone- 820265

ADVERTISING MANAGER
THINA MURASU
*No. 88/14, Somadevi Place,*
*Kirilapone, Colombo-5*
**Tel: 820265**
விளம்பர மேலாளர்
இல.88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை,
கொழும்பு-05
தொலைபேசி: 820265

### ஆவின் AAVIN

ஐஸ்பழம் - ஐஸ்கிறீம்

தன்னிகரில்லாச் சுவை
இதன் தரத்திற்குமுண்டோ இணை
குழந்தைகள் முதல் பெரியவர்வரை
எவரைக் கேட்பினும் ஒன்றையே
சொல்வர். அது-
ஆவின்...ஆவின்...ஆவின்....
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கிடைக்கும்.
உரிமையாளர்
**எஸ்.யோகநாதன்**
புகையிரத நிலைய வீதி
வவுனியா.

### *ASHMILA GRINDING MILL*

129/58, JAMPETTAH STREET, COLOMBO-13.
TEL: 333330,336169, 071-28505
R.NO.13709-TRADE LICENSE NO: E-MT/TL/DI/8/1262/87

**மகத்தான வரப்பிரசாதம்**

ஏற்றுமதியாளர்களும், உள்ளூர் வியாபாரிகளும், இல்லத்தரசிகளும் நாடவேண்டிய ஒரே இடம்

**அஸ்மிலா கிரைண்டிங் மில்**

குரக்கன், அரிசி, மிளகாய், மஞ்சள், சீரகம், பெ.சீரகம், மிளகு, மாசி, ஒடியல் போன்றவை மிக மிக பரிசுத்தமான முறையில் உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கப்படும். இதைவிட- புகையிலை (மூக்குப்பொடி வகைகள்), ஆயுர்வேத மருத்து வகைகள் அரைத்துப் பொடியாகவும் கோப்பி, சிவப்பு அரிசி வகைகள் வறுத்து அரைத்தும் கொடுக்கப்படும். மற்றும் கோழித்தீன் ஏலவை ஓடரின் பேரில் தயார் செய்யப்படும்.

**விசேட சலுகை**

★ போக்குவரத்து வசதி இனாம். ★ பொருள் பாதுகாப்பிடம் இனாம்
★ இல்லத்தரசிகள் அரைக்கும் பொருட்களைத் தயார் செய்து எமக்கு தொலைபேசியில் அறிவித்தால் போதும்; உங்களிடம் வந்து பொருளைப் பெற்று அரைத்து மீண்டும் உங்கள் இல்லம் சேர்ப்போம் அவற்றை.
**கொழும்பு-01,02,03,04,05,06,11,12,13,14,15 பகுதிகளில் இச்சேவை நடைபெறும்.**


தருவது **அயலகச் செய்திகள்** ஏழுமலை

# அன்று-மசூதி. இன்று-மாதா கோயில்!

## மத வெறி மூலம் ஆதாயம் தேடும் முயற்சிகள்!!

**அரசியல் அழைக்கிறது**

இந்தியாவில் உள்ள இந்து முன்னணி என்னும் அமைப்பு மதவாதத் தின்மூலம் தொடர்ந்தும் பிரச்சனைகளை கிளப்பி வருகிறது.

அயோத்தியில் பாபர் மசூதியில் இராமர் கோயில் கட்டுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் மசூதி இடிப்பில் முடிந்தன.

மசூதி இடிப்புக்கு இந்தியா வெங்கும் பலத்த கண்டனங்களும் எழுந்தன.

அயோத்தி பிரச்சனை இன்னும் தீர்ந்தபாடில்லை. நீறு பூத்த நெருப்பாக இருக்கிறது.

இதற்கிடையே பாண்டிச்சேரியில் உள்ள மாதா கோயில் மீது இந்து முன்னணியின் பார்வை பட்டு விட்டது.

பாண்டிச்சேரியில் ஜென்மராகினி மாதா கோவில் (சம்பா கோவில்) உள்ளது. இந்தக் கோவில் இருந்த இடத்தில் முன்பு சம்பாலீசுவரர் கோவில் இருந்ததாகவும், எனவே தாம் அங்கு போய் கற்பூரம் கொளுத்தி ஆராதனை செய்யப் போவதாகவும் இந்து முன்னணியினர் அறிவித்தனர்.



பிரபல கொள்ளைக்காரி பூலான்தேவி விடுதலையானபோது பார்வையாளர்களுக்கு கையசைக்கும் காட்சி. அரசியல் கட்சிகள் சில அவரை தம்மோடு இணைய அழைப்பு விடுத்துள்ளன. யோசிக்கலாம் என்கிறார்.

அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ மதத் தலைவர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. உடனே நடவடிக்கையில் இறங்கிய பாண்டிச்சேரி மாநில அரசு கோவிலைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போட்டது. இந்து முன்னணித் தலைவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

தற்போது இந்து முன்னணியினர் கற்பூரம் கொளுத்தும் திட்டத்தை ஒத்தி வைத்துள்ளதாக அறிவித்துள்ளனர். ஆயினும் மாதா கோவிலைச் சுற்றி துப்பாக்கி ஏந்திய இராணுவப் பிரிவு பொலிசார் காவல் காத்து வருகின்றனர்.

## முரசு சுட்டிக்காட்டிய குறை தீர்ந்தது
## மறுபடியும் நூலகம் சொந்தக் கட்டிடத்தில்!

**(திருகோணமலை நிருபர்)**



திருகோணமலை பொது நூலகக் கட்டிடம் திரும்பவும் நூலகத்துக்காக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து தனியார் வீட்டில் குடியிருந்த நூலகப் புத்தகங்கள் தளபாடங்கள் என்பன சொந்தக் கட்டிடத்துக்கே திரும்பவும் கொண்டு வரப்படும் காட்சியே இது.

நகராட்சி மன்றச் செயலாளர் திரு.பொ.ஜெகதீஸ்வரனின் அயராத முயற்சியின் பலனாகவே மாகாண அரசு வசமிருந்த கட்டிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந் நூலகத்தின் அவல நிலை பற்றி முரசு ஏற்கனவே படத்துடன் செய்தி வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### புகார் பெட்டி

## எந்நேரமும்-ஏழு இருபது

மட்டக்களப்பு நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள கடிகார முட்கள் எந்த வேளையிலும் ஏழு- இருபது (ஏழுமணி இருபது நிமிடம்) என்றே காட்டி நிற்கின்றன. காலையில் வேலைக்குச் செல்பவர்கள் சிலவேளை இம்மணிக்கூட்டைப் பார்த்துவிட்டு பதறியடித்துக்கொண்டு செல்கின்றனர். மேலும் இம்மணிக்கூடு திருத்தப்பட்டு ஒராண்டு கூடச் செல்லாத நிலையில் அது பழுதடைந்துள்ளது.

சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் இக்குறையை நிவர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகின்றேன்.

ஏ.ச்.வசந்தி-மட்டக்களப்பு.

## நடக்கவும் தடுக்கும் கற்கள்!

குறுமண்வெளி, மகிழூர்ஆகிய இரண்டு கிராமங்களையும் இணைக்கும் ஒரே பிரதான வீதி பல ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது.

இவ்வீதி வெள்ளத்தினாலும், வேறு காரணங்களாலும் அழிவுற்று தற்போது தார் இன்றி கற்களை மட்டுமே கொண்டுள்ளது. பாரிய வாகனங்கள் செல்வதும் தடைப்பட்டு இருப்பதுடன், சைக்கிளில் செல்பவர்கள்கூட மிகவும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி யிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் நடந்து செல்லும் பிரயாணிகள்கூட கற்கள் குத்துவதால் மிகமிக சிரமம் அடைகின்றனர்.

எனவே இவ்வீதியின் அவல நிலை தொடரால் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்திற் கொண்டு இவ் வீதியை திருத்தியமைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

சீ.ரவீந்திரன்
குறுமண்வெளி-11

**அவலங்கள் தீருமா?**

## மூதூர் அரச வைத்தியசாலையில் அவதி!
## மருந்துத் தட்டுப்பாட்டால் நோயாளிகள் தவிப்பு!!

மூதூர் பகுதி போக்குவரத்து முதற்க் கொண்டு சகல வகைகளிலும் பின் தங்கியதாகும். இங்குள்ள அரசினர் வைத்தியசாலையில், மூதூரின் பரந்துபட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மருந்து பெற்று வருகின்றனர். இங்கு அடிக்கடி நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டால் கஷ்ட நிலையில் வாழும் நோயாளர்கள் உரிய நோய்க்கான மருந்தின்றி அவதியுறுகின்றனர். இவ் வைத்தியசாலையை விட்டால் கடல் கடந்து திருமலைக்கே செல்லவேண்டும்.

கடந்த வாரத்தில் ஒருநாள் வயிற் றோட்டம், வாந்தி காரணமாக சம்பூர் கிராமத்திலிருந்து ஒரு நோயாளர் இங்கு அனுமதிக்கப்பட்டார். இவருக்கு "சேலைன்" பாய்ச்ச வேண்டும் இதற்கான 'பைப்பு' எம்மிடமில்லை வாங்கி வாருங்கள்." எனத் தெரிவிக்கப்படவே மூதூரிலுள்ள மருந்துக் கடை இரண்டிலும் கிடைக்கவில்லை. திருமலை சென்று வாங்கி வருவதானாலும் ஒரு நாள் பொழுது போய்விடும்.

இந்நிலையில் இது போன்ற நோயாளர்களின் நிலை என்ன? சம்பந்தப்பட்ட சுகாதாரப் பகுதியினர் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழும் மக்களது துயர் துடைக்க ஆவன மேற்கொள்வார்கள் எனத் தினமுரசு மூலம் கோருகின்றேன்.

எஸ். சண்முகநாதன்
தலைவர்,கிராமோதய சபை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

—நாரதர்

# அமைச்சர் சிறிசேனகுரே கூறியது மெய்!

## பெண் புலிகள் ஏற்படுத்தும் மாற்றங்கள்

அமைச்சர் சிறிசேன குரே ஜோக்குகள் சொல்லி சிரிக்க வைப்பதில் ஆர்வமுள்ளவரோ என்று தெரியவில்லை.

ஆனால், கிழக்கிலும், வவுனியாவிலும் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் சுயேச்சையாக போட்டியிட்டவர்களும் நம்மவர்களே. அவர்களுக்கு கிடைத்த வாக்குகளும் ஐ.தே.கட்சிக்கு கிடைத்த வாக்குகளே என்று அவர் சொன்னது நிச்சயமாக ஜோக் அல்ல.

யாரையும் சிரிக்கவைப்பதற்காக அவர் அப்படிச் சொல்லவில்லை.

தனியாக கடை விரித்து ஓரளவு வருமானம் கிடைத்தவுடன், அதனையே ஒரு முதலீடாக வைத்து மேலும் வருமானத்தை பெருக்கிக் கொள்ள சுயேச்சைகள் அங்கு வருவார்கள் என்று தெரிந்துதான் பேசியிருக்கிறார்.

திருவிழாவுக்கு கடை விரித்தால் ஏட்டிக்குப் போட்டியாக கூவித்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் யாரும் கவனிக்க மாட்டார்கள். வியாபாரம் படுத்துவிடும்.

விளம்பரம் என்றால் நூறுசதவீதமான உண்மையை எதிர்ப்பார்ப்பது முட்டாள் தனம். இல்லை நூறு சதவீதம் உண்மைதான் என்று யாரும் நம்பிக்கைகொண்டிருந்தால் அவர்கள் முட்டாள்களாகவே இருக்கவும் முழுச் சுதந்திரம் உண்டு.

துரதிஷ்டவசமாக நம் மக்களில் ஒரு பகுதியினர் அப்படித்தான் இருக்கிறார்களோ என்று யோசிக்கத் தோன்றுகிறது.

ஆளும் கட்சிக்கு எதிரான கோசங்களை கவனித்த அளவுக்கு, அப்படிக் கோசம் போட்டவர்களை யார் எவர் என்று கவனிக்கத் தவறிவிட்டார்கள்.

ஏறாவூரில் சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள் ஆளும் கட்சியின் தலைமை இருந்த இடம் தேடி, விரைந்து போய் கலந்துவிட்டார்கள்.

வாக்களித்தவர்களின் கட்டை விரல் மை காயுமுன்னரே அவர்களது வாக்குகளை பெற்றவர்கள் ஆளும் கட்சியின் பக்கம் பாய்ந்துவிட்டார்கள்.

அத்தனை அவசரம். திட்டவட்டமான முடிவோடுதான் தேர்தலில் போட்டியிட்டிருக்கிறார்கள். வெறுங்கையோடு போனால் மரியாதை இல்லை என்று வெற்றிக் கனியோடு போய்ச் சேருவதற்கு நினைத்திருக்கிறார்கள். சாதித்து விட்டார்கள்.

மட்டக்களப்பு மாநகர சபையிலே ஈரோஸ் என்ற பெயரிலே தேர்தலில் போட்டியிட்டது ஒரு குழு.

தேர்தல் சமயத்தில் இவர்களும் ஈரோஸ்தானா என்று சந்தேகம் எழுப்பப் பட அந்த குழுவுக்கு பயங்கரமான கோபம் வந்துவிட்டது.

உடனே ஒரு பிரசுரம் அடித்து வெளியிட்டார்கள்.

அந்தப் பிரசுரத்தில் இருந்த துடிப்பான வாசகங்களில் சிலவற்றை நினைவு படுத்துவது நல்லது.

"தமிழ் மக்கள் குருவிச்சையல்ல, பூவரசு என்பதை நிரூபிக்க வேண்டாமா?"

"எமது பிரச்சனைதான். இனப் பிரச்சனைதான் என்று அறைந்து கூற வேண்டாமா?"

"துரோகமிழைக்கும் தலைமைகளை தமிழர்கள் துரத்தவே செய்வார்கள் என்று உலகுக்கு தூதனுப்ப வேண்டாமா?"

"எமது தமிழ் பெண்களை கடித்துக் குதறி கற்பழித்து, சின்னாபின்னப் படுத்தியவர்களுக்கு போராட்டத்தின் புத்திரர்களை காட்டிக்கொடுக்காத நிமிர்ந்த நெஞ்சங்களுக்கு சொந்தக்காரர்கள்தான் இந்த ஈரோஸ்."

வாசிக்கும் போதே உணர்ச்சி கொந்தளிக்கிறதல்லவா? அவ்வாறு உணர்ச்சி வசப்பட்டு வாக்காளர்களில் ஒரு பகுதியினரும் வாக்களித்துத் தொலைத்துவிட்டார்கள்.

மட்டக்களப்பிலே யாருடைய தயவில் இருந்தபடி அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்?

'இந்த முன்னாள் "போராளிகளின்' இந்நாள் உறவுகள் என்ன? என்பதையெல்லாம் யோசிக்காமல்- சீர்தூக்கிப் பார்க்காமல் புள்ளடியைத் தூக்கிப் போட்டுவிட்டார்கள்.

பொய் சொல்லாமல், புல்லரிக்க வைக்கும் வசனம் பேசாமல், "நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள்தான்" என்று தேர்தலில் நின்றவர்கள் "இந்த புரட்சிகரத்" தமிழர்களை விட மேலானவர்கள் என்றுதான் படுகிறது.

இப்போது மட்டக்களப்பு மாநகர சபையில் அதிகாரத்தை பிடிக்க உதவுவதாகக் கூறி மக்கள் தமக்கிட்ட புள்ளடிகளை வைத்து பேரம் நடத்துகிறார்கள்.

காட்டிக்கொடுக்கும் வீரர்கள் என்று

ஏனைய தமிழ் அமைப்புக்களைப் பற்றி பிரசுரத்தில் எழுதிய கைகள் இப்போது யார் நோட்டுக்களை நீட்டுவார்கள் என்று கை நீட்டிக்கொண்டிருக்கின்றன.

இனி அதற்கும் "புரட்சிகர தத்துவ" விளக்கம் சொல்வார்கள்.

இனப்பிரச்சனைதான் என்று அறைந்து கூறச் சொன்னார்கள். மக்களும் நம்பி வாக்குப் போட்டார்கள். அந்த வாக்குகளை எண்ணிப் பார்த்தபோது வெற்றி கிடைத்தது. உடனடியாகவே தமது சொந்த எதிர் காலத்தை எண்ணிப்பார்த்து பைகளை நிரப்ப தயாராகிவிட்டார்கள்.

தேர்தல் சமயத்தின் போதே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் இவர்களது போலித் தனங்களை சுட்டிக்காட்டியிருந்தோம். எந்தவொரு தமிழ் அமைப்பு மீதும் சொந்த விரோதம் கொண்டல்ல, நொந்து போயுள்ள மக்கள் மேலும் மேலும் சுலபமாக ஏமாற்றப்படுகிறார்களே என்ற ஆதங்கத்தில் தான், வெற்று முழக்கங்களை விமர்சன வெளிச்சத்தில் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

■

சொல்வதை செய்ய வேண்டும். செய்வதை சொல்லவேண்டும் என்றால் என்ன சொல்லுகிறோம் என்று தெரிந்து சொல்ல வேண்டும். சொல்வதற்கு முன்னர் இதை நம்மால் செய்ய முடியுமா? என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

இங்கே தமிழ் அமைப்புக்கள் பல



தம்மை புரட்சிகரமானவையாக காட்டிக் கொள்வதற்காகவே எடுத்து வீசிய சொற் தொடர்கள் ஏராளம்.

அதில் ஒன்றுதான் பெண் விடுதலை. இயக்கத்திற்கு ஆட்கள் தேவைப்பட்டபோது பெண்ணே எழு! வீட்டுச் சிறையை உடை! தகர்! உடனே வா! ஆயுதம் சும்மா கிடக்கிறது.



எடுத்துக் கொண்டுபோய் சுடு என்ற ரீதியில் எல்லாம் பேசினார்கள்.

பெண் விடுதலை என்பது அவள் கையில் ஆயுதம் கொடுத்து படம்பிடித்து, தங்கள் இயக்க வெளியீட்டில் பிரசுரிப்பதோடு சரி என்றே ஒரு எண்ணம் இருந்திருக்கிறது.

ஒரு இயக்கம் பெண்களுக்காக என்று ஒரு சஞ்சிகை வெளியிட்டால், மற்றொரு இயக்கமும் உடனே ஒரு சஞ்சிகை வெளியிட்டுவிடும்.

எங்களிடமும் பெண்கள் இருக்கிறார்கள் என்று காட்டவேண்டாமா? நீ இரண்டு பெண்களை ஆயுதத்தோடு படமாகப் போட்டால் நாங்கள் நாலு பெண்களை ஆயுதத்தோடு போடுவோம்.

"என்ன? உங்கள் இயக்கத்தில் மட்டுமா பெண்கள் இருக்கிறார்கள்? உது நல்ல பகிடி. எங்கள் இயக்கத்தில் மத்திய குழுவிலும் பெண்கள் இருக்கிறார்கள் தெரியுமோ?"

துரதிஷ்டவசமாக இப்படித்தான் பெண் விடுதலை பேசி இயக்கங்கள் சில பிளந்து கட்டிக்கொண்டிருந்தன.

இன்னொரு' விசயமும் இருக்கிறது. அவ்வாறு அந்த இயக்கங்களில் இருந்த பெண்கள் பலரும் பெண் விடுதலை பற்றி மூச்சு முட்ட பேசத் தெரிந்தவர்களாக இருந்தார்களே தவிர செயல் வீச்சுக் கொண்டவர்களாக இருக்கவில்லை.

ஆண் ஆதிக்கம் ஒழிக என்றதோடு சரி. புலிகள் அமைப்பை பொறுத்த வரையிலும் ஆரம்பத்தில் பெண்களைப் பற்றிய தவறான மதிப்பீடுகளே இருந்தன.

எனினும்- ஆட்கள் தேவை என்ற நிலையும் புலிகள் அமைப்பிலும் பெண்கள் பிரிவை உருவாக்கியது.

தற்போது இராணுவ நடவடிக்கைகளில் பிரதான பங்கு வகிக்கும் அளவுக்கு பெண்கள் பிரிவு விரிவாகியிருக்கிறது.

பெண்களின் பங்கு இயக்கத்தில் அதிகரித்துவிட்டமையால், பெண்களின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பெண்கள் துன்புறுத்தப்படுதலுக்கு எதிராக புலிகள் அமைப்பிலுள்ள பெண்களே நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளார்கள்.

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விடுமுறை தினம் அறிவித்தார்கள். இயக்கத்தில் அதிகரித்து வரும் பெண்களுக்கான முக்கியத்துவத்தை அது வெளிப்படுத்துகிறது.

பெண்களை கொடுமைப்படுத்தல், பாலியல் ரீதியான வதைகள் பற்றியெல்லாம் உளப்பூர்வமான அக்கறைப் படாமல் சமூகம் மாறினால் எல்லாம் சரியாகிவிடும் என்று சமாதானம் சொல்லப்பட்டது. இந்தச் சமூகத்தில் இப்படித்தான் நடக்கும் என்று நியாயமும் கூறப்பட்டது.

இப்போது நிலமை மாறிவிட்டது. ஏனைய இயக்கங்கள் தொடுவதற்கு பயந்த பல்வேறு பிரச்சனைகளில் புலிகள் அமைப்பின் பெண்கள் பிரிவு அக்கறை காட்டுகிறது.

சீதனத் தடையும் கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

சீதனம் கொடுப்பதற்கு வசதியுள்ளவர்கள் கவலைப்படாமல் இருக்கலாம். ஆனால் சீதனப் பிரச்சனையால் தினமும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பவர்கள் பாராட்டவே செய்வர்.

சீதனத்தை முற்றாக ஒழிக்க முடியுமா என்பது கேள்விக்குரியதுதான். சீதனம் கொடுக்க வசதியுள்ளவர்கள் அதனை வேறு முறைகளில், வேறு பெயர்களில் கொடுக்கக்கூடும்.

எனினும் சந்தையிலே மாடு வியாபாரம் செய்வது போன்ற பேரம் பேசுதல்களுக்கு புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இனி முடியாமல் போகும்.

ஆயுத அதிகாரத்தை புலிகள் தவறான திசைகளில், தவறான நோக்கத்தில் பயன்படுத்தும் போது அதனை கண்டிக்கவே வேண்டும்.

அவ்வாறு பயன்படுத்தியும் இருக்கிறார்கள். இன்றைய யுத்தத்தில் கூட புலிகளது ஆயுத பலம் என்பது அவர்களது

"நாம் மட்டுமே ஏகப் பிரதிநிதிகள்" என்ற முழக்கத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

மக்களது விருப்பத்தை மீறி தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களை துப்பாக்கிக் குழாய்கள் மூலம் திணிக்கவும் முற்படுகிறார்கள்.

அதற்காக புலிகள் அமைப்பு முன்னெடுக்கக்கூடிய சமூகக் கொடுமைகளுக்கு எதிரான செயற்பாடுகளை ஒதுக்கித் தள்ள முடியாது.

புலிகளும் சொல்வதையெல்லாம் செய்யாமல் இருக்கலாம். செய்வதையெல்லாம் சொல்லாமல் மறைக்கலாம். மறைத்தும் வருகிறார்கள்.

ஆனால் சொன்னவற்றில் அவர்கள் செய்யும் நல்லவற்றை வரவேற்கலாம்.

அதன் அர்த்தம் புலிகள் செய்வதையெல்லாம் கண்மூடிக்கொண்டு ஆதரிப்பதாகிவிடாது. ■

## அதிரடி அய்யாத்துரை



கிழக்கிலை ரெண்டு எழுத்துக்காரரின் தலைவரின் பெயரிலை கேட்டவரின் தலைமையில் உள்ள குழுவினருக்கு லைன் கிளியர். பச்சைக் கொடி காட்டியாச்சுதாம். என்ன மாதிரியெல்லாம் பிரச்சாரம் செய்தவை தெரியுமோ? இப்ப பாருங்கோ வாக்குப் போட்ட வைக்கும் டாட்டா. தாங்கள் வசைபாடிப் பிரச்சாரம் செய்தவைக்குப் போடுகினம் ஜாலரா. பாவம் மக்கள்.

ரெண்டு எழுத்தார் தங்கடை முன்னாள் பிரதியாரைப் போடுறதுக்கு வல்லைக் கடலிலை ஒரு கப்பல் மாதிரி செய்து கொண்டுவந்து ரெடியாய் இருந்தவையாம். அதுக்குள்ளை வைச்சுப் போட்டாத்தான் கடலிலை மாண்டுபோன முன்னாள் யாழ் தளபதிக்கு அஞ்சலி மாதிரி இருக்கும். சனத்தின்ரை நெஞ்சையும் தொடும் எண்டு திட்டமாம். பிறகு என்ன நினைச்சாரோ தலைவர், திட்டம் கைவிடப்பட்டுவிட்டதாம்.

பல்லு வைத்தியம் பார்க்கிறதெண்டா இனி எங்கடை மக்கள் கட்டாயம் சிங்களம் படிக்க வேணும். இல்லாட்டி பல்லைக் காட்டிக்கொண்டு நிக்க வேண்டியதுதானுங்கோ. ஏன் எண்டு கேக்கிறியளோ. இந்த முறை பல்லு வைத்தியத்துறைக்கு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவையிலை தமிழர் ஒன்றே ஒன்று கண்ணே கண்ணுதான். இப்ப விசயம் விளங்குதோ?

சபை நடுவர் வடக்கே சென்றே தீருவேன் என்று சபதம் மாதிரிப் பேசுறார் பாருங்கோ. அவற்றை நோக்கம் மெத்த நல்லது. ஆனாப் பாருங்கோ வென்றே தீருவாரோ எண்டதுதானே உதைக்குது.

கிழக்குத் தலைமையை தங்கடை கையிலை சனம் தந்திட்டுது எண்டமாதிரி கொழும்பிலை இருந்து தமிழ் இயக்க தலைவர் ஒருவர் அறிக்கை விட்டவர். ஆனால் அந்த இயக்கத்தின் பெயரையே பாவிக்காமல் தன்ர தனிப்பட்ட செல்வாக்கிலை வென்று காட்டின அந்த இயக்க முன்னாள் செயலரான நாடாளும் சபை உறுப்பினர் என்ன நினைக்கிறார் தெரியுமோ? அடுத்த பொதுத் தேர்தலிலை சுயேச்சையாகவே நிக்கப் போறாராம். உள்ளூராட்சி தேர்தல் சமயத்திலை அந்த இயக்க முக்கியஸ்தர் சிலர் பிரச்சாரம் செய்ய வரலாமோ எண்டு கேட்டவையாம். வேண்டவே வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டாராம். பிரசுரங்களிலையும் தன்ரை படம் மட்டும் போட்டுத்தான் தனக்காக வாக்குப் போடச்சொல்லிக் கேட்டவர். தப்பித் தவறிக்கூட இயக்கப் பெயரை போடவேயில்லை.ஆனா வெற்றிக்கு சிலர் கொழும்பிலையிருந்து உரிமை கோருகினம். அதுதானுங்கோ பகிடி.

கனடாவிலை பிள்ளைக்கு பெற்றோர் ஒரு தட்டுத் தட்டினாலே போதும். பிள்ளைக்கு கோபம் வந்துதெண்டு வையுங்கோ ஒரு ரெலிபோன் கோல். உடனை பொலிஸ் வந்து அப்பாவை அள்ளிக்கொண்டு போயிடும். இதாலை எங்கட சனம் வெறுத்துப்போய் இருக்குது. பாதிக்கப்பட்ட...ஒரு தந்தை மகனோடை சமரசம் ஆகி, இந்தியாவுக்கு கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார். தமிழ்நாடு விமான நிலையத்திலை தரித்தவுடனை மகன்ரை கன்னத்திலை பளார், பளார். "ஏன் அப்பா அடிக்கிறியள்?" கொலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு தந்தை சொன்னாராம். "இப்ப எடடா பார்ப்பம் ரெலிபோன் கோல்!" சத்தியமா நடந்த கதை. பெற்றோர் பலர் பிள்ளையளைக் கொண்டுவந்து இந்தியாவிலை படிக்கவிட்டு போயினம். கலாசார மாற்றங்கள் பிரச்சனை பண்ணும்தானே.

தொலைக்காட்சிகளில் தமிழ் நிகழ்ச்சிகள் குறைவு எண்டு ஏற்கனவே பெரியகுறைபாருங்கோ. அதை விளங்காமல் ஏற்கனவே போட்ட இன்னொரு நிலையத்தார் போட்ட படத்தையே மற்றொரு நிலையத்தாரும் போட்டு வயிற்றெரிச்சலை கிளப்பாமல் இருக்கலாம்தானே. சமீபத்திலை 'நடிகன்' படம். அதை சகல தொலைக்காட்சி நிலையத்தாரும் போட்டிட்டினம். தமிழ் படங்களுக்கு பஞ்சம் எண்டு யாரோ அவைக்கு பொய் சொல்லிப் போட்டினமாக்கும்.

சோகத்தையும் நயமாய் சொன்னால் அதுதான் கவித்துவம். புதுக்கவிதை எண்டா அதில ஒரு சுருக்கமும், வார்த்தைகளில் மனதில் தைக்கிற மாதிரியான தாக்கமும் இருக்கவேணும். பெண்ணின் சோகத்தை சொல்ல புதுக்கவிதை ஒண்டு.

"இசைக்க வேண்டிய
சுதந்திர வீணை
சுமக்க வேண்டிய
சிலுவையாய்ப் போனது"

இதை எழுதினது நிர்மலா சுரேஷ். அயல்நாடுதான்- தமிழ்நாடு.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அடிபட்டுக்கொண்ட நாடுகள் அணைத்துக் கொள்கின்றன!

## படை அனுப்பிய நாடு கடை போடுகிறது!



1968ல் வியட்நாமுக்கு எதிராக போர் முனையில் அமெரிக்கப் படை

முப்பது வருடத்திற்கு முன்னர் போரிட்டு இரத்தம் சிந்திக் கொண்டிருந்தார்கள்.

இன்று கைகுலுக்கி கட்டியணைத்து முத்தம் கொடுக்குமளவுக்கு நெருங்கிக்கெண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க, வியட்நாம் நாடுகள் வர்த்தக உறவுகளை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளதைத் தான் கூறுகிறோம்.

1964ல் வியட்நாம் மீது அமெரிக்கத் துருப்புக்கள் மூர்க்கமாய் இறங்கின.

மலையென உறுதியாய் எதிர்த்து நின்று வீரக் கவிதையாய் வெற்றிச் சரித்திரம் படைத்தது வியட்நாம். ஹோ-சி.மின் தலைமையில் சோஷலிச அரசு உதயமானது. போரில் வெல்ல முடியாத அமெரிக்கா வியட்நாம் மீது பொருளாதாரத் தடை விதித்தது.

ஏழை விவசாயிகளை கொண்ட வியட்நாம் மிகப் பெரிய வல்லரசின் சவாலை எதிர்கொண்டு தாக்குப்பிடித்து நின்றது.

அமெரிக்க- வியட்நாம் போரில் அமெரிக்க தரப்பில் 58 ஆயிரம் போர் வீரர்கள் மாண்டுபோனார்கள். அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் சொல்வது போல், "எங்கள் தலைமுறைக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த யுத்தத்தில் செத்தவர்களில் குறைந்த பட்சம் ஒருவரையாவது தனிப்பட்ட முறையில் தெரிந்திருக்கும்."

இன்னமும் அன்றைய போரின் தாக்கங்கள் மறையவில்லை.

இப்போதுகூட அமெரிக்க- வியட்நாம் போரை சித்தரிக்கும் திரைப்படங்கள் ஹொலிவூட்டில் எடுக்கப்படுகின்றன. அந்தப் படங்களில் சில மிகையான கற்பனைகள். அமெரிக்கா வியட்நாமில் பட்ட காயத்தை ஆற்றுவதுபோல் அமெரிக்க வீரர்களின் சாகசங்கள் என்று அதிகளவான கற்பனை கலந்த படங்கள்.

பட்ட காயத்தை படங்களா ஆற்றும்? உண்மை உலகுக்கு தெரியும். அடிபட்ட அமெரிக்காவுக்கும் தெரியும்.

இப்போது உலகின் முகம் மாறிவருகிறது. பல்லை இறுகக் கடித்துக்கொண்டு போர் ஒன்றே தீர்வு என்று சொல்வது ஒத்துவராது. போரிடும் எண்ணம் இருந்தால்கூட வெளியே புன்னகைத்தபடி நட்புக்கு தயார் என்று இதமாகப் பேசாவிட்டால் உலகம் உதைக்க வரும்.

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் இளம் தலைவர். முட்களைவிட பூக்களை இரசிக்கத் தெரிந்தவர்.

வியட்நாம் மீதும் பொருளாதாரத் தடை என்று பேசி முட்களை வீசிக்கொண்டிருக்காமல் தடை நீக்கம் என்று பூத்தூவியிருக்கிறார்.

கிளின்ரனின் பொருளாதாரத் தடை நீக்கத்துக்கு அமெரிக்காவில் வரவேற்பும் உண்டு. வலிய எதிர்ப்பும் உண்டு.

வியட்நாம் போரில் காணாமல் போன அமெரிக்க வீரர்கள் எங்கே என்று வியட்நாம் சொல்லும்வரை அதனோடு நட்பு என்ற சொல்லுக்கே இடமில்லை என்பது எதிர்ப்பாளரின் வாதம். 2238 பேரைக் காணவில்லை. என்பது புள்ளி விபரம்.

அப்படி யாரும் எம்மிடமில்லை என்று கைவிரிக்கிறது வியட்நாம்.

வியட்நாம் சொல்வதில் உண்மை இருக்கலாம் என்று கிளின்ரன் நினைத்தாலும் அதை வெளியே சொல்ல முடியாது.

அமெரிக்க நலனை விட்டுக்கொடுக்கிறார் என்று எதிர்ப்பாளர்கள் வெகுண்டெழுவார்கள்.

எனவே கிளின்ரன் புத்திசாலித்தனமாக ஒரு அறிவிப்புச் செய்தார்.

"தடையைத்தான் நீக்கியிருக்கிறோம். உறவை ஏற்படுத்தவில்லை" என்கிறார். அதோடு இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார், "காணாமல் போனோர் பற்றிய விபரங்களை திரட்டவும் இந்த நடவடிக்கை உதவும். அதுதான் நோக்கம். வியாபாரம் செய்து இலாபம் குவிப்பது நோக்கமல்ல." என்கிறார். ஆனால் அமெரிக்காவில் உள்ள பெரிய வர்த்தக நிறுவனங்கள் தடை நீக்கத்துக்கு முக்கிய காரணம் என்பதே உண்மை. வருடத்திற்கு எண்ணூறு கோடி டொலர்கள் வியட்நாமில் செய்யப்போகும் வியாபாரத்தில் வருமானமாய் குவியும். விடுவார்களா அவர்கள்! கிளின்ரனை நெருக்கி தடையை நீக்க வைத்துவிட்டார்கள். சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

தடை நீக்க அறிவித்தல் வந்த சூட்டோடு வியட்நாமில் 34 அமெரிக்க கம்பனிகள் அலுவலகங்களை திறந்துவிட்டன. விமான சேவையும் நடக்கப் போகிறது.

வியட்நாமுக்கும் அந்நிய முதலீடு தேவைப் படுகிறது. சோவியத் யூனியன் இருந்தவரை வியட்நாமுக்கு கைகொடுத்தது. இப்போது சோவியத் யூனியன் தூள்.தூள்.

இன்னொரு விசயமும் உண்டு. வியட்நாமுக்கு அருகில் உள்ள கடலில் பெற்றோல் இருக்கிறது. அக் கடலில் ஒரு பகுதி சீனாவுக்கு உரியது.

அமெரிக்காவுக்கு அந்தப் பெற்றோல் மீதும் பிரியம் உண்டு. எனவே 'உறவுக்கு கை கொடுப்போம், பகைமைக்கு விடை கொடுப்போம்' என்று அமெரிக்கா கரம் நீட்டுகிறது. உதவி தேவை என்பதால் வியட்நாமும் அந்தக் கரத்தை பற்றிக்கொண்டு, 'உள்ளே வா' என்று உத்தரவு கொடுத்துவிட்டது.

வியட்நாமில் போரிட்டு மார்பிலே குண்டு பாய்ந்து இடது புறம் செயலிழந்த அமெரிக்க வீரர் ஒருவர் வர்த்தக தடை நீக்கத்தை வரவேற்றுள்ளார்.

சமாதானத்தை விரும்பும் முன்னாள் இராணுவத்தினர் என்ற அமைப்பும் வரவேற்றுள்ளது. அதன் தலைவர்.ஜிம் கிரோவன், வியட்நாம் போரில் பங்கு கொண்டவர். அவர் என்ன சொல்கிறார் தெரியுமோ?

"அவசியமே இல்லாமல் அங்கே போய் சண்டை போட்டோம். சரி நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனிமேலாவது புத்தியோடு நடந்து கொண்டால் சரி." ஜிம் கிரோவன் கூறுவது அமெரிக்காவுக்கு மட்டும்தான் பொருந்துமா என்ன?

போரிட்டவர்கள் புன்னகைகளை பரிமாறும் போது, போரிட்டு இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று வரிந்துகட்டி நிற்கும் நம்நாட்டு நிலவரங்களுக்கும் பொருந்தும்!



### சோகச சுமை!

சூடானில் உள்நாட்டுப் போர் தொடர் சோகம் மக்கள் விடுதலைப் படையை ஒழித்துப்போட சூடான் அரச படைகள் குண்டு பொழிந்து கொண்டிருக்கின்றன. படுகளமாய் மாறிவிட்ட நாட்டில் பட்டினியால் எலும்பும் தோலுமான மக்கள். ஒரு பருக்கை சோறுகூட இல்லை. பசியால் வாடும் பிள்ளையை தோளில் சுமந்தபடி உதவி மையத்தை நோக்கி தள்ளாடிச் செல்லும் தாய் இவள். போருக்கு இதயமே இல்லை. துளிகூட இரக்கமும் இல்லை.

## மீண்டும் ஒரு 'நறுக்'

அமெரிக்காவில் ஆரம்பித்த 'நறுக்' விவகாரம் இப்போது வேகமாகப் பரவி வருகிறது.

தென்கொரியாவில் கடந்த இரு மாதங்களில் இரண்டு பேர் ஆணுறுப்பு துண்டிக்கப்பட்டனர். துண்டித்தவர்கள் அவர்களது மனைவி அல்லது காதலியாக இருக்கலாம் என்பது பொலிசின் கருத்து.

இப்போது பங்களாதேசிலும் ஒரு நறுக், நறுக்.

பங்களாதேஷின் தென்கிழக்கு மாவட்டமான நவகாளியில் சவுதலா கிராமத்தைச் சேர்ந்த பெண் நூர்ஜகான்.

கடந்த மாதம் 20ம் திகதி பிரபல ரவுடி சலாவுதீன் மற்றும் சிலரோடு அவரது வீட்டுக்குள் புகுந்தனர். சலாவுதீன் நூர்ஜகானைப் பலாத்காரம் செய்தான்.

சலாவுதீனைப் பழிவாங்க நினைத்த நூர்ஜகான் மறுநாளும் அவள் வீடுதேடி வந்த போது விழுந்து விழுந்து உபசரித்தாள். போதை தலைக்கேறிய சலாவுதீன் மயக்கமானான்.

அதுதான் சமயம் என்று தீர்மானித்த நூர்ஜான் ஒரே நறுக்.

அதனை அறிந்த சலாவுதீனின் கூட்டாளிகள் அவனைத் தூக்கிச்சென்று வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். கையோடு நறுக்கப்பட்ட உறுப்பையும் மறக்காமல் கொண்டு சென்றனர்.

## போலி நீதிபதியின் நாடகம்! சுவாரசியமான சுருட்டல்!

வட கிழக்கு ஆபிரிக்காவில் இருக்கிறது சூடான். அங்கு நடந்துள்ளது சுவாரசியமான மோசடி.

சூடானில் உள்ளது ஓம்படா என்ற பகுதி. அது ஒதுக்குப் புறமான பகுதியும் கூட. அங்கு ஒரு நபர் வந்தான். சட்ட அமைச்சகம் வழங்கிய நீதிபதிக்கான அடையாள அட்டையை அதிகாரிகளுக்குக் காட்டினான். அவர்களும் நம்பிவிட்டார்கள்.

நீதிமன்றத்தில் நீதிபதி ஆசனத்தில் அமர்ந்தான். வழக்குகளை வேகமாக விசாரித்து உடனடியாகவே தீர்ப்பு.

"அடடா சுறுசுறுப்பான நீதிபதியல்லவோ இவர்" என்று சிலர் பாராட்டவும் செய்தனர்.

ஆனால் அவன் அளித்த தீர்ப்புக்கள் எல்லாம் அபராதங்கள் தான். ஊழியர்கள் இல்லாத போது, தானே நேரடியாக அபராதப் பணத்தை வாங்கிக்கொண்டான்.

இப்படியே இருவாரம் நீதிமன்றத்தை நடத்தி 50க்கும் அதிகமான வழக்குகளில் தீர்ப்பும் சொல்லிவிட்டான். எல்லாமே அபராதங்கள்தான். அங்குதான் அதிகாரிகள் விழித்துக் கொண்டார்கள். எல்லாமே அபராதங்களாக இருக்கிறதே என்று சந்தேகப்பட்டு தலைமை நீதிபதிக்கு அறிவித்தார்கள்.

சாயம் வெளுத்தது. தலைமை நீதிபதி பரிதா அகமது உடனடியாக போலி நீதிபதியை கைது செய்ய உத்தரவிட்டார். போலி நீதிபதி கைது செய்யப்பட்டான். அவன் தீர்ப்பளித்த வழக்குகளை மீண்டும் விசாரிக்குமாறு தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## ஏழை நாடுகள் குப்பைத் தொட்டி!

பணக்கார நாடுகளின் குப்பைத் தொட்டிகளாக ஏழை நாடுகள் இருக்கின்றன. அணுக்கழிவுகள் அங்குதான் கொட்டப்படுகின்றன.

ஏழை நாடுகளுக்கு பயன்படும் என்று அனுப்புவதாகக் கூறி அணுக்கழிவுகளை அமெரிக்கா போன்ற நாடுகள் ஏற்றுமதி செய்கின்றன என்று சர்வதேச சுற்றுச் சூழல் நிபுணர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

அணுக்கழிவுகளை ஏற்றுமதி செய்வதற்கு எதிராக தாம் போராடப் போவதாகவும் சர்வதேச சுற்றுச் சூழல் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## பீரங்கி ஒலிகளுக்கிடையே பெண் பிரதமர்கள்



"பிரதமர்கள் என்ற நிலையைவிட நாங்கள் இருவரும் தாய்மார், மனைவிமார், பெண்கள், பெற்றாரின் புத்திரிகள் என்ற ரீதியில், பொஸ்னியாவில் துயருறும் மக்களின் துன்பங்களில் பங்குகொண்டு உலகின் கவனத்தை இங்கு வாடும் மக்கள்பால் திருப்பும் நோக்குடன் எங்கள் இருவரது பொஸ்னியப் பயணம் அமைந்துள்ளது." என்று பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தலைநகரான சரஜேவோவில் கூறினார்.

பெனாஸிருடன் துருக்கி நாட்டின் பிரதமர் திருமதி ரான்சு சில்லரும் அங்கு சென்றிருந்தார். இரு பெண் பிரதமர்களும் இரு முஸ்லிம் நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சரஜேவோ நகரைச் சென்று பார்வையிட்ட பின்னர்- மூன்றாவது நாளன்று இங்குள்ள மத்திய சந்தை குண்டு வீச்சுக்கு இலக்காகி உயிருக்கும் உடைமைகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது.

பொஸ்னிய அதிகாரிகளுடன் இரு பிரதமர்களும் நகர வீதிகளில் கவச உடையோடு சுற்றி வரும்போது சுற்றியுள்ள மலைப் பிரதேசங்களிலிருந்து பலத்த பீரங்கி ஒலி கேட்ட வண்ணமே இருந்தது. பெண் பிரதமர்கள் அதனை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை.

## அலசுவது – இராஜதந்திரி

# தென் மாகாணத் தேர்தலில் திடமற்றவர்களின் 'வாய்வீச்சு'!

தென் மாகாணசபைத் தேர்தல்கள் இலங்கையின் இன்றைய அரசியல் நிலையையும், அதன் தராதரம் எத்தகைய கோணத்தில் இருக்கின்றது என்பதனையும் தெளிவுபடுத்துவதாக அமைந்திருக்கக் காணப்பட்டது.

கடந்த ஆண்டுகளில் அரசியல் களத்தில் எதிரும்-புதிருமாக, கீரியும்-பாம்புமாக இருந்தவர்கள் தற்போது நகமும் சதையுமாக இருக்கும் சூழ்நிலைகளே தென் மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களின்போது வெளிப்பட்டிருந்தன.

இலங்கையின் அரசியல் நயவஞ்சகம் மிக்கதொன்றாக மாற்றமடைந்துள்ளதையும், பொதுமக்கள் பலம் மிக்க அரசியல் வாதிகளின் முன்பாக கைகட்டி நின்று பார்வையாளராக இருப்பதைவிட வேறெதனையும் செய்ய முடியாத நிலையில் இருப்பதனையுமே தென் மாகாணசபைத் தேர்தல்கள் வெளிப்படுத்தியிருந்தன.

திரு.காமினி திசாநாயக்கா, திரு.அநுரா



காமினி திசாநாயக்கா

பண்டாரநாயக்கா ஆகியோரே இத்தடவை தென் மாகாண சபையின் தேர்தல் பிரசாரங்களில் அனைவரது கவனத்தையும் பெற்றிருந்தனர்.

திரு.அநுரா பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஸ்தாபகரின் ஏக புதல்வர். திரு.அநுரா பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் கடந்த காலங்களில் தீவிரமாக இயங்கியிருந்தார்.

இதே வேளை திரு.காமினி திசாநாயக்கா ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை மறைந்த தமது சகா திரு.லலித் அத்துலத் முதலியுடன் இணைந்து ஆரம்பித்திருந்தார். அத்துடன் அக்கட்சியின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு லலித், காமினி ஆகியோர் பத்திரிகையாளர் மகாநாடு, மற்றும் கூட்டங்கள் என்று தீவிரமாக தமது கட்சிப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

மறைந்த திரு.லலித் அத்துலத் முதலி, மற்றும் திரு.காமினி திசாநாயக்கா ஆகியோர் காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவினால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

திரு.பிரேமதாசா இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் வெளியேற்றப்பட்ட லலித், காமினி ஆகியோர் திரு.பிரேமதாசாவுக்கு எதிராக மிகத் தீவிரமாகவே இயங்கியிருந்தனர்.

பாராளுமன்றத்தில் திரு.பிரேமதாசாவுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தனர். பின்னர் உயர் நீதிமன்றத்திலும் தாம் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் விலக்கப்பட்டதை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவை தவிர 1992ம் ஆண்டு வடக்கே தீவுப் பகுதியில் கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட வடபிராந்திய இராணுவத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் அவருடன் கொல்லப்பட்ட ஏனைய ஒன்பது சிரேஷ்ட படை அதிகாரிகளின் மரணங்களுக்கும், ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கமே பொறுப்பாகும் எனவும் நிரூபிப்பதில் லலித், காமினி ஆகியோர் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இறுதியாக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதிப் பகுதியில் திரு.லலித் அத்துலத் முதலி கொழும்பில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டிருந்தவேளை துப்பாக்கி நபர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இக் கொலைக்கும் திரு.ஆர்.பிரேமதாசா மீதே அன்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்த திரு.காமினி திசாநாயக்கா பழி சுமத்தியிருந்தார். இதுதவிர அரச தரப்பினர் திரு.லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர்கள் தடுத்து நிறுத்தியதையும் திரு.காமினி திசாநாயக்கா கைகட்டிப்பார்த்து நின்றார்.

திரு.லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலம் கனத்தை பொதுமயானம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்த வேளை திரு.காமினி திசாநாயக்கா, திரு.அநுரா பண்டாரநாயக்கா ஆகியோர் அந்த ஊர்வலத்தை முன்னின்று நடத்தியிருந்தனர்.

அப்போது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கெதிராக கூச்சலிட்டனர். கூடவே அரச வாகனங்கள் சிலவற்றுக்கும் தீ வைத்தனர். இறுதி ஊர்வலம் சென்ற பாதையில் இருந்த பொலிஸ் நிலையமொன்றையும் தாக்கியிருந்தனர்.

லலித்தின் இறுதி ஊர்வலத்தின்போது திரு.பிரேமதாசாவின் அரசுக்கெதிராக அன்று கோஷமெழுப்பப்பட்டதையும், அரச உடமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதையும், கண்டு பாராமுகமாகவே அன்று காமினி, அநுரா ஆகியோர் இருக்கக் காணப்பட்டனர்.

1988ம் ஆண்டிலேயே முதல் தடவையாக இலங்கையில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பெறுபேறாகவே மாகாணசபை நிர்வாக முறை இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குப் பரிகாரம் காணப்படும் வகையிலும், இலங்கையில் மாகாண ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ளும் வகையிலுமே 1987ம் ஆண்டில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்தது.

1988ம் ஆண்டிலேயே முதல் தடவையாக இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டதையடுத்து நான்கு வருடங்களின் பின்னர் கடந்த ஆண்டிலேயே இரண்டாவது தடவையாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ஆளுங்கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் கடந்த ஆண்டின் மாகாணசபைத் தேர்தல்களை தம்மிடையேயான ஒரு பலப்பரீட்சையாகவே கருதி தீவிர பிரசாரங்களில் இறங்கியிருந்தனர்.

திரு.லலித் அத்துலத் முதலி மேல் மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிட முன்வந்திருந்ததுடன், தமது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் இரவு பகலாக தீவிர பிரசாரங்களிலும் ஈடுபட்டிருந்தார்.

இவ்வாறு மும்முரமான பிரசாரங்களில் இறங்கி கொழும்பு கிருலப்பனையில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றியபோதிலேயே திரு.லலித் அத்துலத்முதலி துப்பாக்கி நபர் ஒருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

மறுபுறத்தே ஆட்சியாளர்கள் கடந்த ஆண்டின் மே தினத்தை தமது மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்துக்கென முழு அளவில் பயன்படுத்தவிருந்தனர்.

மேதின ஊர்வலம் முதற்கொண்டு காலிமுகத் திடலில் இடம்பெறவிருந்த பொதுக் கூட்டத்தையும் விரிவான முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசாரமாகவே பயன்படுத்த முடிவு செய்திருந்தனர்.

ஆனால் ஆளுங்கட்சியினரின் மேதின ஊர்வலம் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகி காலி முகத்திடலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த வேளை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் கோரமான முறையில் கொல்லப்பட்டிருந்தார்.

எனவே கடந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்கள், அவற்றுடன் சேர்ந்து வந்த மேதினம் ஆகியனவற்றின்போது இலங்கையின் இரு முக்கிய அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இரு அரசியல்வாதிகளும் ஒரே கட்சியில் ஒன்றாக இருந்தவர்கள். ஆனால் தமது இறுதிக் காலங்களில் இரு வேறு துருவங்களாகப் பிரிந்து கீரியும், பாம்புமாகப் பகைமை பாராட்டியிருந்தனர்.

லலித்தின் மரணத்தையடுத்து அவருடன் இணைந்திருந்த திரு.காமினி திசாநாயக்கா கண்ணீர் சிந்தியவராக, லலித்தின் கொள்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்ன்ணியின் இலட்சியங்களை எவரும் அழித்துவிட முடியாதென்றெல்லாம் உறுதிபடக் கூறியிருந்தார்.

இதேவேளை, லலித்தின் மரணத்தையடுத்து சில தினங்களில், கடந்த ஆண்டின் மே தினத்திலன்று கொல்லப்பட்டிருந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மரணத்தையடுத்து இரங்கலுரை நிகழ்த்தியவர்கள், மறைந்த ஜனாதிபதியின் கொள்கைகள் தொடர்ந்து பேணப்படும்: அவரது இலட்சியங்களுக்கு மதிப்பளிக்கப்படும் என்றெல்லாம் முழங்கியிருந்தனர்.

ஆனால் திரு.பிரேமதாசா வாழ்ந்தபோது பெட்டிப் பாம்பாக அடங்கியிருந்தவர்கள் இன்று மனம் போன போக்கில் தமது கைவரிசையைக் காட்டி வருபவர்களாகவே காணப்படுகின்றனர்.

திரு.பிரேமதாசாவின் அரசியல் வாழ்க்கையை மட்டுமல்ல அவரது தனிப்பட்ட வாழ்க்கை, மற்றும் அவரது குலம் கோத்திரம் என்பவற்றைக்கூட ஏளனஞ்செய்தவர்கள் இன்று ஆளுங்கட்சிக்குள் பிரவேசித்திருக்கக் காணப்படுகின்றனர்.

திரு.அநுரா , பண்டாரநாயக்கா, திரு.காமினி திசாநாயக்கா ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியில் இன்று இணைந்திருக்கின்றனர். அத்துடன் தென்மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களிலும் இவர்கள் இருவரும் விரிவான முறையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் கடந்த இரு ஆண்டுகளில், மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு எதிராக லலித், காமினி, அநுரா ஆகியோர் மிகத் தீவிரமாகவே செயல்பட்டிருந்தனர்.

தென்மாகாணத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய திரு.காமினி திசாநாயக்கா, ஐ.தே.கவில் வந்து மீண்டும் இணையுமாறு தம்மையும் தமது சகாவான திரு.லலித் அத்துலத்முதலியையும் மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா கோரியிருந்தார், என்று குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் திரு.லலித் அத்துலத்முதலி இன்று உயிருடன் இருந்திருந்தால் தம்மைப் போலவே அவரும் ஐ.தே.கவில் இணைந்திருப்பார் என்று திரு.காமினி திசாநாயக்கா கூறியிருந்தார்.

ஆனால் ஜனாதிபதி பிரேமதாசா உயிருடனிருந்த காலத்தில் லலித் -காமினி ஆகியோரின் கூட்டு எப்படி இருந்தது என்பதை நாட்டு மக்கள் நன்கறிவர்.

திரு.பிரேமதாசாவைப் பதவியிலிருந்து கவிழ்க்கும் வகையிலேயே உருவாக்கப்பட்ட ஒரு கட்சியைப் போன்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை லலித்-காமினி ஆகியோர் இயக்கி வந்தனர்.

இலங்கையில் ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்பட்டு மீண்டும் பாராளுமன்ற ஆட்சி முறை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றெல்லாம் இந்த 'அரசியல் இரட்டையர்கள்' கருத்துக்களை வெளியிட்டுவந்தனர்.

இது தவிர தமது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஒரு 'புத்தி ஜீவி'களின் கட்சி எனவும் குறிப்பிட்டு வந்தனர்.

ஆனால் திரு.ஆர்.பிரேமதாசாவும், அவரது 'வைரி'யாக மாறியிருந்த திரு.லலித் அத்துலத்முதலியும் இன்று உயிருடனில்லாத வேளையிலேயே தம்மை ஐ.தே.கவில் சேரும்படி மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா அழைப்பு விடுத்ததாகவும், திரு.லலித் அத்துலத்முதலி உயிருடனிருந்தால் ஐ.தே.கவில் சேர்ந்திருப்பார் எனவும் திரு.காமினி திசாநாயக்கா கூறி வருகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் வெளியேற்றப்பட்டதையடுத்து லலித், காமினி ஆகியோர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஆரம்பித்திருந்தனர். அத்துடன் அதனை ஓர் உறுதிமிக்க கட்சியாகவும் உருவாக்குவதில் ஓரளவு வெற்றி கண்டிருந்தனர்.

ஆனால் லலித்தின் மரணத்தையடுத்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை (Democratic United National Front-DUNF) வழி நடத்தும் பொறுப்பு காமினியிடம் சேர்ந்திருந்தது.

ஆனால் இப்பொறுப்பைச் சரிவரக் கையாளும் உறுதி அற்ற நிலை, மற்றும் கட்சியின் கட்டுக்கோப்பைப் பேணக்கூடிய நேர்மைத் திறன் இன்மை, தமது சுய தலைமைத்துவத்திலேயே தமக்கு நம்பிக்கையின்மை ஆகிய காரணங்களினாலேயே திரு.காமினி திசாநாயக்கா இன்று மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளார், என்பதே ஒளிவு மறைவற்ற உண்மையாகும்.

இந்நிலையில் கழுதை தேய்ந்து கட்டெறும்பாக மாறிவிட்ட நிலையிலேயே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி காணப்படுகின்றது.

இவ்வாறு தென்னிலங்கையில் அரசியல் வாதிகள் நேர்மையான, பரஸ்பர விசுவாசத்துடன் கூடிய அரசியலை தம்மிடையே கொண்டிராத இத்தருணத்தில் இலங்கையின் பிரதான பிரச்னையான வடக்கு-கிழக்குப் பிரச்னையை எத்தகைய விசுவாசத்துடனும்,



அநுரா பண்டாரநாயக்கா

நேர்மையான அரசியல் கண்ணோட்டத்துடனும் கையாளுவார்கள் என்பது கேள்விக் குரியதாகவே இருக்கின்றது.

இலங்கையில் மாகாண சபை ஆட்சி முறை தோன்றுவதற்கு இலங்கை-இந்திய ஒப்பந்தமே வழிகோலியிருந்தது.

இந்த ஒப்பந்தத்தை தயாரிப்பதில் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவரான திரு.ஜே.என்.டிக்ஸிற்றும் பெரும்பங்கு வகித்திருந்தார்.

மாகாணசபை அமைப்பு முறையை தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில் திரு.டிக்ஸிற் தீவிர அக்கறை காட்டினார்.

யாழ்ப்பாணத்துக்கு அன்று விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் அந்த இயக்கத்தின் ஏனைய முக்கியஸ்தர்களையும் திரு.டிக்ஸிற் சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

ஆனால் புலிகள் மாகாண சபை அமைப்பு முறையை ஏற்க மறுத்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல் செய்ய வந்த இந்திய அமைதிப் படையினருடனும் மோதலில் குதித்திருந்தனர்.

திரு.ஜே.என்.டிக்ஸிற் இந்திய வெளிவிவகார அமைச்சின் ஆலோசகராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவர் அண்மையில் ஹிந்து (The Hindu) பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில், இலங்கையில் வடக்கு- கிழக்குப் பிரச்னை தொடர்பாக அரசியல் ரீதியான உடன்பாட்டை எட்டுவதற்கு அனைத்து தமிழ்ப் பிரிவினருடனும், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடனும் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் இந்தியப் படையினரின் பிரசன்னம் தோல்வியிலேயே முடிவடைந்திருந்தது. ஆயினும் இந்தியா புலிகள் குறித்து குறைவாக மதிப்பிடவில்லை என்பதனையே திரு. டிக்ஸிற்றின் இராஜதந்திரக் கண்ணோட்டம் விளக்கி நிற்கின்றது.

புலிகளின் பலம் தொடர்ந்து உறுதியாகவே இருக்கின்றதென்பதற்கு பூநகரியில் அவர்கள் மேற்கொண்ட தாக்குதல் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றதெனவும் திரு. டிக்ஸிற் தமது கட்டுரையில் எழுதியிருந்தார்.

ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்கள் புலிகள் குறித்த விடயத்தில் இராஜதந்திர அணுகுமுறைகளைக் கடுகளவில்தானும் கொண்டிராதவர்களாக இருக்கின்றனர். இந்நிலையில்- இனக்குரோதம் தோன்றுவதற்கே மூலாதாரமாக இருந்த இனவாதக் கருத்துக்களுக்கு மெருகூட்டப்படும் சூழ்நிலைகள் மீண்டும் தோன்ற ஆரம்பித்துள்ள இத்தருணத்தில்,- வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்த நிதானமான அரசியல் அணுகுமுறைகள் கண்ணுக்கு எட்டாத தூரத்திலேயே இருக்கக் காணப்படுகின்றன.

> நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமு மின்றி
> வஞ்சனை சொல்வா ரடீ! - கிளியே!
> வாய்ச் சொல்லில் வீரரடீ!
> கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்றலின்றி,
> நாட்டத்திற் கொள்ளா ரடீ! - கிளியே!
> நாளில் மறப்பா ரடீ!
>
> -பாரதியார்-



> "தமிழ்க் கட்சிகள், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்."
>
> ஜே.என். டிக்ஸிற்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கண்ணாடிபோல் முகம் பளபளக்க..

# உங்கள் முன்னாடி சில யோசனைகள்!



'முகத்தில் முகம் பார்க்கலாம். பவளத்தின் நிறம் சேர்க்கலாம்' என்றெல்லாம் பாடல்கள் இருக்கின்றன.

முகம் பளபளப்பாக, கண்ணாடி மாதிரி இருப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன.

இதோ சில வழிமுறைகள். நீங்களும் செய்து பாருங்களேன்.

பால் ஆடை இருக்கிறதா? அதை எடுத்து ஒரு கிண்ணத்தில் போட்டுக்கொள்ளுங்கள். அதில் ஒரு தேக்கரண்டி கடலைமாவை கலந்து முகத்தில் நன்றாக பூசிக்கொள்ளுங்கள். 10 நிமிடம் சென்றபின்பு இளம் சூடான நீரில் முகத்தை கழுவிக்கொள்ளுங்கள்.

எலுமிச்சம்பழச் சாற்றை பால் ஆடையுடன் கலந்து முகத்தில் பூசி அரை மணி நேரம் ஊறவிடவேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் கழுவி, கடலை மாவினால் முகத்தை தேய்க்கலாம்.

தயிர் ஆடை எடுத்து முகத்தில் பூசிக்கொண்டு சிறிது நேரத்திற்குப் பின்னர் முகத்தை கடலை மாவு தேய்த்துக் கழுவலாம்.

தினம்தோறும் ஏதாவது ஒரு பழம் வாழைப்பழமோ, கொய்யாவோ, அல்லது திராட்சையோ ஏதாவது ஒன்றை சாப்பிட வேண்டும். சாப்பாட்டில் கீரை, காரட் தினமும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

முகம் பளபளப்பாக இருக்க என்ன குறை! வெள்ளரிக்காய் சாலட் சாப்பிட்டால் இன்னும் நல்லது.

இந்த யோசனைகளில் வசதியான ஒன்றை நீங்கள் செய்து பார்க்கலாமே.

பரிசுத் திட்ட கூப்பன் இல-6

## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

## அதிஷ்டசாலிகள் இவர்கள்



செல்வி.க. உதயலட்சுமி-திருமலை

பட்டுச்சேலைப் பரிசுத் திட்டத்தில் முதல் பரிசான பட்டுச்சேலை பெற்றுக்கொண்டவர் இவர்தான்.



எம்.எஸ். தாகிரா-புத்தளம்

இல்ல உபயோகப் பொருட்களைப் பரிசாகப் பெற்ற ஆறு அதிஷ்டசாலிகளில் ஒருவர்.

ஏனைய அதிஷ்டசாலிகள் புகைப்படம் அனுப்பிவைக்கவில்லை.

## வீட்டுக் குறிப்புகள்




வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு, மோர் கொடுத்து உபசரிக்க விரும்புகிறீர்காளா? வெறுமனே தயிரை கடைந்து, உப்பு போட்டு கொடுப்பதைவிட, சிறிது இஞ்சி, பச்சைமிளகாய், கறிவேப்பிலை, கொத்துமல்லி தழை ஆகியவற்றை பொடிப் பொடியாக நறுக்கி தாளித்து மோரில் கலந்து கொடுங்கள். அமிர்தமாக இருக்கும். சிறிது நேரம் பிரிஜ்ஜில் வைத்து, சில்லென்று அருந்தினால் இன்னும் சுவையாக இருக்கும்.



குறுகிய படுக்கை அறையில், பெரிய டிரஸ்சிங் டேபிளை எல்லாம் போட்டு வைக்க முடியாது அல்லவா? அறையின் ஒரு மூலையில், முக்கோண வடிவில் மரப் பலகையை பொருத்தி, அதையே டிரஸ்சிங் டேபிளாக உபயோகிக்கலாம். மரப்பலகையைச் சுற்றி ஸ்கிரீன் போட்டுவிடலாம். பலகையின் கீழ் உள்ள வெற்றிடத்தில் சூட்கேஸ் போன்றவற்றையும் வைத்துக்கொள்ளலாம்.

குளிக்கும் சோப், கையில் பிடிக்க முடியாத அளவுக்கு சிறியதாகி போனால், தூக்கி எறிந்து விடாதீர்கள். வெண்டி லேட்டர் ஜன்னல் பக்கத்தில் வைத்து விடுங்கள். காற்றுப்பட்டு வாசனை அறை முழுவதும் பரவிவிடும். இதனால், அறைக்கென்று தனியாக சென்ட் வாங்கி வைக்க வேண்டியதில்லை.

## நீங்களும் தைக்கலாம்

# உடைகளுக்கான அளவெடுப்பது எப்படி?

பெண்களுக்கான உடைகளைத் தயாரிப்பதற்கு முன்னர் சரியான அளவுகளை எடுப்பது அவசியமாகும். அளவுகளை எடுக்கும் போது முதலாவதாக இடையைச்சுற்றி தளர்வில்லாமல்-ஒட்டினாற்போல் ஒரு மெல்லிய நாடாவைக் கட்டிக்கொள்ள வேண்டும். இதன் பின்னர் பல்வேறு பகுதிகளின் அளவுகளையும் எடுப்பது சுலபமாகும்.

இரு படங்களிலும் காணப்படும் கோடுகளுக்கான விளக்கங்கள் இலக்க ரீதியாகத் தரப்பட்டுள்ளன:

1. **மார்பளவு:** மார்பின் உயரமான பகுதிகளைத் தொட்டாற்போல் அளவு நாடா முதுகைச் சுற்றி வரவேண்டும்.
2. **இடை அளவு:** ஏற்கனவே இடையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள நாடாவை அழுத்தினாற்போல் அளவு நாடா சுற்றப்பட்டுக் கணக்கிடப்பட வேண்டும்.
3. **புட்டத்தின் அளவு:** இடைக்கும் அடித் தொடைக்கும் இடையிலுள்ள ஆசனப்புட்டத்தின் அதிக உயரமான பகுதியை அளவு நாடாவால் சுற்றிக் கணக்கிட வேண்டும்.
4. **மார்பின் ஆழ அளவு:** தோளின் உயரப் பகுதி (கழுத்தடி)யிலிருந்து மார்பின் உயர முனைவரை அளவு நாடா கொண்டு வரப்பட்டு அளவிட வேண்டும்.
5. **முன்புற இடை நோக்கிய அளவு:** இலக்கம் 4வதுக்கான அளவு போன்று தோளின்-கழுத்தடியிலிருந்து மார்பின் முனையைத் தொட்டு இடை வரை நாடா கொண்டுவரப்பட்டு கண்க்கிட வேண்டும்.
6. **பின்புற அளவு:** மேலே உள்ள முதுகெலும்பின் முனையிலிருந்து கீழ் நோக்கி இடை வரை அளவு நாடா கொண்டு வரப்படவேண்டும்.
7. **தோள் அளவு:** கழுத்திலிருந்து தோளின் மேல் முனைவரை அளவு நாடா செலுத்தப்பட்டுக் கணக்கிட வேண்டும்.
8. **நீளகை அளவு:** தோள் முனையிலிருந்து மணிக்கட்டுப்புறம் வரை நாடா கொண்டுவரப்பட வேண்டும். இதற்கு முழங்கையிலிருந்து கையினை சற்றுத் தூக்கலாக வைத்தல் நல்லது.
9. **மேற் புயத்தின் அளவு:** கைக்கும் தோளுக்கும் இடைப்பட்ட புயப் பகுதியில் ஆகக் கூடுதலான உயரப் பகுதியைச் சுற்றி வளைத்து நாடாவில் கணக்கிடலாம்.



10. **கழுத்தின் அளவு:** கழுத்தின் சுற்றளவில் விசாலமான பகுதியை நாடாவால் சுற்றிக் கணக்கிடல் வேண்டும்.



## லேடீஸ் ஸ்பெஷல்

# பெண்ணாலும் முடியும்-வானமும் வசப்படும்!

# சுப்பர் சோனிக் விமானம் ஓட்டும் முதலாவது பெண்மணி!

"அதன் வேகம், அதன் பயங்கரமான ஒலி, அத்துடன் அதில் எழும் மணம் ஆகியவற்றை வர்ணிக்க முடியாது. அது பாய்ந்து மேலெழுந்த வேகத்தில் எனது மூளையினை தரையிலேயே விட்டுவிட்டு வந்து விட்டேனோ என்று எண்ணத் தோன்றியது." இவ்வாறு தனது முதலாவது சுப்பர்சோனிக் கொன்கோட் விமானத்தை செலுத்திய அனுபவத்தை கூறுகிறார் பார்பரா ஹார்மர் என்ற 39 வயது மாது.

பார்பராவுக்கு விமான நிலையங்களிலும் விமானங்களிலும் சிறு வயதிலிருந்தே ஒரு வகை கவர்ச்சி இருந்தது. இதனால் இலண்டனிலுள்ள ஹீதுறு விமான நிலையத்தில் ஒரு சிற்றூழியராகச் சேர்ந்தாள். அத்துடன் விமானம் ஓட்டும் பயிற்சிக் கழகத்திலும் சேர்ந்து படித்தாள். மிக விரைவில் சிறு விமானங்களை ஒட்டுவதற்கான அனுமதியும் பெற்றாள்.



விமானம் ஒட்டும் பயிற்சியாளர் பணியையும் ஏற்று சிலகாலம் அதில் ஈடுபட்டாள். அவளுடைய விமானம் ஓட்டும் ஆசை அதிகரித்தமையினால், பல பிரயத்தனங்களின் பின்னர் வர்த்தக நிலையிலுள்ள விமானங்களை ஓட்டும் தகுதியும் அனுமதியும் பெற்றாள். இருப்பினும் இவளுக்கு விமான நிறுவனங்கள் எவையேனும் வேலை கொடுக்கவில்லை.

பார்பரா தளர்ந்து போகவில்லை. விடாமுயற்சியின் பயனாக 1984ல் பிரிட்டிஷ் கலேடோனியன் விமானிகளில் இரண்டாவது பெண் விமானியானாள். மூன்று வருடங்கள் இந்த நிறுவனத்தின் பலதரப்பட்ட விமானங்களை ஓட்டும் அனுபவம் பெற்றாள்.

1987ல் இதே நிறுவனத்தை 'பிரிட்டிஷ் எயார்வேய்ஸ்' என்ற நிறுவனம் பொறுப்பெடுத்தது.

உலகம் முழுவதும் பயணிகளை ஏற்றிச் செல்லும் இந்த நிறுவனத்தில் இணைந்த பார்பரா இன்று சுப்பர்சோனிக் எனப்படும் அதிவேக கொன்கோட் விமானங்க்ளை வெற்றிகரமாகச் செலுத்துகிறார்.

பார்பராவுக்கும் சொந்த சோகங்கள் உண்டு. இரு தடவை காதலில் முறிவு. எனினும் அதனால் மனம் உடைந்து வீழ்ந்துவிடாமல் தன் பணிகளை தொடர்கிறார்.

சுப்பர் சோனிக் அதிவேக விமானத்தை செலுத்தும் முதல் பெண்மணி என்ற பெருமை பார்பராவுக்கே சேருகிறது.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

### கடலை பூசணிக்காய் கூட்டு

**தேவையானவை:**

பச்சைக் கடலை-1 கோப்பை
பூசணிக்காய் துண்டுகள்- 1/2 கிலோ
புளித் தண்ணீர்- 1 கோப்பை
வெல்லம்- சிறு கட்டி.

அரைப்பதற்கு தேவையான பொருட்கள்:
கறுவாப்பட்டை- 2 துண்டுகள்
லவங்கம்- 4
மிளகு- 1/2 தேக்கரண்டி
சீரகம்- 1/4 தேக்கரண்டி
மிளகாய் வற்றல்- 4 அல்லது 6
(எண்ணெயில் சிறிது வறுத்துக்கொள்ளவும்)
மஞ்சள் பொடி-தேவையான அளவு
உப்பு-தேவையான அளவு
எண்ணெய்- 3 மேசைக்கரண்டி
கடுகு- 1 தேக்கரண்டி
தேங்காய்
(நெருப்பில் காட்டிச் சுடவும்)-சிறு துண்டு

மேற்கூறிய பொருட்களை ஒன்றாகச் சேர்த்து அரைத்துக்கொள்ளவும்.

**செய்முறை:**

1. பச்சை கடலையை 2 மணிநேரம் தண்ணீரில் ஊற வைக்கவும். பூசணிக் காயை சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
2. எண்ணெயில் கடுகைத் தாளிக்கவும். பூசணிக்காய் துண்டுகளையும், பச்சைக் கடலை, மஞ்சள் பொடியையும் போட்டு 2 நிமிடங்கள் வரை வதக்கவும்.
3. அரைத்த மசாலாவைப் போடவும். 1 கோப்பை தண்ணீர்விட்டு உப்பும் சேர்த்துக் கொதிக்க விடவும்.
4. காயும், கடலையும் பாதி வெந்தவுடன் புளித்த தண்ணீரையும் வெல்லத்தையும் போடவும்.
5. காய்கள் மிருதுவாக வெந்தவுடன் கூட்டை அடுப்பிலிருந்து இறக்கவும்.

### முடியைக் காக்க ஆசையா? இதை வாசியுங்கள்

1. ஒவ்வொரு நாளும் தலையைச் சுத்தம் செய்யுங்கள்.
2. பல்வேறு சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுங்கள்.
3. நன்கு ஓய்வெடுக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.
4. நாள்தோறும் உடற்பயிற்சி செய்யுங்கள்.
5. முடிந்தவரை முடியை இயற்கையாக உலர விடுங்கள்.
6. நாள்தோறும் இரவில் ஏழு மணி நேரம் உறங்குங்கள்.
7. முறையான செக்ஸ் வாழ்க்கை நலம் பயக்கும்.
8. மன உளைச்சலைத்தரும் சூழ்நிலை ஆராய்ந்து அவைகளை சமாளிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

### முடி பளபளப்புடனிருக்க நீங்கள் அன்றாடம் சாப்பிடவேண்டிய உணவு வகைகள்:

- கொழுப்பற்ற,கறி,வேக வைத்த மீன் அல்லது தோல் நீக்கப்பட்ட கோழிகள் இவைகளைச் சாப்பிடுங்கள்.
- குறைந்தது இரண்டு பழங்களாவது சாப்பிடுங்கள்.
- ஏதாவது ஒரு பச்சடியைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- ஒரு நேரமாவது பச்சைக் காய்கறிகள் அல்லது அரைப் பதத்தில் வேக வைக்கப் பட்ட காய்கறிகளை உண்ணுங்கள்.
- ஆறிலிருந்து எட்டு டம்ளர்வரை நீர் குடியுங்கள்.
- ஒரு முட்டைக்கு மேல் சாப்பிடாதீர்கள்.
- பி.சி.இ.மற்றும் கே ப்ளஸ் விட்டமின்களை எவ்விதத்திலும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- ஏ.சி.டி.விட்டமின்களை உணவின் மூலம் பெறுங்கள்.

### தவிர்க்க வேண்டியவை:

- பாலைத் தவிர்த்து விடுங்கள். அதற்கு மாறாக வெண்ணெய் எடுக்கப்பட்ட பாலைக் குடியுங்கள்.
- எண்ணெயில் பொரிக்கப்பட்ட பொருட்கள்.
- பதப்படுத்தப்பட்ட மாமிசப் பொருட்கள்.
- உப்பு மற்றும் வெள்ளைச் சீனி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாலூட்டி வளர்த்த பாம்பு

## பச்சைக் குழந்தையைப் பதம் பார்த்தது!

### பரபரப்பிலும் படப்பிடிப்பாளர் படைத்த சாதனை

பாம்பைச் சீராட்டி, பாலூட்டி வளர்த்தாலும் பாம்பு தன் புத்தியைக் காட்டும் என்பார்களே. காட்டித்தான் விட்டது!

ஃபுளோரிடாவைச் சேர்ந்த மியாமி என்ற பகுதியில் வசிப்பவர் ஸ்கொட் ஹோவாட். (வயது 34)

அவருக்கு பாம்பு வளர்க்க ஆசை. ஆடு,மாடு,கோழி,நாய் அல்லது கிளி, முயல் என்று ஏதாவதொரு பிராணியை வளர்த்திருக்கலாம். அவரோ பாம்பு வளர்க்க ஆசைப்பட்டார்.

அதுவும் சாதாரண பாம்பல்ல. மலைப்பாம்பு.

வீட்டுப் பிராணியாக செல்லம் கொடுத்து ஒரு மலைப்பாம்பை வளர்க்கத் தொடங்கினார்.

குட்டியாக இருந்த பாம்பு கொளு, கொளு வென்று வளர்ந்து வாட்டசாட்டமாக 18 அடி நீளத்தில் இருந்தது.

செல்லப் பிராணியல்லவா? வீடு முழுக்க ஊர்ந்து திரியும். தடையே கிடையாது.

ஸ்கொட் தம்பதியினருக்கு ஒரு குழந்தை பிறந்தது. பெயர்-பில்.

பாம்பால் குழந்தைக்கு ஆபத்துவரலாம் என்று அயலவர்கள் சொன்னார்கள். ஸ்கொட் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

ஒரு நாள் ஸ்கொட்டின் மனைவி வெளியே சென்றுவிட்டார். குழந்தை பில் வீட்டின் முன் மண்டபத்தில் தரையில் ஒரு விரிம்பில் கிடத்தப்பட்டிருந்தான்.

அவனை குளிக்கவைக்க ஸ்கொட் குளியறையில் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

வீட்டுக்குள் ஊர்ந்து வந்த பாம்புக்கு பசியெடுத்துவிட்டது. அதன் கண்ணில் குழந்தை பில் பட்டுவிட்டது.

மெல்ல ஊர்ந்து போய் வாய் பிளந்தது. குழந்தையின் கால் பக்கத்தில் இருந்து தனது விழுங்கலைத் தொடங்கியது.



கிலியான நேரத்தில் கிளிக் செய்தவர்



மலைப்பாம்பு மழலையை விழுங்கிக் கொண்டிருந்தபோது

வீரிட்டு கதறியது குழந்தை. குளிய லறையில் இருந்த ஸ்கொட் ஓடிவந்து பார்த்தார்.

அதிர்ச்சியில் உறைந்து போனார். கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

பின்னர் வாய்விட்டு 'ஐயோ' என்று உரத்துக் கத்தினார்.

அயலவர்கள் கூக்குரல் கேட்டு ஓடிவந்தனர்.

ஸ்கொட் வீட்டினுள் ஓடிச்சென்று பெரிய கத்தியை எடுத்து வந்தார்.

அதற்கிடையே ஓடிவந்துவிட்ட அயலவர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

அதில் ஒருவர், ஓடிவரும்போது பதட்டத்திலும் மறக்காமல் கமராவையும் எடுத்து வந்திருந்தார்.

அந்தப் பரபரப்பிலும் "கிளிக், கிளிக்" கோரக்காட்சி பதிவாகியது.

அதே நேரத்தில் பெரிய கத்தியால் அந்த மலைப்பாம்பை வெட்டினார் ஸ்கொட்.

குழந்தையின் வயிறுவரை மலைப் பாம்பின் வாய்க்குள் போய்விட்டது. எனவே எதுவரை குழந்தையின் உடல் உள்ளே போயிருக்கும் என்று கணக்கிட்டு கத்தியை வீசினார்.

அது என்ன சாதாரண பாம்பா? வெட்டுவதற்கே கஷ்டமாக இருந்தது.

பலம் கொண்ட மட்டும் கத்தியை வீசியபோது, வெட்டப்பட்ட வேதனையில் மலைப்பாம்பு வாயை அகலத் திறந்தது.

உடனே அயலவரில் ஒருவர் ஓடிவந்து அதன் திறந்த வாயில் இருந்து குழந்தையை இழுத்தெடுத்தார்.

குழந்தையை மருத்துவமனைக்கு தூக்கிக்கொண்டு ஓடினார்கள்.

பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை உயிரோடு இருப்பதாக சொல்லி சிகிச்சை அளித்தார்கள்.

மலைப்பாம்புகள் மான், முயல் போன்ற பிராணிகளை விழுங்கும்போது தலையினை முதலில் விழுங்குவதில்லை. பின்புறம்தான் முதலில் குறிவைத்து விழுங்கப்படும். அதனால்தான் குழந்தை தப்பியது.

பயங்கரப் பிராணிகளை வளர்க்க ஆசைப்படுகிறவர்கள் உசாராக இருப்பது நல்லது.

அந்தப் பரபரப்பிலும் பயங்கரக் காட்சியை படம் பிடித்தவரை நினைக்கும் போதுதான் வேடிக்கையாகவும் இருக்கிறது. வியப்பாகவும் இருக்கிறது.

## தகவல் பெட்டி

## விசித்திர முகத்தோடு வாழும் பெண்மணி



### பரிசு வென்ற பலே பூனை!

வெளிநாடுகளில் வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளுக்கு ஏகப்பட்ட மரியாதை.

வளரும் பிராணிகளுக்கிடையே போட்டி இருக்கிறதோ இல்லையோ வளர்ப்போரிடையே கடும் போட்டி. அதனால் அடிக்கடி "செல்லப் பிராணிகளின் கண்காட்சி" பல நடக்கும். சிறந்த பிராணிகளுக்கு பரிசும் கிடைக்கும்.

படத்தில் உள்ள பூனைக்குட்டி பொஸ்ரன் நகரில் நடந்த போட்டியில் அனைவரையும் கவர்ந்து பரிசு வென்றது. பூனை பால் குடிக்கும். அத்தோடு இதனையும் சேர்த்துக்கொள்ளலாம், பூனை பரிசும் எடுக்கும். "டேவோன் ஷெக்ஸ்" வகையைச் சேர்ந்தது இந்தப் பூனை.

பிறவிக் குறைபாடுகள் பலவகைப்படும். கூன், குருடு, செவிடு, நொண்டி மற்றும் ஒட்டிப்பிறக்கும் இரட்டையர் போன்றெல்லாம் பிறவிகள் உண்டு. ஆனால் முகத்தில் ஒரே கண்-அதுவும் உரிய இடத்தில் இல்லாமல்-இடம்மாறி இருப்பது அபூர்வம்.

கிரேக்க இதிகாசங்களில் நெற்றியில் ஒரே கண்ணுடன் ஒருமனிதன் பற்றிய கதை உண்டு. 'சைக்லோப்ஸ்' என்பது அவன் பெயர்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த சான்டியாகோவில் ரம்மி லிடோல்ஃப் என்ற பெண்மணி வசிக்கிறார்.

இவருடைய முகத்தின் மையப் பகுதியில் ஒரேயொரு கண் அமைந்திருக்கிறது. மூக்கும் இடப்பக்கம் சரிந்திருக்கிறது. ஆனால் வாய் உரிய இடத்திலேயே இருக்கிறது. இவருக்கு 29 வயதாகிறது.

இந்தக் குறைபாட்டைத் தவிர ரம்மியிடம் வேறு எக்குறையும் இல்லை.

ரம்மியை கென் லிடோல்ஃப் என்ற காப்புறுதி அலுவலர் விரும்பி மணம் முடித்தார்.

இப்பொழுது அவர்களுக்கு 8 வயதில் ஒரு மகன் இருக்கிறான். தாயின் குறைபாடு அவனுக்கு இல்லாமல் போனதில் தம்பதியினருக்கு பலத்த சந்தோசம்.

திருமணமாகு முன்னர் தனது காதலனுடன் ரம்மி பல மருத்துவ நிபுணர்களைச் சந்தித்தார். தனது பிற சந்ததியினர் எவருக்காவது தனது குறைபாடு வந்துவிடக்கூடாதே என்பது தான் ரம்மியின் ஏக்கம். அத்தகைய குறைபாடுகள் எதுவும் பிறக்கும் பிள்ளை களுக்கு ஏற்படப்போவதில்லை என்று மருத்துவர்கள் உத்தரவாதமளித்த பின்னரே ரம்மி மணம் முடித்தார். இருப்பினும் பிராண்டன் பிறந்து அவனுடைய முகத்தைப் பார்க்கும்வரை ரம்மி சந்தேகத்துடனேயே இருந்தாள்.

ரம்மி கர்ப்பத்திலிருக்கும்போது அவளுடைய தாய் உட்கொண்ட மருந்துகளில் ஏற்பட்ட வித்தியாசமே இந்தக் குறைபாட்டுக்கான காரணம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரம்மி பிறந்தபோது அவளைப் பரிசோதித்த மருத்துவர்கள், பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை மூலம் அவளின் முகத்தைச் சீர்படுத்துவதால் பல பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்று மறுத்துவிட்டனர்.

அவளுடைய இடது கண் இருக்க வேண்டிய இடத்துக்கு அண்மையில் மூளை இடம் மாறியிருப்பதனால் சத்திர சிகிச்சை செய்யும்போது மூளையில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று சொன்னார்கள்.

"நான் சிறுமியாக இருக்கும்போது என் முகத்தின் அமைப்பு எனக்கு வெறுப்பினையே தந்தது. என்னை மற்றவர்கள் உற்றுப் பார்ப்பதை என்னால் சகித்துக்கொள்ள முடியாதிருந்தது. கறுத்தக் கண்ணாடி போட்டாவது எனது குறைபாட்டினை மறைக்கலாமா என்று முயற்சித்தேன். அதுவும் முடியவில்லை. காலம் செல்லச் செல்ல என்னுடன் எந்தவிதமான வித்தியாசமுமின்றிப் பழகும் சினேகிதிகளும் வேறு மனிதர்களும் சேர ஆரம்பித்தனர். ஆகவே என்னுடைய குறைபாட்டினை மறந்து சகலருடனும் சகஜமாகப் பழக ஆரம்பித்துவிட்டேன்" என்று ரம்மி கூறுகிறார்.



ரம்மி சாதாரண பெண்களைப்போல் நீச்சலடித்தல், குதிரைச் சவாரி ஆகியவற்றுடன் ரென்னிஸ் ஆட்டத்திலும் ஈடுபடுகிறார். ஒரே கண் பார்வை என்பதனால் ரென்னிஸ் ஆட்டத்தில் சில சங்கடங்கள் இருந்த போதிலும், ஓரளவு சிக்கல் இல்லாமல் ஆடுகிறார்.

"சில சந்தர்ப்பங்களில் என் தோற்றம் சில அனுகூலங்களையும் எனக்களித்துள்ளது. என்னை எவரும் எவருக்கும் அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. எவரும் என்னை சுலபமாக அடையாளம் கண்டு விடுகின்றனர். அத்துடன் இரண்டு கண்களுக்கு ஒப்பனை செய்ய வேண்டிய தொல்லையுமில்லை," என்று நகைச்சுவையுடன் கூறுகிறார் ரம்மி.



# மினிசினி

# காதோடு சொல்லுகிறோம்



குஷ்பூ
படம்-இந்து

# முகப்பில்

அதிரடி உடையோடு குஷ்பூ

கனிகிதழ் நகையோடு சிவரஞ்சனி

# சினிவிசிட்

## காதலிகள் மூவர்

## ஸ்ரீதேவியோடு பிரபு தேவா



ரேவதி
படம்-பிரியங்கா



## இதுவரை நடித்ததில்-கமலுக்கு பிடித்தது

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## நண்பனின் தயாரிப்பில் நாயகன் விஜயகாந்த்

விஜயகாந்தின் உயிர் நண்பர் அரசு இப்ராஹிம் ராவுத்தர் ஏற்கனவே விஜயகாந்தை வைத்து இராவுத்தர் பிலிம்ஸ் என்ற பெயரில் பல வெற்றிப் படங்களை வழங்கியுள்ளார்.

[illegible] படம் [illegible] திருப்பி எடுக்குமளவுக்கு வசூலில் அறுவடை செய்யவில்லை. அதனால் இனி இராவுத்தர் பிலிம்ஸ் படம் தயாரிக்காது என்று பேசப்பட்டது.

இப்போது அந்த பேச்சை பொய்யாக்கி விஜயகாந்தைக் கதாநாயகனாக நடிக்க வைத்து புதிய படம் ஒன்றை இராவுத்தர் பிலிம்ஸ் தயாரிக்கிறது.

[illegible]

[illegible] நடிக நடிகையர் தேர்வு நடந்து வருகிறது. ஒளிப்பதிவு ராஜராஜன்.

இயக்கம் [illegible] செல்வமணி. [illegible] அலிகான். விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் மற்றொரு புதிய படம் 'என் ஆசை மச்சான்'.

கதாநாயகியாக ரேவதி நடிப்பார் என்று தெரிகிறது.

இயக்கம்-ஆர்.சுந்தர்ராஜன். ஒளிப்பதிவு-ராஜராஜன். இசை-தேவா.

'[illegible]' படத்தில் உள்துறை அமைச்சராக நடித்துக் கொண்டிருக்கிறார் ராதிகா. முதலமைச்சர் விஜயகுமார். இதுவரை எடாத [illegible] எழுதுவதோடு நின்று புலவர் புலமைப் பித்தனும் நடிக்கிறார். அமைச்சர் வேடம்.

உள்துறை அமைச்சர் ராதிகா கொலையாகிறார். கொலைக்குச் சதித் திட்டம் தீட்டியவர்கள் பெயர் அடிபடுகிறது. உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் இரகசியப் போலீஸ் அதிகாரியாக வருகிறார் மன்சூரலிகான்.

போலீஸ் அதிகாரியாக நடிக்கிறார் [illegible].

ராதிகா இப்போது பட்டு பிஸி. குடும்பப் பொறுப்பு, [illegible] பொறுப்பு [illegible] இல்லை என்று கேட்டால்,

"இல்லவே இல்லை. நான் எப்போதும் ஜாலியாக இருப்பவள். எதையும் சுலபமாக எடுத்துக்கொண்டு சமாளிக்கத் தெரிந்தவள்" என்கிறார் ராதிகா.



காவேரி
படம்-படிக்கிற வயசில



## எப்பவும் நான் ஜாலிதான்! - ராதிகா

## ரஜினியின் சைக்கிள் சவாரி

[illegible]




ரமண்-ரோஜா
படம்-அதிரடிப்படை

அதிரடிப்படையில் ரோஜாவின் கவர்ச்சி கொஞ்சம் ஓவர் என்று விமர்சனங்கள்.

அப்படி ஒன்றும் ஓவராக நடித்துவிடவில்லை. தெலுங்கில் இதைவிட கவர்ச்சியாகவும் நடித்திருக்கிறேன். காதல் காட்சி என்றால் எட்டி நின்று வசனம் பேசிக்கொண்டிருந்தது அந்தக்காலம். இப்போதெல்லாம் அணைத்தபடி நெருங்கி நடித்தால்தான் எடுபடும் என்று துணிச்சலாக பேட்டி கொடுத்துள்ளார் ரோஜா.

கவர்ச்சிக்கு லிமிட் என்பதெல்லாம் சென்சாரைப் பொறுத்தது. கதைப்படி எவ்வளவு கவர்ச்சி தேவையோ அதன்படி நடிப்பதில் தப்பேயில்லை என்பது ரோஜாவின் வாதம்.

## "முத்தத்தில் இல்லை விரசம்" -சிவரஞ்சனி விளக்கம்

'காத்திருக்க நேரமில்லை' படத்தில் முத்தக் காட்சியில் நடித்திருந்தார் சிவரஞ்சனி.

உதட்டோடு உதடு இணைத்து முத்தம் கொடுப்பது கதைப்படி அமைந்த காட்சி. அதிலே எப்படி விரசம் இருக்க முடியும் என்று கேட்கிறார் சிவரஞ்சனி.

'வண்டிச்சோலை சின்ராசு' படத்தில் சத்யராஜின் தங்கையாக நடித்து வருகிறார். கதாநாயகி சுகன்யாதான் என்றாலும் சிவரஞ்சனிக்கு முக்கியத்துவமுள்ள பாத்திரம் அது.

கவர்ச்சிக் காட்சிகள் இரு படத்திலும் அவசியந்தானா? என்று கேட்டால் அவசியந்தான் என்று சொல்லும் சிவரஞ்சனி [illegible] இளமையும் உள்ள போதே கவர்ச்சி காட்டி நடித்துவிட வேண்டும் என்கிறார். அதாவது காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்கிறார்.



ரமண்-ஆனந்தபாபு-சிவரஞ்சனி
படம்-வீட்டோடு திருவிழா

## -காதலில் பிராந்துக்குப் பிடித்தவை-

பிடித்த காதல் பாடல்?
"[illegible] காயும் நேரம் சரணம். [illegible] போக நீயும் வரணும்."
பிடித்த காதலர்கள்?
லைலா மஜ்னு?
பிடித்த காதல் படம்?
'அலைகள் ஓய்வதில்லை.'

## அரசியலுக்கு வருவாரா சத்யராஜ்?

சத்யராஜும், மணிவண்ணனும் சமீபகாலமாக பொது விழாக்களுக்கு இணைந்தே செல்கிறார்கள். 'தினமணி' பத்திரிகை வைரவிழாவில் இயக்குநர் மணிவண்ணனிடம் ஒரு வாசகர் கேள்வி எழுப்பினார். "நீங்கள் இருவரும் ஏதாவது கட்சி தொடங்கப் போகிறீர்களா? உடனே மணி சொன்ன பதில், "தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்கள் வாழ்க்கையோடு விளையாடாதீர்கள். இருக்கின்ற கட்சிகள் போதாதா?" மணியான பதில். 'போர்வாள்' என்றொரு பத்திரிகையை மணிவண்ணன் ஆரம்பித்துள்ளார்.



## மோதி மிதித்துவிடு

"பாதகஞ் செய்பவரைக் கண்டால்-நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!-அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"
-மகாகவி பாரதியார்-

# பாப்பா முரசு



## கலங்கி நிற்காதே!



அம்மா கிட்டே சும்மா சும்மா
அடம் பிடிக்காதே!

அழுது புரண்டு எதையும் கேட்டு
முரண்டு பண்ணாதே

காசிருந்தா வாங்கித் தருவா
கலங்கி நிற்காதே!

பாசமுள்ள அம்மா நெஞ்சில்
நீயிருப்பதாலே— அவ
பசியைக் கூட மறந்துவிட்டு
உன்னைக் காப்பாளே!

-சு. நல்லேந்திரன்-

## சொன்னார்கள்

நாம் எதை இழந்தாலும் கௌரவத்தை மட்டும் இழக்கக்கூடாது. -**சேக்ரடிஸ்**-
ஒருவனிடம் இல்லாத குணங்களை இருப்பதாகச் சொல்லி புகழாதே. -**முகம்மது நபி**-
ஆசைகள் வளர வளர தேவைகள் பெருகிக் கொண்டே போகும். -**பிளேட்டோ**-
எல்லோரும் தம்மைவிட்டு, எதையோ சீர்படுத்த நினைக்கிறார்கள். -**தாகூர்**-
பாமர மக்களின் நிலையே ஒரு சமூகத்தின் உண்மை நிலவரமாகும். -**வில்லியம் தர்ஸ்டன்**-

# ஏட்டிக்குப் போட்டி!



பாப்பா முரசு சிறுகதை

மாடசாமி மகன் முத்துசாமிக்கு குறுக்கு வழியில் நடப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. எதையுமே நேர்மையாகப் பெறாமல் குறுக்கு வழியில் பெறுவதை விரும்பினான். ஏட்டிக்குப் போட்டியாகவே எதையும் செய்வான்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு மாமரத்தில் கைக்கெட்டிய தூரத்தில் ஒரு மாம்பழம் கனிந்து தொங்குகிறது என வைத்துக் கொள்ளுங்கள். அதை அவன் எட்டிப் பறித்து உண்ண முடியும். ஆனால் அவன் அதை அப்படிச் செய்யாமல் இரவு நேரத்தில் யாருக்கும் தெரியாமல் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டு அதன்மீது ஏறி நின்று பறித்துத்தான் சாப்பிடுவது வழக்கம்.

பத்து கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு ஊரைப்போய்ச் சேர வேண்டிய பாதையில் போகாமல் குறுக்கே கல்லும், முள்ளும் குத்த நடந்து போய்ச் சேருவான்.

ஒருநாள் அவனுக்கு உடல் நலம் சரியில்லாமல் போயிற்று. மாடசாமி அந்த ஊர் மருத்துவரை அழைத்து வந்து காட்டினார். அவர் பத்து மாத்திரைகளைக் கொடுத்துத் தினம் ஒன்று சாப்பிடச் சொன்னார். முத்துசாமிக்கு மருத்துவர் சொன்ன மாதிரி நடப்பதா என்கின்ற எண்ணத்தில் தினமும் அரை மாத்திரையே சாப்பிட்டு வந்தான். அதனால் நோய் குணமாகவில்லை.

மறுபடியும் மாடசாமி மருத்துவரிடம் போய் தனது மகனின் குறுக்குப் புத்தியைச் சொல்லி மருந்து கேட்டார்.

மருத்துவர் புத்திசாலித்தனமாய் முத்துசாமியின் குணத்தைப் புரிந்துகொண்டு மறுபடியும் பத்து மாத்திரைகளைக் கொடுத்து, "இந்த மாத்திரைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் சாப்பிடக்கூடாது. தினம் ஒரு மாத்திரையைத் தலையணைக்கு அடியில் வைத்துக்கொண்டு படுத்தால் போதும், நோய் குணமாகிவிடும்," என்று சொல்லி மாத்திரைகளைக் கொடுத்து அனுப்பி வைத்தார். மாடசாமி இந்த மாத்திரைகளை மகனிடம் கொடுத்து அவர் சொன்னதை அப்படியே சொன்னார்.

அதற்கு, "இவர் என்ன சொல்வது, நான் என்ன கேட்பது என்னுடைய காய்ச்சலுக்கு என் விருப்பப்படிதான் மருந்து சாப்பிடுவேன். தலையணைக்கு அடியே வைக்க மாட்டேன். கொண்டு வாருங்கள் தண்ணீரை, என்று கேட்டுப் பெற்று ஒரு மாத்திரையை விழுங்கினான். தினம் ஒரு மாத்திரையை அவன் சாப்பிட உடல் நலம் பெற்றது.

மாடசாமிக்குத் தன் மகனின் உடல் நலம் தேறியதில் சந்தோசம். இவனை இப்படியே விட்டு வைக்கக்கூடாது. ஒரு புத்திசாலிப் பெண்ணாகப் பார்த்துத் திருமணம் செய்துவைத்து விட்டால் இவனை அவள் திருத்தி விடுவாள் என எண்ணினான். ஆனால் முத்துசாமியை எப்படித் திருமணம் செய்து கொள்ள சம்மதிக்க வைப்பது? யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.

மாடசாமிக்கு நீண்ட நாள் நண்பர் ஒருவர் இருந்தார். அவருடைய மகளை தன் மகனுக்கு மணம் முடிக்க நினைத்தார். நேராக அந்த நண்பனைப் போய்ப் பார்த்தார்.

"என் மகனை உன் மகளுக்கு மணம் முடித்துத் தர நான் ஆசைப்படுகிறேன். அதற்காக நீ ஒன்று செய்ய வேண்டும். நான் தினமும் என் மகனை உன் வீட்டிற்கு அனுப்புவேன். அவன் வரும்போதெல்லாம் நீ உன் பெண்ணை, ஆண்களுக்கு எதிரில் வரக்கூடாது உள்ளே போ, என்று சொல் போதும். இந்த இரகசியம் நமக்குள் இருக்கட்டும்," என்றார்.

"சரி" என நண்பரும் தலையசைத்தார்.

மாடசாமி தன் வீட்டிற்கு வந்ததும், "தினமும் நீ என் நண்பன் வீட்டிற்குப் போகக் கூடாது. அவன் உன்னை அங்கே வரக்கூடாது என என்னிடம் சொல்லியிருக்கிறான்," என்று பொய் சொன்னார். உடனே முத்துசாமி, 'அவர் அப்படியா சொன்னார்? இன்று முதல் தினமும் அவரது வீட்டிற்குப் போவேன், என்ன செய்கிறார் பார்ப்போம்' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டு, அதே போல் போக ஆரம்பித்தான்.

அவனைப் பார்த்ததும் அவர் தன் மகளை உள்ளே போம்மா என விரட்டுவார். முத்துசாமிக்கு ஆத்திரம் வரும். "உங்கள் மகளை நான் கல்யாணம் செய்து கொள்கிறேன் பாருங்கள்." என ஒரு நாள் சவால் விட்டுப் போனான்.

இந்த விசயம் மாடசாமிக்குத் தெரிந்தது. "நீ அந்தப் பெண்ணை பார்க்காதே, நான் வேறு நல்ல இடத்தில் பெண் பார்க்கிறேன்," என்றார்.மறுநாள் முத்துசாமி அப் பெண்ணைத் திருமணம் செய்து வீட்டிற்குக் கூட்டிவந்து விட்டான், மாடசாமியும், அவரது நண்பரும் அவர்களுக்கு மாலைபோட்டு ஆசிர்வதித்தனர்.

'இப்படி ஏட்டிக்குப் போட்டியாக வேலை செய்பவர்களைத் திருத்துவது மிகவும் கடினம். அவர்களை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிக்க வேண்டும்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.04.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 34
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு -05.

பாப்பா முரசுக்கு உங்கள் சொந்த ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எழுதுங்கள்

பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ் - கிருலப்பனை.

## அறிவோம் மனதில் பதிவோம்



ஜெர்மன் மொழியில் 39 எழுத்துக்களைக் கொண்ட ஒரே வார்த்தை உள்ளது. இது ஜெர்மன் மொழி அகராதியிலும் இடம் பெற்றுள்ளது. 'சட்ட பாதுகாப்பு தரும் காப்பீட்டு (இன்சூரன்ஸ்) கம்பனிகள்' என்பது இந்த ஒரே வார்த்தையின் பொருள்.



உலகின் மிகப் பெரிய மத நிறுவனம் 'ரோமன் கத்தோலிக்க திருச்சபை'ஆகும். இதில் 1989ம் ஆண்டுப்படி 160 கர்தினால்கள், 754 ஆர்ச் சிஷப்கள், மூவாயிரத்து 246 பிஷப்கள், நான்கு இலட்சத்து ஆயிரத்து 479 பாதிரியர்கள், எட்டு இலட்சத்து எண்பத்தையாயிரத்து 645 கன்னியாஸ்திரிகள் உள்ளனர்.

அமெரிக்காவின் பிரபலமான விளையாட்டு 'பேஸ்போல்'. இது இங்கிலாந்தில் பெண்கள் விளையாடும் 'ரவுண்டர்ஸ்' விளையாட்டை ஒத்திருப்பதால் அது பெண்கள் விளையாட்டு என ஆங்கிலேயர் அமெரிக்கர்களை கேலி செய்தனர். (அக்காலத்தில்) இறுதியாக 1907ம் ஆண்டு பேஸ்போல் விளையாட்டின் தன்மையை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. 1839ல் ஆப்னர் டபிள்டே என்ற அமெரிக்க ஆண்தான் இந்த விளையாட்டைக் கண்டு பிடித்தார், எனக் கூறிய பின்னர் தான் அமெரிக்க ஆண்கள் நிம்மதி அடைந்தனர். அக்காலத்தில் ஆண், பெண் சமத்துவம் என்பதெல்லாம் கிடையாது..

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 31

### பரிசுக்குரியவர்

வி.திலகநாயகி
சிலாபம்.

### பாராட்டுக்குரியவர்கள்

எம்.ஜே.முகம்மது பஜ்ரி
றுக்கஹவில.

வி.பிரியலோசனி
பதுளை.

சிதம்பரப்பிள்ளை
மண்டூர்-1.

தானிய பிரான்சிஸ்
வின்சன்ட் உயர்தர பெண்கள் பாடசாலை
மட்டக்களப்பு.

அ.முஹம்மத் அஸாம்
சாஹிரா மத்திய கல்லூரி
புத்தளம்.

க.சி.பிரேம் ஆனந்
இ.இ.ச.ஸ்ரீகோணேஸ்வர இந்துக்கல்லூரி
திருகோணமலை.

யே.சைலஜா
அல்-ஹிலால் மத்திய கல்லூரி
நீர்கொழும்பு.

சி.சுதாகர்
மன்னம்பிட்டி தமிழ் ம.வி- மன்னம்பிட்டி.

## அறிந்து கொள்ள ஐந்து குறிப்புக்கள்:

### சீனி

- ***சீனி எதிலிருந்து எடுக்கப்படுகிறது?***
  கரும்பிலிருந்தும், சீனி பீட்றூட் (சுகர் பீட்றூட்) கிழக்கிலிருந்தும் சீனி எடுக்கப்படுகிறது.
- **எப்போதிருந்து கரும்பின்மூலம் சீனி எடுக்கப்படுகிறது?**



ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தியாவில் கரும்பிலிருந்து சீனி எடுக்கப்படுகிறது. இந்த முறை இந்தியாவிலிருந்து சீனாவிற்கும், அரேபியாவிற்கும் பரவி, அங்கிருந்து ஐரோப்பாவை அடைந்தது. 1493ம் ஆண்டு கொலம்பஸ் மேற்கிந்தியத் தீவுகளில் கரும்பைப் பயிரிட்டார்.

- **கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் சீனியும், பீட்றூட் (சுகர் பீட்றூட்)டிலிருந்து தயாரிக்கப்படும் சீனியும் ஒன்றுதான் என எப்போது தெரிந்தது?**
  ஜேர்மனியைச் சேர்ந்த இரசாயன விஞ்ஞானி அண்ட்ரியஸ் மார்கிராப் 1799ம் அண்டு இதைக் கண்டுபிடித்தார்.
- ***சீனி பீட்றூட் (சுகர் பீட்றூட்) கிழங்கிலிருந்து உலகில் மொத்தம் எவ்வளவு சீனி எடுக்கப்படுகிறது?***
  உலக சீனி உற்பத்தியில் 40 சதவீதம் சீனி பீட்றூட் (சுகர் பீட்றூட்) கிழங்கிலிருந்து எடுக்கப்படுகிறது.
- **மிக அதிக அளவில் உபயோகிக்கப்படும் செயற்கை இனிப்பூட்டும் இரசாயனம் எது?**
  அஸ்பார்டேம். சீனியை விட 200 மடங்கு அதிக இனிப்பு உடையது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# உலக சாதனை வரை கபில் தாண்டி வந்தவை

## ஸ்போர்ட்ஸ்

| | |
|---|---|
| 1-வது விக்கெட்: | சாதிக் முகமது (சி) கவாஸ்கர் 16-10-78, -பெயிஸ்லாபாத்) முதல் டெஸ்ட், 2-வது இன்னிங்ஸ் |
| 50-வது விக்கெட்: | கிம் ஹியூக்ஸ் (எல்.பி.டபிள்யூ) கபில் (1979-80, கான்பூர்) 16-வது டெஸ்ட் |
| 100-வது விக்கெட்: | டாஸ்ஸிம் ஆரிப் (சி) சவுஹான் (1979-80, கல்கத்தா) 25-வது டெஸ்ட் |
| 150வது: விக்கெட்: | ஆலன்லேம்ப் (எல்.பி.டபிள்யூ) கபில்தேவ் (1982, லோர்ட்ஸ்) 39-வது டெஸ்ட் |
| 200-வது விக்கெட்: | ஆண்டி ரொபர்ட்ஸ் (பி) கபில்தேவ் (1982-83, போர்ட் ஒஃப் ஸ்பெயின்) 50-வது டெஸ்ட் |
| 250-வது விக்கெட்: | ஆலன்லேம்ப் (சி) ரவிசாஸ்திரி (1984-85, பம்பாய்) 65-வது டெஸ்ட் |
| 267-வது விக்கெட்: | அஜந்தா டி மெல் (சி) சதானந்த விஸ்வநாத் (1985-86, கண்டி) பிஷன்சிங்பேடியின் சாதனை முறியடிப்பு, 71-வதுடெஸ்ட் |
| 300-வது விக்கெட்: | ஆர்.ஜெ. ரத்நாயக்க (பி) கபில் (1986-87, கட்டாக்) 83-வது டெஸ்ட் |
| 350-வது விக்கெட்: | மியாண்டத் (சி) அசாருதீன் (1989-90, கராச்சி) 100-வது டெஸ்ட் |
| 400-வது விக்கெட்: | மார்க் டெய்லர் (எல்.பி.டபிள்யூ) கபில்தேவ் (1991-92, பேர்த்) 115-வது டெஸ்ட் |
| 431-வது விக்கெட்: | அனுரா சிரி (சி) அசாருதீன் (1993-94, பெங்களூர்) 129-வது டெஸ்ட் |
| 432-வது விக்கெட்: | ஹாசன் திலகரத்னே (சி) மஞ்சுரேக்கர் (1993-94, அகமதாபாத்) 130-வது டெஸ்ட் |

## 431 விக்கெட்டுக்கள் ஹாட்லி-கபில் ஒப்பீடு

| | ஹாட்லி | கபில் |
|---|---|---|
| டெஸ்ட் | 86 | 129 |
| பந்துகள் | 21918 | 27506 |
| ரன்கள் | 9611 | 12768 |
| விக்கெட்டுக்கள் | 431 | 431 |
| சிறந்தபந்து வீச்சு | 9-52 | 9-83 |
| ஒரு இன்னிங்.5/விக். | 36 | 23 |
| ஒரு போட்டி/10விக். | 9 | 2 |
| ரன்கள் | 3124 | 5226 |
| சதங்கள் | 2 | 8 |
| அதிகபட்சம் | 151* | 163 |
| போளிங் சராசரி | 22.29 | 29.62 |
| பேட்டிங் சராசரி | 27.16 | 31.29 |



### கபில் விக்கெட் வீழ்த்திய விதங்கள்

| | |
|---|---|
| கேட்ச்: | 229 |
| கிளீன் போல்டு: | 90 |
| எல்.பி.டபிள்யூ.: | 110 |
| ஹிட் விக்கெட்: | 3 |
| மொத்தம் : | 432 |

### கபில்தேவ் பெற்ற விக்கெட்டுகள் நாடுகள் வாரியாக

| நாடுகள் | விக்கெட்டுகள் | டெஸ்டுகள் | மையங்கள் |
|---|---|---|---|
| இந்தியா | 219 | 66 | 15 |
| பாகிஸ்தான் | 45 | 16 | 5 |
| இங்கிலாந்து | 43 | 13 | 5 |
| ஆவுஸ்திரேலியா | 51 | 9 | 5 |
| நியூசிலாந்து | 13 | 6 | 4 |
| இலங்கை | 15 | 6 | 2 |
| மே.இந்தியத்தீவு | 35 | 9 | 5 |
| சிம்பாப்வே | 3 | 1 | 1 |
| தென்னாபிரிக்கா | 8 | 4 | 4 |
| 9 | 432 | 130 | 66 |

### கபில்தேவ் பெற்ற விக்கெட்டுகள்: ஒவ்வொரு நாட்டுக்கும் எதிராக-

| எதிரணி | விக்கெட்டுகள் | டெஸ்ட் |
|---|---|---|
| பாகிஸ்தான் | 99 | 30 |
| மே.இந்தியத்தீவு | 89 | 24 |
| இங்கிலாந்து | 85 | 27 |
| அவுஸ்திரேலியா | 79 | 20 |
| நியூசிலாந்து | 23 | 9 |
| இலங்கை | 45 | 14 |
| சிம்பாப்வே | 4 | 2 |
| தென்னாபிரிக்கா | 8 | 4 |
| 8 | 432 | 130 |

# சார்ஜா கிரிக்கெட்டில் இந்திய அணி! உடன்பாடு கண்டதால் விளையாட முடிவு!!

இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் விசேஷ பொதுக்குழுக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சார்ஜா கிரிக்கெட்டில் இந்தியா பங்குகொள்வது உட்பட பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்தக் கூட்டத்திற்குப் பிறகு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜக்மோகன் டால்மியா நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

சார்ஜாவில் வரும் ஏப்ரல் 12 முதல் 22ம் திகதி வரை நடைபெறவுள்ள ஒஸ்ரலேசியா கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ள 5 நாடுகளுடன் இந்தியாவும் அழைக்கப்பட்டிருக்கிறது. நீண்ட விவாதத்திற்குப் பிறகு சில நிபந்தனைகளுடன் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் சார்ஜா கிரிக்கெட் போட்டி அமைப்பாளர்களின் அழைப்பை ஏற்றுக்கொள்வது என்று தீர்மானித்துள்ளது.

நியூட்ரல் அம்பையர்கள், ஐ.சி.சி. ரெப்ரிகள், டெக்னிக்கல் கமிட்டியில் இந்தியாவின் பிரதிநிதி, தற்போதைய நிதி பெறும் 2 வீரர்களுக்குப் பதிலாக 3 வீரர்கள், பொதுவான பவிலியன் பிராந்தியம், அரங்கில் கட்டுப்பாடான சட்டம்-ஒழுங்கு போன்ற இந்தியாவின் நிபந்தனைகளை சார்ஜா கிரிக்கெட் போட்டி அமைப்புக் குழுவும் ஏற்றுக்கொண்டுள்ளதால் இந்த ஒஸ்ரலேசியா கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி கலந்து கொள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சம்மதித்துள்ளது. ஆனால் இதில் கலந்து கொள்ளலாமா? வேண்டாமா? என்பதனைப் பற்றி இறுதி முடிவு இந்திய அரசின் முடிவைப் பொறுத்தது.

அப்படி இந்திய அணி வீரர்கள் சார்ஜா சென்றால் இதில் கலந்து கொள்ளும் இந்திய வீரர்கள் அனைவரும் தலா ரூ.30 ஆயிரம் ஊதியமாகப் பெறுவார்கள்.

இந்த சார்ஜா கிரிக்கெட் போட்டியின் மூலம் நிதி பெறும் இந்திய வீரர்களைத் தாக்கல் செய்ய மூன்று கட்டமாக இந்திய கிரிக்கட் சபை தீர்மானித்துள்ளது. இதன்படி முன்னுரிமை 1976க்கு முன் ஓய்வு பெற்ற இந்தியக் கிரிக்கெட் வீரர்களுள் - அவர் குறைந்தது 20 டெஸ்ட்களாவது இந்தியாவுக்காக விளையாடியிருக்க வேண்டும். இரண்டாவது வாய்ப்பு 1976ம் ஆண்டுக்குப் பிறகு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றவர்கள். மூன்றாவது வாய்ப்பு தற்போதைய கிரிக்கெட் வீரர்கள்.

இந்தத் திட்டத்தின்படி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மூன்று வீரர்களைத் தேர்வு செய்துள்ளது. ரூசி மோடி, முன்னாள் கப்டன் எஸ்.வெங்கட்ராகவன், மற்றும் இந்திய அணியின் தற்போதை கப்டன் எம்.அசாருதீன்.

# தேன் கிண்ணம்

### மலை முகடு மூச்சென்போம்!

கொட்டுவோம்! கொட்டுவோம்!
கண்ணீர் முரசு கொட்டுவோம்!!
சட்டங்கள் போட்டு எம்மை
கட்டினாலும் என்ன நாங்கள்
கண்ணீர் முரசு கொட்டுவோம்!

பட்டுப்போன உடல்கள்
என்றும் பாடையிலே
போகும் வரை கண்ணீர்
முரசு கொட்டுவோம்!

கண்ணீர் எங்கள் ஊற்றம்மா!
கனன்று போகும் சொல்லம்மா!
பென்னம் பெரிய மலை முகடு
பேதைகள் எங்கள் மூச்சென்போம்!

உண்மைகள் உரைத்தது
கேளோம் நாங்கள்
உருகி உருகி அழுகின்றோம்!

நல்லார் தேயிலைச் செடிகள்தாம்
நமது வாழ்வு என்சொல்வோம்!

சொல்வார் செய்யார் இவர்களைத்தான்
செகம் முழுக்கக் காண்கின்றோம்!
எங்கள் வாழ்க்கை இதுதானா
மலையம்மா நீயும் விடை கூறு!
கண்ணீர் கொட்டிக் கேட்கின்றோம்!
கதறி அழுது மாய்கின்றோம்!

அக்குறணை-ஹரீரா அனஸ்.



### நாளை வருவேன்

என்-
காதல் வசந்தமே!
இது-
இதயத்தின் பாஷைகள்!
•
உன்-
புன்னகை என்பது
இயற்கையால்கூட
தரமுடியாத
இனிய தென்றல்தான்;
அதற்காக-
என் கேள்விகளுக்கு
பதில் சொல்லுவதற்காக
பயன்படுத்தாதே!
•
என்-
காதலைச் சுமக்கும்
கன்னிப் பெண்ணே...
இனியும்-
மௌன அம்புகளால்
மனதைத் தைக்காதே;
என்னை
நீ காதலிப்பதும்...
உன்னை
நான் காதலிப்பதும்..
இதயங்களுக்குத் தெரிந்த
இரகசியந்தானே!
•
நாம்-
காதல் சமத்துவம்
கண்ட பிறகும்
நீ மட்டுமேன்
நிலம் பார்த்து நடக்கிறாய்?
•
உன்-
தாமரை முகத்தின்
தரிசனத்துக்காக
நான்-
எத்தனை ஒழுங்கைகளை
சுற்ற வேண்டியிருக்கிறது..?
•
பெயரைக் கேட்டால்கூட
பேச மறுக்கின்றாயே...
உன் சம்மதத்தை
உன்-
புன்னகைகளாலேயே
புரிந்துகொண்டேன்;
என்றாலும்
நிரந்தர பதிலொன்று
நீ தர வேண்டும்.
•
அதற்காக
நாளை வருவேன்
வழமையான ஒழுங்கையின்
வழியாக!

-காத்தான்குடி அனு-



### போராட்டப் பூக்கள்

யதார்த்தத்தின் மடியில்
கருகும் இளம் பூக்கள்!
போர் என்று
புறப்பட்டால்...
ஒரு பூக்களம்
இங்கே
போர்க்களமாகும்!
□
உலகப் படத்தை
உருட்டிப் பாருங்கள்
வீரத் தழும்புகளில்லாத
வெற்றிகள் இல்லை-
பிணங்களும், ரணங்களும்
வெற்றிக்கு
சாமரம் வீசிய
விசிறிகள்!
□
மானுட அங்கீகாரம்
மறுக்கப்படுகிற போது,
போராட்டம் ஒன்றே
பொறுப்புமிக்க பணி!
இது
தண்ணீரைப்போல
தவிர்க்க முடியாதது.
□
எஜமான் வேலைக்கு
எந்தக் கொம்பனையும்
நாம்
ஏற்க முடியாது
எனினும்,
எல்லா சமூகமும்
சுமூகமாக இருப்பதே
சுகம்!

யாத்திரிகன்
வாழைச்சேனை-05.

### என் கவிதை யாருக்கு?

இனியவளே..
நாளுக்கு நாள்
ஊற்றெடுக்கும்
உன் அழகு
என் நெஞ்சத்தை
உருக்குலைத்து
கொண்டிருக்கின்றது.

நான்
பேனாவைத் தொட்டாலே
உன் பெயரைத்தான்
எழுத வேண்டும்
என்பது-யார்
கொடுத்த சட்டம்.

இங்கே
உடைந்து விட்ட
உறவுக்கு
சமாதான உயில்
எழுத
முயன்றபோது
உன் மௌனத்
தீயில்
சாம்பலாகின அனைத்தும்.

இனியவளே
இந்த விழியோர
அருவியை
மற்றவர் அறியுமுன்
எனக்கு மட்டும்
மெதுவாக சொல்லிவிடு...
என் கவிதை
நாட்டுக்கா...இல்லை.
என் நாயகி
உனக்கா...?

திதக்ஷலா-திருகோணமலை.

### சிகரெட்

நீ-
எரியும் போதுதான்
என்-
இதயம் குளிர்கிறது.
□
நீ-
நினைக்கலாம்,
இவனைக்,
"கொடியவன்" என்று
ஆனால்,
எனக்காக
எரியும் "உன்னை"
நான்
"தியாகி"யாய்
எண்ணுகின்றேன்.

விஜயகுமாரி
பெரியகல்லாறு-01.



### ஞாபக நெருப்பு

என்னவனே!
உன் ஞாபக நெருப்பில்
என் இதயம்
வெந்து
கொண்டிருக்கிறது
தினம் தினம்.

எஸ்.கே.வதனி
ரஜமல்வத்தை.

# இந்த வாரம் உங்கள் பலன்

(27.03.94 முதல் 02.04.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், புதன் |
| மேடம் | - வெள்ளி |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |
| கும்பம் | - சனி, செவ்வாய் |

சந்திரன் கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக் கலக்கம், வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| திங்கள்- | உதவிகள் கிட்டும், பெரியோர் சகவாசம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாசம், கௌரவம். | காலை 10 மணி |
| புதன்- | துயர் நீங்கும், முன்னேற்றம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| சனி- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், முன்னேற்றமுண்டு. | காலை 10 மணி |
| திங்கள்- | பொருளாதார முன்னேற்றம், உயர்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செய்தொழில் நன்மை. | பகல் 11 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, பொருளாதாரப் பேறு. | காலை 10 மணி |
| வியாழன்- | பணக்கஷ்டம், மனக் கவலை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, கீர்த்தி. | பி.ப 1 மணி |
| சனி- | தெய்வ நம்பிக்கை, இனசன மகிழ்ச்சி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | வீண் தொல்லை, முயற்சி மேன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப 1 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், மறைமுக எதிர்ப்பு. | காலை 10 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| சனி- | தனலாபம், காரிய சித்தி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தன்னம்பிக்கை, செய்தொழில் விருத்தி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, இனசனக் கொண்டாட்டம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வீண் பிரயாசம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| புதன்- | உத்தியோக மேன்மை, மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தனலாபம், காரியானுகூலம். | காலை 8 மணி |
| சனி- | வீண் செலவு, யோசனை மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணத்தட்டுப்பாடு, மனக் குழப்பம். | காலை 8 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 9 மணி |
| புதன்- | பணவரவு, காரிய சித்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வீண் தொல்லை நீங்கும், பணவரவு. | காலை 8 மணி |
| சனி- | செலவுக் கஷ்டம், மனப் பயம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த எண்ணம், மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள- | செய்தொழில் விருத்தி, கௌரவம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப 2 மணி |
| புதன்- | தெய்வ நம்பிக்கை, உயர்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- | அந்நியர் சகவாசம், மேன்மை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, பணத்தடை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | உத்தியோக உயர்ச்சி, முன்னேற்றம். | பகல் 11 மணி |
| புதன்- | வெளியிட வாசம், பெரியோர் நட்பு. | காலை 7 மணி |
| வியாழன்- | தன இலாபம், உயர்ந்த எண்ணம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, பொருள் நட்டம். | காலை 8 மணி |
| சனி- | செலவு மிகுதி, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக் கவலை நீங்கும், மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், குடும்ப மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| புதன்- | தெய்வ நம்பிக்கை, பொருள் பேறு. | பி.ப 2 மணி |
| வியாழன்- | வீண் பிரச்சனை நீங்கும், உயர்ச்சி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | தனவிருத்தி, செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| சனி- | வெளியிட வாசம், கௌரவம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பிரயாச மிகுதி, மனச் சந்தோஷம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | செலவு மிகுதி, பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளியிட வாசம், உயர்ச்சி. | பி.ப 3 மணி |
| சனி- | தெய்வ நம்பிக்கை, சுக மிகுதி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, உயர்ச்சி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | மனக் குறை நீங்கும், பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, முன்னேற்றம். | பி.ப 2 மணி |
| புதன்- | உத்தியோக உயர்ச்சி, கௌரவம். | காலை 10 மணி |
| வியாழன்- | தனலாபம், மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் பகை, வீண் கலகம். | காலை 10 மணி |
| சனி- | வெளியிட வாசம், செலவு மிகுதி. | பகல் 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மறைமுக எதிர்ப்பு, செய்தொழில் நட்டம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பணவரவு, காரியசித்தி. | பி.ப 2 மணி |
| புதன்- | நடைக்கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, பணக் கஷ்டம். | காலை 10 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| சனி- | மனக் கலக்கம், பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | உயர்ந்த எண்ணம, கௌரவம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண் தொல்லை நீங்கும், பணவரவு. | காலை 10 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மனக் கலக்கம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, ஆடம்பரச் செலவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 5

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✝ விந்தைகள்

## புற்றுநோய் என்றனர் மருத்துவர்கள்! பிறந்ததோ இரட்டைக் குழந்தைகள்!!





ஷரோன் மரினருக்கு அடி வயிற்றில் (கர்ப்பப்பையில்) புற்று நோய் என்று மருத்துவர்கள் தீர்மானித்துவிட்டனர். அந்நோயைக் கட்டுப்படுத்த மருந்துகளும் தரப்பட்டன. ஏற்கனவே மூன்று பெண் குழந்தைகளுக்குத் தாயான ஷரோன் கவலையில் ஆழ்ந்தார். கணவன் டேவிடும் மிகவும் வேதனைக்குள்ளானார்.

25 வயதான ஷரோனின் குழந்தைகளும் வயதில் குறைந்தவர்களே. மூத்த-பெண் ஹெய்லிக்கு 6 வயது. சாந்தெல்லாவுக்கு நாலும் கடைக்குட்டியான நட்டாஷாவுக்கு மூன்றும்- இந்தச் சின்னஞ்சிறுசுகளை யார் பராமரிப்பது என்பதுதான் இவர்களின் வேதனைக்கான முக்கிய காரணம்.

ஷரோனின் குடும்பத்தில் பலருக்கு கர்ப்பப் புற்றுநோய் இருந்தமையினால் இவருக்கும் புற்று நோய் தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டென்பதனால் புற்று நோய்க்கான மருத்துவம் தொடர்ந்தது. மருந்து உட்கொள்ளத் தொடங்கி நான்காவது நாளில் வலி அதிகமாகி இரத்தப் பெருக்கும் துவங்கியது. அடிக்கடி மயக்கமும் வரும்.

இதனால் மருத்துவர்கள் மருந்துகளை இரட்டிப்பாக்கியதுடன் வேறு பல மருந்துகளையும் சிபார்சு செய்தனர். ஆனால் ஷரோன் அந்த மருந்துகளை உட்கொள்ளாமல் இருந்துவிட்டார். மீண்டும் தன்னை பரிசோதனை செய்து பார்க்கும்படி மருத்துவர்களை வேண்டிக்கொண்டார்.

14 வாரங்களின் பின்னர் ஷரோன் பரிசோதனைக்குட்படுத்தப் பட்டபோது மருத்துவர்களே துணுக்குற்றனர்.

அவளுடைய வயிற்றில் இரு உயிர்கள் வளர்ந்து கொண்டிருந்தன. புற்று நோய் எனக்கருதிக் கொடுக்கப்பட்ட மருந்துகளும் கருவினை எதுவும் செய்யவில்லை என்பது மருத்துவர்களுக்கு மேலும் வியப்பினைத் தந்தது.

ஆரம்பகாலத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின்போது கர்ப்பம் தரித்துள்ளமை கண்டு பிடிக்கப்படாமற் போனமைக்கான காரணமும் அவர்களுக்குத் தெரியவில்லை. இருப்பினும் தவறுதலாகத் தன்னையும் தன் குழந்தைகளையும் கொன்றுவிடத்துணிந்த தன் மருத்துவர்கள் மீது கடுங்கோபமுற்றார். தான் 14 வாரக் கற்பமாக இருப்பதை தன் கணவனிடம் கூறி மகிழ்ச்சிக் கடலில் குதித்தார்.

உரிய காலத்தில் பிரசவ வேதனை கண்டது. மெலிசா முதலில் பிறந்தாள். அவளைத் தலைகீழாகத் தூக்கி மருத்துவர் பிடித்த வண்ணம் முதுகில் பல தடவைகள் தட்டினார். குழந்தையிடமிருந்து எந்த விதமான சப்தமும் வரவில்லை. இதனால் பலத்த சப்தம் போட்டு ஷரோன் அழ ஆரம்பித்தாள். ஆனால் அருகிலிருந்த தாதி- மற்றுமொரு குழந்தை இன்னும் வெளியே வராமலிருப்பதைச் சுட்டிக்காட்டி அதனை வெளியே எடுக்கும் முயற்சியிலீடுபடும்படி நினைவூட்டினாள். சற்று நேரத்துக்கெல்லாம் அன்ரனி பிறந்தான். அவன் அழ ஆரம்பித்ததும் மெலிசாவும் அழ ஆரம்பித்தாள். இதனால் ஷரோன் பூரிப்படைந்தாள்.

ஏற்கனவே பிறந்த குழந்தைகள் மூன்றும் பெண்ணாகப் பிறந்து இரட்டையர்களில் மூத்ததும் பெண்ணாகப் பிறந்தமையினால் சோர்வுடன் காணப்பட்ட ஷரோன் இறுதியாகப் பிறந்தது ஆண் என்பதை அறிந்து அளவிலா மகிழ்ச்சியாடைந்தாள். டேவிடும் ஏனைய குழந்தைகளும்கூட இறுதியாகப் பிறந்தது ஆண் என்பதனை அறிந்து துள்ளிக் குதித்தனர்.

## ஆண்டொன்று போக வயதொன்று ஏறும்! ஆண்டுகள் போயினும் எடை குறைந்தால் போதும்!!



"வயது அதிகமாகிக் கொண்டிருப்பவர்கள் தங்கள் ஆயுள் முடியப் போகிறது என்று கவலையடைய வேண்டியதில்லை. உங்கள் எடையைக் குறையுங்கள். தானாகவே உங்கள் ஆயுள் அதிகரிக்கும்."

ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் பொது நல்வாழ்வு மையத்தைச் சேர்ந்த ஆய்வாளரான டாக்டர் ஐ.மின் லீ என்ற மாது இவ்வாறு கூறுகிறார். 27 வருட ஆய்வின் முடிவில் இக் கருத்தினை டாக்டர் லீ வெளியிட்டுள்ளார். இதற்காக எலும்பும் தோலுமாக மெலிந்துவிட வேண்டியதில்லை என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

உயரத்துக்கேற்ற பருமனும், வயதுக்கேற்ற எடையும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டுப்பாட்டைப் பேணி வந்தால் அதிக காலம் உயிர் வாழ முடியும் என்று அவர் கூறுகிறார்.

ஹாவார்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளே இப்பரிசோதனைக்கு பயன் படுத்தப்பட்டுள்ளனர். 1960ஆம் ஆண்டுகளில் அவர்கள் ஒவ்வொருவரின் எடையும் பதியப்பட்டது. அவர்கள் அனைவரும் அப்போது தங்கள் 40வது வயதுகளில் இருந்தனர். 1988ல் மீண்டும் அவர்களுடைய எடைக்கணக்குகள் பரிசீலிக்கப்பட்டன. இந்த இடைப்பட்ட காலத்துள் இறந்தவர்கள் அத்தனை பேரும் எடை கூடியவர்களாகவே காணப்பட்டனர். 1960ல் எடை குறைந்தவர்களாக இருந்தோரில் ஆக 2 1/2 சதவிகிதமானோரே இருதய நோய்க்கிடமளித்திருந்தனர்.

27 வருடங்களின் பின்னர் எடுக்கப்பட்ட கணிப்பில் மொத்தத்தில் எடை அதிகம் கொண்டிருந்தவர்களின் இறப்பு விகிதம் மூன்றில் இரண்டு சதவிகிதமாகவிருந்தது. அதிக எடை ஆயுளைக் குறைக்கிறது என்ற உண்மை பலதரப்பட்ட பரிசோதனைகளிலிருந்தும் வெளிப்பட்டது என்று டாக்டர் லீ கூறுகிறார்.

இந்தப் பரிசோதனைகளில் புகைப்போர் எவரும் சேர்க்கப்படவில்லை என்று அவர் சொன்னார். புகைப்பவர்கள் பெரும்பாலும் உடல் மெலிந்து எடை குறைந்து காணப்படுவர். எனினும் அவர்களுடைய ஆயுள் மிக மிகக்குறைவு என்பது டாக்டர் லீயின் கருத்தாகும்.

அமெரிக்க அரசாங்கமும் நகர காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் வெளியிட்டுள்ள வயது-உயரம்-எடை பட்டியலில், எடையின் அளவு அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. ஆய்வுகளின் போது எடுக்கப்பட்ட தரவுகளின்படி மெலிந்தவர்களில் 20 சதவிகிதமானோர் 5 அடி 10 அங்குல உயரமுடையவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் 157 இறாத்தல் எடையுடன் கூடியவர்கள். அரசாங்கம் சிபார்சு செய்த கணக்குப்படி, இந்த அளவினரின் எடை 188இறாத்தலாக இருக்க வேண்டும். காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கணக்குப்படி இவர்களின் எடை 179 இறாத்தலாக இருக்க வேண்டும்.

"இந்த ஆய்வின்படி பார்த்தால் இவர்கள் எவரும் அடுத்து வரும் காலங்களில் ஒரு இறாத்தல் தானும் எடையில் கூடலாகாது. உங்கள் 20வது வயதில் எவ்வளவு எடையில் இருந்தீர்களோ அதே எடை 40வது வயதிலும் அதிகரிக்காமல் பார்த்துக் கொண்டால் நிம்மதியாக காலம் தள்ளலாம்" என்கிறார் பொஸ்டனிலுள்ள டீக்கொன்னஸ் மருத்துவ மனையில் சத்துணவு மற்றும் சிகிச்சைப் பிரிவின் இயக்குநரான டாக்டர் ஜோர்ஜ் பிளாக்பேண் என்பவர்.

### கையருகில் வைத்தியம்! மருத்துவக் குறிப்புக்கள்:

#### கடுக்காய்

தோடு போடும் இடத்தில் புண் வந்தால் கடுக்காயை இழைத்துப் போடலாம். புண் விரைவில் ஆறிவிடும்.

கடுக்காய்-பருப்பை நீக்கிவிட்டு பொடியாக்கிக் கொள்ளவும். இது துவர்ப்பு குணம் கொண்டது. இரவில் படுக்குமுன் சிறிது பொடியை நீரில் கலந்து குடியுங்கள். இரத்தம் சுத்தமாகும். ஜீரண உறுப்புக்கள் பலமடையும். மலத்தை இளகவைக்கும்.

#### தலை முடி கொட்டுகிறதா?

வெங்காயங்களை நன்கு நசுக்கிப்போட்டு முட்டையின் வெண்கருவை மட்டும் எடுத்து கலந்து தலையில் தேய்த்துக்கொண்டு ஊறவிடவும். பிறகு குளித்துவிடலாம். வாரம் ஒருமுறை இப்படிச் செய்து வந்தால் தலைமுடி கொட்டுவது நிற்கும்.

தேள், குளவி கொட்டிய இடத்தில் வெங்காயத்தை குறுக்காக இரண்டாக வெட்டி ஒரு துண்டை வைத்துத் தேய்க்க வேண்டும். கடுகடுப்பு குறையும்.



### முடியழகன்

வெளிநாடுகளில் முடி வளர்க்கும் ஆசை ஆண்களுக்கும் இருக்கிறது. படத்தில் உள்ளவர் ஒரு முடியழகர். அவரது வித்தியாசமான முடி அலங்காரத்திற்கு பங்ஸ்ரைல் என்று பெயர். பங்ஸ்ரைல் ஐரோப்பிய இளைஞர்கள் மத்தியில் கிடுகிடுவென்று பரவி வருகிறதாம். முடியழகில் பெண்களை ஓரம் கட்டும் முயற்சியோ?



# கொலை விழும் நேரம் 7



எழுதுவது: ரசிகன்





லீலா செடியில் இருந்து பிடுங்கி எறியப்பட்ட ரோஜா போல் தெருவோரத்தில் கிடக்க, செய்தியறிந்து ஓடிவந்து லீலாவின் அம்மா தலையில் அடித்துக்கொண்டு கதற, இன்று காலையில் புது மலர்போல் அழகாய், துள்ளலாய் வீட்டை விட்டுப் போனவள், இப்போது மூச்சின்றி, புன்னகை கருகி பிணமாய் கிடக்கும் நிலை பார்த்து விம்மியெழுந்த சோகத்தை வலுக்கட்டாயமாய் அடக்கியபடி, கதறும் மனைவியை கைத்தாங்கலாய் பிடித்தபடி லீலாவின் தந்தை சகல சோகங்களையும் முகத்தில் ஏந்தி நிற்க,

திருவிழாக்கால பொம்மைக் கடைகளை விழித்து, விழித்து வேடிக்கை பார்க்கும் குழந்தைகளைப் போல், வேடிக்கை பார்க்கும் ஆவல் ஒரு புறமும், கொலை என்று மனதில் உறுத்த பயம் மறுபுறமுமாய் கூடி நின்ற கூட்டம் தமக்குள் ஏதோ கிசு, கிசுப்பாய் பேச,

பொலிஸ் தன் கடமைகளை செய்துகொண்டிருந்தது. லீலாவைச் சுற்றி சோக் பீஸால் கோடு போட்டபடி,

"கூட்டம் கூடுது பார். என்னய்யா வேடிக்கை இங்கே? ஒரு கொலை, அதுவும் ஆறுதலா, கச்சிதமா அப்பீலே இல்லாமல் உயிரை எடுத்திருக்கிறான். ஒரு மடையன்கூட பார்க்கேல்லை. வேடிக்கை பார்க்க வந்திட்டாங்கள். துரத்தய்யா எல்லோரையும்."

என்று சார்ஜன் உத்தரவு போட, கொன்ஸ்டபிள், "போங்கைய்யா." என்று விரட்ட, போக மனமின்றி போவதுபோல் போக்குக் காட்டிக் கொண்டு கூட்டம் நிற்க,

"நிற்கப் போறீங்களா நில்லுங்க. இப்ப டி.ஐ.ஜி. வரப்போறார். சாட்சி சொல்லாட்டி கோவிந்தா. என்ன ஓகேயா?"

கொன்ஸ்டபிள் அதிர்வெடியாய் கேள்வி வீச கூட்டம் படு வேகமாய் இடத்தை காலி செய்தது.

சைரன் ஒலியோடு அம்புலன்ஸ் வர கூடவே டி.ஐ.ஜி. டென்சிலும் ஜீப்பில் வந்திறங்கி டென்ஷனோடு,

"என்ன ஏதாவது தடயம், தகவல்?"

ஏரியா இன்ஸ்பெக்டர் சிறீதரன். சல்யூட் மறக்காமல் வழங்கிவிட்டு,

"கத்தியால் குத்தப்பட்டிருக்கிறாள் சேர். எங்கே குத்தினால் உயிர் போகும் என்று தெரிந்து ஒரே குத்தில் காரியத்தை முடித்திருக்கிறான் சேர். கைதேர்ந்த கொலையாளி என்று தெரிகிறது சேர்."

"என்ன சிறீதரன் இதுதான் உங்கள் வேலையா? இதற்காகத்தான் உங்களுக்கு காக்கிச்சட்டை தந்து சம்பளம் தந்து கவாண்மென்ட் உங்களை வைத்திருக்கிறதா?"

"சேர்..."

"கொலையாளியை பாராட்டி ஒரு சேர்ட்டிபிக்கேட்டே வழங்கிவிடுவீரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது."

சிறீதரன் மௌனமாய் தலை குனிந்துகொள்ள பிணத்தின் அருகே போனார் டி.ஐ.ஜி.

இரத்தம் வழிந்து தெருவோர புழுதிமணலில் கலந்திருக்க, வெறித்த விழிகளோடு கிடந்த லீலாவின் வலது கரம் இறுக மூடியிருந்தது.

மனதில் சந்தேகம் உறுத்த நெருங்கி குனிந்து கரம் பிரிக்க,

ஒரு சிறிய தாள் தெரிய, டி.ஐ.ஜி. அதை எடுத்துக்கொள்ள முன்னரே, சட்டென்று வீசிய காற்றில் பட்டு பறந்தது தாள்.

"கொன்ஸ்டபிள் அந்த தாளைப் பிடியுங்கள்" என்று சொல்லி டி.ஐ.ஜி. நிமிர,

விரைந்து வந்த கார் ஒன்று தெருவைத் தேய்த்தது போல் ஒலி எழுப்பி பிரேக் அடித்து நிற்க,

காரின் சாரதி ஆசனக் கதவு திறந்தது,

தாள் பறந்து சென்று திறக்கப்பட்ட கதவருகே விழ, சாரதி ஆசனத்தில் இருந்து இறங்கி, குனிந்து அந்த தாளை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து டி.ஐ.ஜி.டென்சிலைப் பார்த்து புன்னகைத்தாள்-பிரியா.

கொன்ஸ்டபிள் விரைந்துபோய் தாள் கேட்டு கை நீட்ட,

கொடுப்பது போல் கையை முன்னே நீட்டிவிட்டு, மறு நொடியே கையை பின்னுக்கு எடுத்தபடி, கலகலவென்று சிரித்துக்கொண்டு,

அவள் சிரிப்பதை கோபத்தோடு பார்த்துக்கொண்டிருந்த டி.ஐ.ஜி. டென்சிலை நோக்கிவிட்டு, கீழே பிணமாய் கிடந்த லீலாவின் மீது விழிகள் செலுத்தி,

"ஓ...வெரி சொறி."

என்று சொல்லியபடி சிரிப்பை தூக்கியெறிந்துவிட்டு, சல்வார் கமீசுக்குள் தன் அழகுகளை சிறைவைத்திருந்த பிரியா டி.ஐ.ஜி.நோக்கி நடந்து போக, கூந்தல் காற்றில் படபடத்தது. இடது காதின் மேலே கூந்தலுக்குள் விரல்களை செருகி கோதிவிட்டபடி நடந்து போனதில் ஒரு நளினம் கண் சிமிட்டியது.

தாளை நீட்ட வெறுப்பாய் அவள் முகம் பார்த்தபடி வாங்கிக்கொண்ட டி.ஐ.ஜி. டென்சிலிடம், நிருபருக்கான அடையாள அட்டை எடுத்து காண்பித்தாள்.

அவளுக்கு முன்னால் தாளைப் பிரித்துப் பார்க்காமல், சட்டைப் பையில் பத்திரப்படுத்தி, அவள் நீட்டிய அடையாள அட்டை வாங்கி, அதில் செல்வி பிரியா தனுஷ்கோடி என்று பெயர் பார்த்து "அட...இவளா அது" என்று மனதுக்குள் நினைத்து நிமிர்ந்து முகம் பார்க்க,

"என்ன சேர் கொலைதானே இது?"

என்றாள் முகத்தில் சலனமே இல்லாமல்.

தொலைபேசியில் தன்னோடு பேசிய குரலையும், இப்போது பிரியாவின் குரலையும் மனதுக்குள் கொண்டுவந்து பொருத்தம் உண்டா என்று டி.ஐ.ஜி.டென்சில் ஆராய்ந்து கொண்டிருக்க,

"என்ன டி.ஐ.ஜி இது? ஒரே நாளில் மூன்று கொலைகள். கொலையாளி அல்லது கொலையாளிகள் இதுவரை மாட்டவேயில்லை. சோ...பொலிஸ் தும்பைவிட்டு வாலைப் பிடிக்கிறது. ஆம் ஐ.கரெக்ட்?"

சினமூட்டுவது போல் குரலில் நளினம் கலந்து கேட்டாள். உள்ளே எகிறிய கோபம் அடக்கி,

"பேசுவது சுலபம். மிகமிகச் சுலபம் மிஸ் பிரியா."

"தட்ஸ்ரைட் டி.ஐ.ஜி. பொலிஸ் அதிகமாகப் பேசுகிறது. வலைவிரித்து விட்டோம். தடயம் பிடித்துவிட்டோம், தகவல் திரட்டிவிட்டோம் எக்ஸ்ஸெட்ரா, எக்ஸ்ஸெட்ரா. ஆனால் செயலில் பெரிய வட்டம். ஐ மீன் பூச்சியம்."

"நீங்கள் சொல்வதில் நியாயமில்லை மிஸ் பிரியா. பொலிசுக்கு ஒத்துழைப்புத் தேவை. ஒத்துழைப்பவர்கள் குறைந்து கொண்டு வருகிறார்கள். ஏன் வம்பு என்று விலகி ஓடுகிறார்கள். ஓடிப்போய் நின்று அண்ணாந்து பார்த்து எச்சில் துப்புகிறார்கள். நஷ்டம் யாருக்கு? அசிங்கம் யாருக்கு? எல்லோருக்கும்தான். ஏன்? உங்களுக்கும்தான்."

"எனக்கா? வட் டு யூ மீன் டி.ஐ.ஜி. வட் டு யூ மீன்?"

"உங்களை ஒரு விசாரணைக்கு வரச் சொல்லியிருந்தேன்."

"சொல்லியிருந்தீர்கள். வந்தார். சொன்னார் வந்தேன். காத்திருக்க நேரமில்லை. திரும்பி வந்துவிட்டேன். இழுத்தடித்து வெறுப்பேற்றி, அலுப்பூட்டாமல் சுறுசுறுப்பாக எதையும் செய்ய வேண்டும் டி.ஐ.ஜி."

குறும்பாய் புன்னகைத்தாள். லீலாவின் உடல் அம்புலன்சில் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தது. டி.ஐ.ஜி. நேரே வந்துவிட்டதால் பொலிஸ் விறைப்பாகவும், துரிதமாகவும் இயங்கிக் கொண்டிருந்தது.

"என்னை எதற்காக வரச்சொன்னீர்கள் டி.ஐ.ஜி?"

"ரொம்ப அழகாக இருப்பீர்கள் என்று சொன்னார்கள். அதுதான் நேரில் பார்த்து இரசிக்கலாமே என்று."

எரிச்சலாக இருந்தது. பிரியா டி.ஐ.ஜி. சொன்னதைக் கேட்டு கலகலவென்று சிரித்தாள். இன்ஸ்பெக்டர் சிறீதரன் போட்டோ கிராப்பரோடு ஏதோ பேசிக்கொண்டிருந்தவர் திரும்பி பிரியாவை ஒரு மாதிரியாகப் பார்த்தார். எதையுமே லட்சியம் செய்யாமல், மெல்ல கிசுகிசுப்பான குரலில்,

"தாங்யூ டி.ஐ.ஜி. இரசிப்பதற்கு நேரில் என்னை எந்த மாதிரிப் பார்க்க விரும்புகிறீர்கள்?"

இவள் சாதாரண பெண்ணல்ல. இராட்சசி. என்று மனதில் நினைத்து, என்றாலும் இவள் குரலை மாற்றிப் பேசியிருந்தால்கூட தொலைபேசியில் கேட்ட பெண் குரலோடு இவள் குரலை ஒட்டவைக்க முடியாதே என்று யோசித்து, எதற்கும் விட்டுப் பிடிக்கலாம் என்று நினைத்து,

"ஓகே மிஸ் பிரியா. உங்களிடமும்



"உன்னை எழுதாவிட்டால் அது
கவிதை இல்லை.
உன்னை வரையாவிட்டால் அது
ஓவியம் இல்லை.
உன்னை நினைக்காவிட்டால் அது
இதயம் இல்லை.
உன்னை அணைக்காவிட்டால் அது
வாழ்க்கையுமில்லை.
நீ தொட்டுத்தந்த பரிசுதான் இந்த மீசை.
நீ சிரித்த மிச்சம்தான் இந்த இசை."

–அறிவுமணி

காயத்திரியிடமும் ஒரு உதவி கேட்கலாம் என்று ஐ.மீன் இந்த கேஸ் விசயமாக. என்று நினைத்தேன். இப்போது தேவையில்லை. தேவைப்பட்டால் சொல்கிறேன்."

"என்ன உதவி என்று..."

"இப்போது அறியத்தேவையில்லை. நீங்கள் போய் வரலாம்."

தோளில் தொங்கிய கைப்பையில் இருந்து விசிட்டிங் கார்ட் எடுத்து கொடுத்தாள். கையடக்கமான விசிட்டிங் காட்டின் இடதுபுற மேல் மூலையில் சிவப்பு நிறத்தில் சின்னதாய் அழகாய் அச்சிடப்பட்டிருந்தது ரோஜாப்பூ.

நிரோசாவின் அறையில் நசுங்கிப் போயிருந்த ரோஜாப்பூ டி.ஐ.ஜியின் மனக் கண்ணில் தெரிய, விசிட்டிங் காட்டை ஆர்வமாய் கூர்ந்து பார்த்துவிட்டு நிமிர, சல்வார் கமீஸ் இறுக்கத்தில் பின் அழகுகள் போராட காரை நோக்கி சென்று கொண்டிருந்த பிரியா,கதவை திறந்து, உள்ளே ஏறுவதற்கு முன் தலையை திரும்பி சாய்த்து டி.ஐ.ஜியைப் பார்த்து ஒரு புன்னகை எறிந்துவிட்டு, குகைக்குள் மறைந்த மான் குட்டிபோல், உள்ளே புகுந்து கதவு சாத்தி, என்ஜினை உயிரூட்டினாள். பாதிவட்டம் போட்டு திருப்பி விரைந்தது கார்.

கவனித்துக்கொண்டேயிருந்த டி.ஐ.ஜியின் கண்ணில்பட்டது அது. காரின் பின்புறக் கண்ணாடியில் ஒட்டப்பட்டு சிரித்துக் கொண்டிருந்த ரோஜாப்பூ.

■

சித்ரா சாரங்கனை நோக்கி எழுந்தபோது, கதவு தட்டி உள்ளே வந்து,

"டி.ஐ.ஜி. வந்துவிட்டார்."

என்று பியோன் செய்தி சொல்ல, மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

அறையைவிட்டு வெளியே போகும்போது சாரங்கனின் அருகில் போய், மெல்லிய குரலில் காதோடு சொல்வதுபோல் சித்ரா சொன்னாள்,

"சாரங்கன் உன் கோரிக்கைக்கு நான் ஓ.கே."

அவள் நெருக்கமாய் அருகில் வந்து பேசியதால், காலையில் அவள் போட்டுக்கொண்ட விலை உயர்ந்த சென்றின் வாசனை இப்போதும் இருந்து சாரங்கனின் மனதை சித்ராவின் வாசனையாய் சலனப் படுத்தியது.

எவரும் வெளியே போகவில்லை என்பதை கேட்டறிந்து, யாரும் விசாரணைக்கு தப்ப நேரத்தை காரணம் சொல்லி நழுவிச் செல்லவில்லை என்பதை உறுதிப் படுத்திக்கொண்டு, அனைவரையும் அலுவலக முன் ஹோலுக்கு அழைத்து, பொதுப்படையாகப் பேசினார் டி.ஐ.ஜி. டென்சில்.

"மன்னித்துக்கொள்ளுங்கள். இன்று மரண நாள். ஹரிகரன் மட்டுமல்ல, இன்னும் இருவர் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள்."

ஊழியர்கள் முகங்களில் அதிர்ச்சி பரவியது.

"அதனால் ஏகப்பட்ட வேலைகள். உங்கள் உதவி மிகத் தேவை. அதனால் யாரும் வெளியூர் செல்ல வேண்டாம். தேவையான போது அழைக்கப்படுவீர்கள். இப்போது நீங்கள் போகலாம்."

கொலையானவர்கள் யார் என்று டி.ஐ.ஜி. சொல்லாமல் விட்டதால் யாராக இருக்கும் என்று நினைத்தபடி, குசுகுசுத்தபடி அவர்கள் கலைய,

ஹரிகரனின் அறைக்குள் சென்றார் டி.ஐ.ஜி. பத்து நிமிடம் கழித்து டி.ஐ.ஜி. வெளியே வந்த போது அனைவரும் போயிருந் தார்கள். மனேஜர் மனோகர், முன்ஹோல் சோபாவில் இருந்தவன், டி.ஐ.ஜி. வெளியே வர எழுந்து கொண்டான்.

"எல்லோரும் போயாச்சா மனோகர்?"

"யெஸ் சேர். நான், சித்ரா, உதவி மனேஜர் சாரங்கன் மட்டும்தான் இருக்கிறோம்."

"ஐஸீ. வெளியே இரண்டு கொன்ஸ்டபிள்கள் போட்டிருக் கிறோம். விசாரணைகள் முடியும் வரை இருப்பார்கள். ஓகே. மனோகர் நாம் மீண்டும் சந்திக்கலாம்."

விடைபெற்று செல்லும் டி.ஐ.ஜியைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு தன் அறையை நோக்கிப் போனான் மனோகர்.

உதவி மனேஜர் சாரங்கனின் அறை ஏசி செய்யப்பட்டிருந்தது.

மேசையில் இருந்த இண்டர் கொம் கிசகீ என்றது.

இரட்டை சோபாவில் சித்ரா இருக்க, எதிரே உள்ள சோபாவில் இருந்த சாரங்கன் எழுந்துபோய் இண்டர்கொம் ரிசீவர் எடுக்க,

"டி.ஐ.ஜி. போயாச்சு" என்றான் மறுமுனையில் மனோகர்.

ரிசீவரை சாத்திவிட்டு சித்ரா வைப் பார்த்து கண்ணடித்தார் சாரங்கன்.

சாரங்கன் நடுத்தர வயதில் இருந்தார். காதோரத்தில் நரை எட்டிப்பார்க்கத் தொடங்கியிருந்தது. தினசரி செய்யும் யோகாவின் உபயத்தில் உடலை கட்டுக்கோப்பாக வைத்திருந்தார்.

இரட்டைச் சோபாவில் சித்ராவின் அருகே வந்து அமர்ந்து,

"டி.ஐ.ஜி. போயாச்சாம். மனோகர் சொல்கிறான்."

சொல்லிக்கொண்டே தோளில் கைபோட்டு தன்னை நோக்கி சித்ராவை நகர்த்தி அணைத்தார். மறுப்பின்றி நெருங்கி, சாரங்கனின் மெல்லிய நீலக் கோடுகள் போட்டிருந்த வெள்ளை நிற சட்டையின் மேல் பொத்தான் இரண்டை விலக்கி, யோகாவின் உபயத்தில் திரண்டிருந்த அவர் மார்பில் விரல்களால் மெல்ல வருட சாரங்கன் சரணாகதியரங்கனாகிக் கொண்டிருந்தார். சித்ராவின் தோளில் இருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தது சாரங்கனின் கரம்.

■

நிரோசா நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தாள். வீட்டின் வெளியே பொலிஸ் விழித்துக் கொண்டிருந்தது.

தெருமுனையில் குப்பைத் தொட்டிக்கு அருகே படுத்துக் கொண்டிருந்த நாய் ஒன்று அவன் வருவதைப் பார்த்து எழுந்து நின்று குரைத்தது.

அவன் அலட்சியம் செய்துவிட்டு உதடு குவித்து விசில் அடித்தபடி நடந்தான்.

சிறிது தூரம் வந்து குரைத்துவிட்டு நாய் ஓய்ந்துபோய் திரும்பியது.

அவன் இப்போது பிரசாத் வீட்டின் பின்புறமாய் வந்து நின்றான்.

சுற்றிலும் ஒரு முறை கவனித்துக் கொண்டான்.

யாரும் கவனிக்கவில்லை என்று நினைத்துக்கொண்டு பின்புறம் இருந்த ஆள் உயர மதில் மீது ஒரு பூனைபோல் தாவி ஏறினான்.

காலுக்கு ஸ்போட்ஸ் சப்பாத்து அணிந்திருந்தான். சுவரில் இருந்து உள்ளே குதித்தபோது சத்தம் காட்டாமல் உதவியது அது. நிமிர்ந்து சருகுகளில் மிதித்துவிடாமல் கவனமாய் நடக்கத் தொடங்கினான்.

"நிரோசா நீ இன்று தப்பவே முடியாது." என்று மனதிற்குள் கறுவிக்கொண்டான்.

அவன் உள்ளே குதித்து இரு நிமிடம் கழிந்துபோக, மதில் மீது தாவி ஏறி இருபுறமும் பார்த்துவிட்டு உள்ளே குதித்தது இன்னொரு உருவம். இடுப்பை தொட்டுப் பார்த்துக் கொண்டது. முகத்தில் திருப்தி தெரிய, இருளில் கண்களை கூர்மையாக்கிப் பார்த்தது.

முன்னால் அவன் அசைவு தெரிய மெல்ல நடந்து தொடர்ந்தது.

முன்னால் நடந்தவனுக்கு மனதில் ஏதோ உறுத்தலாய் பட சடுதியாக பின் நோக்கித் திரும்பினான்.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே. கிருபைராஜா
வயது: 33
முகவரி: சிங்கள மகாவித்தியாலய வீதி, அக்கரைப்பற்று-9.
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்பு, பூந்தோட்டம் வளர்த்தல், ரீ.வி. பார்த்தல், புகைப்படம் எடுத்தல்.



பெயர்: கே. சிவராம்
வயது: 24
முகவரி: இல. 240, மகாவித்தியாலய மாவத்தை, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், ஆக்கங்கள் எழுதுதல்.



பெயர்: எஸ். ஸாஹிர்
வயது: 21
முகவரி: 16, லங்கா பெஷன், முகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: பாத்திமா சுசானா
வயது: 23
முகவரி: 319/7, லெயார்ட்ஸ் புறோட் வே, கொழும்பு-14.
பொழுதுபோக்கு: புத்தகம் வாசித்தல், சினிமா பார்த்தல்.

பெயர்: கே. இன்பகுரு
முகவரி: No.162, AVENUE JEAN LOLIVE. 93500, PANTIN FRANCE.
பொழுதுபோக்கு: நண்பர் தொடர்பு, பத்திரிகை, தொலைக் காட்சி, நாவல்கள், தொலைபேசி காட் சேர்த்தல்.

பெயர்: எம். றிஸ்வி
வயது: 17
முகவரி: 16, மத்திய வீதி, காத்தான்குடி-4.
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்பு, முத்திரை சேகரித்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.

பெயர்: கே. ஜெயகௌரி
வயது: 18
முகவரி: கோபாலபுரம், நிலாவெளி.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், நாவல் படித்தல்.

பெயர்: எஃப். சரீஹா
வயது: 16
முகவரி: இல.07, கெடபேரிய, அரணாயக.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை, கொழும்பு-05.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# திசை மாறும் உணர்வுகள்

அம்தூரவல்ல நிலாவாசன்

தா டைக்கு விரல்களை தாங்கலாய்க் கொடுத்து சிந்தனையில் இருந்த ஷானாஸ் 'க்ளுக்' சத்தம் கேட்டு நிமிர்ந்தான். பக்கத்தில் அவனையே பார்த்துக் கொண்டிருந்த மும்தாஜ் 'என்ன சிந்தனை' என்று விழிகளால் கேட்டாள்.

ஷானாஸின் உள் மனம் பெருமூச் சொன்றுக்கு பிரியாவிடை கொடுத்தது. 'எதுவுமில்லை...' என்று சொல்வதுபோல் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டான்.

"நீ பொய் சொல்ற..." உதடுகளால் உச்சாடணம் செய்த மும்தாஜ் அவன் பக்கத்தில் வந்தமர்ந்து அவள் விரல்களால் அவன் தலையில் தேரோட்டம் நடத்திக்கொண்டே கேட்டாள். "பிரச்சனைகளுக்காக கவலைப் படுகிறாயா ஷானாஸ்?"

ஷானாஸ் விரக்தியாகப் புன்னகைத்தான். "பயம் பிரச்சனைகளுக்காக இல்லை மும்தாஜ். எதிர் காலத்துக்காக.."

அவனது பதிலைக் கேட்டு 'க்ளுக் க்ளுக்' என சலவைக் கற்களை கொட்ட ஆரம்பித்தாள் மும்தாஜ். அவளது கண்களில் மின்னலாய்த் தெரிகிற தன்னம்பிக்கையும் பிரச்சினைகளைப் புறக்கணிக்கிற மனப் பக்குவமும் அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"எதுக்காக சிரிக்கிறாய்?" அவன் வெறுப்போடு கேட்டான்.

"அப்போ உன்னைப் பார்த்து அழச் சொல்கிறாயா..? ஏழ்மைக்கு வடிவமும் விடிவுக்கு விலாசமும் எழுதுகிற எழுத்தாளன் நீ..நீயே தன்னம்பிக்கையை தவிடுபொடியாக்கி எதிர்காலத்துக்காக பயப்படலாமா?"

"உன் வாதம் எனக்குப் புரிகிறது மும்தாஜ். நான் பயப்படுவது எனக்காக அல்ல. என் தங்கைகளின் எதிர்காலத்துக்கா..." சொன்ன ஷானாஸின் கண்களில் சூன்யம் தெரிந்தது.

"தங்கைகளின் எதிர்காலம்...?" மும்தாஜ் மனதுக்குள் எண்ணிப் பார்த்தாள். அவன் பிரச்சனைகள் அவளுக்கு புதியவை அல்ல. எதனையும் அவன் அவளிடம் மறைத்ததும் இல்லை. காரணம் இருவரும் காதலர்கள் என்பதுதான்.

"ஷானாஸ் உனக்கு நல்ல காலம் பிறக்கத்தான் போகிறது. உன் தங்கைகள் நல்லபடி வாழ்க்கைப் படத்தான் போகிறார்கள்.." என்று தன் பங்குக்கு அவனுக்கு தன்னம்பிக்கை ஊட்டிய மும்தாஜின் எண்ணத்திலும் அவனின் நிலைக்காய் அனுதாப அலைகள் வீசின.

"ராக்கோழி கூவி ராத்திரிகள் விடிந்த தில்லை. என்ன சீர்திருத்தத்தைப் பேசினாலும் எழுதினாலும் நானும் ஒரு ராக்கோழிதான்.." சொன்ன ஷானாஸ் முகட்டை வெறித்துப் பார்த்தான்...

"சிட்டுக் குருவிகளுக்கு யுத்த பிரகடனம் படித்துக்கொடுக்க வேண்டும் என்று அல்லாமா இக்பால் சொன்னதாய் அடிக்கடி சொல்வாயே, மறந்து விட்டாயா..?" மும்தாஜ் பதிலுரைத்தாள், அவனது தன்னம்பிக்கைகள் தளரக்கூடாது எனும் எண்ணத்தில்.

"இன்றைய சிட்டுக் குருவிகள் எல்லாம் சமூகத்தின் கொடிய தரங்களுள் காரியம் நடத்திக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் இன்றைய இளம் பெண்கள் சீதனத்துக்காக சிறகிழந்து போயிருக்கிறார்கள் மும்தாஜ்."

"உன் எண்ணம்தான் அப்படி. ஆனால் உன் எழுத்துக்கள் ஆயிரம் சிட்டுக்குருவிகளுக்கு சிறகு கொடுக்கப் போதும். உன் எழுத்துக்களில் ஒடுகிற ஜீவ உணர்வுகள், எதிர்கால இளைஞர்கள் சீதனத்தை சிதறடிப்பதற்கான வித்துக்கள். ஆயிரம் கன்னிகள் அதனால் களிப்பைச் சூடுவார்கள்."

மும்தாஜின் தைரியமூட்டலைத் தவிர்க்க முடியாமல் எழுந்தான் ஷானாஸ். அவனது மனத்துள் சோக முகாரிகள் சூடேறிக் கொண்டிருந்தன. சொன்னான்,

"எதிர்கால சிட்டுக்குருவிகளுக்கு சிறகு முளைப்பது இருக்கட்டும். இப்போது என் தங்கைகளுக்கு வாழ்க்கை வேணும்."

"வாழ்க்கை ஒரு வரம் ஷானாஸ். இறைவன் எல்லோருக்கும் எழுதி வைத்தது தான் வாழ்க்கை. அதை மீறி எதுவும் நடக்கப் போறதில்லை. அவன் காப்பான். வழியும் காட்டுவான். நாம் அவசரப் படக்கூடாது."

"நான் அவசரப்படவில்லை என்று காலம் தாமதித்து நிற்பதில்லை. முதுமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் என் தங்கைகளை கரையேற்ற தன்னம்பிக்கைகள் கை கொடுக்கப் போவதில்லை. காசுக்கு வழி வேணும் மும்தாஜ்.." சொல்லிக்கொண்டு போன ஷானாஸின் குரல் பிசிரடிக்க ஆரம்பித்தது. கண்களில் லேசான பனித்திவலைகள்.

மும்தாஜின் முகத்திலும் கவலைக் கோடுகள் காரியமாற்றின. தன் காதலன் கஷ்டப்படும்போது கை கொடுக்க முடியாத தனது ஏழ்மையை நினைத்து அவள் மனம் வேதனைப்பட்டது. என்ன செய்வது? ஏழ்மை அவளையும் ஏலத்தில் எடுத்திருக்கிறது. உள்ளத்துள் உடைந்து போன நம்பிக்கைகள் கண்களை நனைத்துவிட எத்தனிக்க.... சுதாகரித்துக்கொண்டு "ஷானாஸ்..." என்றாள்.

"ம்" என்றான் ஷானாஸ். அவன் முகம் இறுகியிருந்தது.

கேள்விக்குறியோடு பார்த்த ஷானாஸை ஒரு புன்னகையால் புடம் போட்டு விட்டுச் சொன்னாள் மும்தாஜ்,

"உன் பொறுப்புக்கள் முடியும்வரை என் கனவுகள் உனக்காகக் காத்திருக்கும்."

•••

"பெண் நிலை வாதத்தை சித்தரிக்கும் உங்கள் கதைகளுக்கு என்றும் முன்னுரிமை யளிக்கும் எமது பத்திரிகை உங்கள் தொடர் கதையொன்றைப் பிரசுரிக்க சித்தமாய் இருக்கிறது..."

"சீர்திருத்த முறைகளுக்கு சிறகு கட்டும் உங்கள் 'அவனும் அவளும்' நாவலுக்குப் பிறகு இன்னுமொரு தொடரை எம் பத்திரிகை எதிர்பார்க்கிறது. ஒத்துழைப்புத் தருவீர்கள் என்று நம்புகிறோம்."

இரண்டு கடிதங்களும் இரண்டு பிரதான பத்திரிகைகளில் இருந்து வந்தவைகள். படித்துவிட்டு பெருமூச்சு விட்டான். 'என் எழுத்துக்களுக்குள்ள மதிப்பு என் தங்கைகளை வாழ வைக்காது.' என்று தனக்குள் முணு முணுத்தான். முகட்டைப்பார்த்து வெறித்தான்.

"ஷானாஸ்.."

பழக்கப்பட்ட தொய்வான குரல். ஆனால் அவன் மீதுள்ள நம்பிக்கையில் பஞ்சமில்லை. தலையைத் திருப்பி "உம்மா." என்றான்.

"அவர்கள் முடிவு கேட்டிருக்கிறார்கள்."

அவர்கள்...? நஸீர் ஹாஜியார் வீட்டு சம்பந்தம். பெண்ணுக்கு அது இது என்று ஊருக்குள் பேச்சடிபடுகிற இடம்.

அவனுக்குள் மும்தாஜ் வந்து போனாள்.



முகத்தில் சோபை தளர்ந்து சோகம் நிறைந்தது.

"நீ சம்பாதித்து எப்போது சடங்குகளைச் செய்யப் போகிறாய்? இது நல்ல சந்தர்ப்பம்..." அம்மாவின் குரலில் நம்பிக்கை இருந்தது. இந்த சம்பந்தத்தினால் அவன் மீது இன்னும் அபாரமான நம்பிக்கை வைத்திருக்கிறாள்.

ஷானாஸ் விரக்தியாகச் சிரித்தான். மனதுக்குள் மும்தாஜுக்காக அழுதான்.

"என் வாழ்வு உன்னோடுதான்..." என்று இலட்சியம் வைத்திருப்பவள் அவள். 'உன் வரவுக்காய் என் பொழுதுகள் என்றைக்கும் புலர்ந்திருக்கும்.' என்று புதிய தத்துவம் புனைந்திருப்பவள் அவள்.

ஷானாஸ் என்னும் எழுத்தாளனின் விசிறியாக இருந்து நட்புக்குள் வந்து காதலியாக மாறியவள். 'இவனே கணவன்' என்று கனவு கண்டு கொண்டிருப்பவள்.

அவனுக்குள் அவள் வந்த நாட்களில் இருந்து அவனது எழுத்துக்களில் புதிய ஜீவன் ஓடிக்கொண்டிருப்பதாகவே அவன் உணர்கிறான். 'பரிசுகள் கூட உன் ராசியால்தான்' என்று அவளுக்கு பாமாலை சூடிய நாட்கள் அவனுக்குள் பசுமையாய் நிற்கின்றன. ஆனாலும் அவனால் என்ன செய்ய முடியும்!

இப்போது தன் உணர்வுகளுக்காக வெட்கப்பட ஆரம்பித்தான் ஷானாஸ். மும்தாஜிடம் பணமிருந்தால் அவனை அடகு பிடித்துக் கொண்டு அவன் தங்கைகள் வாழ்வு பெற வழி அமைக்கலாம். ஆனால் அவளோ...

ஏழை வீட்டு கவர்ச்சிப் புறா....ஆனால் வரட்சிப்புறா- எங்கள் ஜனநாயகத்தைப் போல.

"மலையின் உச்சியிலிருந்து வீழ்கிற வனுடைய நிலையை விட மோசமானது காதல்" என்றான் ப்ளாட்டஸ்.

"காதலே நீ ஒரு துன்பக் கடவுளாவாய்' என்று கதறினான் பைரன். அந்த வார்த்தைகளுக்கும் தனது காதலுக்கும் ஏதோ ஒரு இணைவு இருப்பதாக உணர்ந்தான் ஷானாஸ்.

"உம்மா அந்தப் பொண்ணுக்கு ஏதோ..." என்றான் மென்மையாக.

"அது வந்து.... ஊரவர்கள் ஆயிரம் சொல்வார்கள். நம்பிவிடுவதா? அந்தப் பொண்ணுக்கு சின்ன வயசில ஏதோ...." என்று அம்மா வார்த்தை வராமல் தடுமாற... ஷானாஸின் முகத்தில் விரக்திப் புன்னகை விடையாய் வந்து பூத்து உதிர்ந்தது.

"அது என்னமோ படிக்கிற காலத்தில கொஞ்சம் பைத்தியம் இருந்ததாம். வைத்தியம் பார்த்து சுகமாக்கி விட்டார்களாம்."

அம்மாவின் சமாளிப்பை மனதிற் கொள்ளாமல் மீண்டும் கேள்வி நெய்தான் ஷானாஸ்.

"அடிக்கடி வருவதா...?" என்று அவன் முடிவுக்கு முன் அம்மாவின் முகம் சூடேற ஆரம்பித்தது.

"ஆமா...அடிக்கடி வந்தா என்ன? கட்டிப் போட்டு விட்டு உன் எழுத்தைக் கவனி. வக்கில்லாத எழுத்து.."

ஷானாஸ் கருக ஆரம்பித்தான்.

"இந்தா பார். உன் தங்கச்சி மூன்று பேர் வாழ்க்கைக்கும் வழி செய்றதா சொல்லி இருக்காங்க. உனக்கு வேல, கை நிறையக் காசு, கார், பங்களா வசதி, ஹ்ம். சாகிற காலத்திலயாவது நான் நிம்மதியா கண்ண மூடணும்."

பொரிந்த உம்மா அனல் கக்கப் பார்த்து விட்டு அப்பால் நகர அவன் விழித்திரையில் லேசான பனித்துளிகள்.

இந்த நாடே புகழுகிற கலைஞன். காசுக்கு வக்கில்லாததினால் கவலைகளை கைக்கூலியாகப் பெறுகிறான். சீர்திருத்தம் பேசிய அவன் பேனா சேற்றில் புரண்டு சிம்மாசனமேறுகிறது. என்ன செய்வது? அவன் விதி வேதனையின் விழிகளில்...,

சகதி படிந்த இந்த சமூகத்தின் மீது கோபம்வர தான் இதுவரை கவிதைகளாகவும் கதைகளாகவும் கிறுக்கிய வார்த்தைகளின் மீது வெறுப்பு வந்தது. "சீதனத் துவேஷத்தை சிம்மாசனமேற்றி மனித நேயத்தை விலங்கிட வைக்கும் இந்த சமூக அமைப்பு தன் எழுத்துக்களால் சீர்திருத்தமடையப் போவதில்லை. தன் தங்கைகளுக்கு வாழ்க்கை கிடைக்கப் போவதில்லை. உம்மா சொன்னது போல வக்கில்லாத எழுத்து...."

ஷானாஸ் மனதுக்குள் வெதும்ப ஆரம்பித்தான்.

"பெண்கள் கட்புலனாயதோர் அமைதித் தன்மை..." என்றான் நச்சினார்க்கினியன். அந்தப் பெண் பிறந்த வீட்டில் இருப்பதை விட மரக்கட்டையையாவது மணந்து கொள்வது மேல்." என்று கதறினான் ஜான் லைலி.

மும்தாஜை தன் குடும்ப சுய நலத்துக்காக இழக்க நேரிடுவதை நினைக்க அவனது நெஞ்சம் அடைத்தது. பஞ்சு இதயம் சரேலெனச் சரிந்தது. பொறுமை தாக்குப் பிடிக்காமல் கண்களில் நீர் திரையிட்டது.

உயிர் குடிக்கும் போர்களில் சில நல்ல இதயங்களும் நசுக்கப்படுகின்றன. மும்தாஜுக்கும் அதே நிலைதான். இந்த ஷானாஸ் என்னும் வண்டுக்காகத்தான் அந்த மும்தாஜ் என்னும் மலர் மலர்ந்தது. ஆனால் அதில் அர்த்தம் இல்லை. அந்த வண்டைத்தான் நண்டுகள் வட்டமிட்டிருக்கின்றன.

ஷானாஸின் நெஞ்சத்து நினைவுகளை வேதனை நெருட ஆரம்பித்தது.

"சுய நலம் உலகின் சொத்து. ஒன்றை அடித்து ஒன்று வாழ்வது இன்றைய உலகுக்கு இங்கிதம்."

"மும்தாஸ் உன்னைப் பிரிந்து போக நான் தயாரில்லை. ஆனால் உன்னில் இருந்து என்னைப் பிரிக்க இந்த சமூகம் தயார். வைத்தியமே காணாத இந்த சமூகம் என்னையும் பைத்தியமாக்கி விட்டிருக்கிறது. என் தங்கைகளின் வாழ்வுக்காக நான் கேடயமாக்கப்பட்டுள்ளேன். விதி என் வாழ்வோடு இணைந்து மதியை மறைத்திருக்கிறது. மன்னித்துவிடு."

"உனக்காக ஒரு சாஜஹான் எங்காவது பிறந்திருப்பான். உன்னைத் தேடி வருவான்."

ஷானாஸ் மனதுக்குள் எண்ணியெண்ணி வெதும்பினான். டயரியைப் புரட்டி அவளைப் பற்றி அவன் ஆசையோடு எழுதிய வரிகளைப் படித்தான்.

*"நீ நிலாவினால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட உல்லாசபுரி. உனக்காக ஒரு தாஜ்மஹாலை உள்ளத்துக்குள் கட்டி வைத்திருக்கிறேன்."*

என்றைக்கோ ஆசையோடு எழுதிய அந்த வார்த்தைகளை இன்று கண்ணீரோடு வாசித்துப் பார்த்தவன் அதன் கீழ் அழுத்தமாக எழுதினான்.

***"நிலாவினால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட நிலவே உன் உயரத்துக்கு என்னால் ஏறி வர முடியவில்லை. மன்னித்துவிடு."***

சிறுகதை

# உலகம் ஆயிரம் சொல்லட்டுமே!

-சேத்தூர் எஸ். பகீரதி-

அலுவலக வேலை முடிந்து வந்ததும் விஜய் ஆறுதலாக கட்டிலில் சாய்கின்றான். "விஜய் அண்ணா ரீ" என்று தேனீரை வைத்துவிட்டு புன்னகையுடன் மதுரா நகர, விஜய் பதிலுக்குப் புன்னகைத்துவிட்டு தேனீரைக் குடித்துவிட்டு மீண்டும் கட்டிலில் சாய்ந்தான். "சே.. என்ன உலகம் இது" விஜய் தனக்குள் அலுத்துக் கொண்டான்.

கணக்காளராய் பணிபுரியும் விஜய் வேலை மாற்றலாகி இந்த ஊருக்கு அண்மையிலுள்ள அலுவலகமொன்றில் வேலை கிடைத்ததால் சென்ற மாதம்தான் இந்த அழகான கிராமத்துக்கு வந்திருந்தான். விஜய் உயரமாயும் அழகாகவும் இருந்தான். மதுரா வீட்டில் இடம் கிடைத்ததும் விஜய் அங்கு தங்கிவிட்டான். மதுரா சின்ன வயதிலேயே தந்தையைப் பறி கொடுத்தவள். மதுராவையும் அவளது அம்மாவையும் தவிர வீட்டில் யாருமில்லை. தங்கையில்லாத விஜய் மதுரா மீது நிறைய அன்பு வைத்திருந்தான். அவளும் வாய் நிறைய "அண்ணா, அண்ணா" எனக் கூறிக்கொண்டு விஜயை சுற்றி வருவாள். மதுரா இவ்வருடம் ஜீ.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை எடுப்பதால் மும்முரமாக படிப்பில் ஈடுபட்டாள். சந்தேகங்களை விஜயிடம் கேட்பாள். விஜயும் சொல்லிக் கொடுப்பான். மதுராவின் அம்மாவும் விஜய் மீது நிறைய அன்பாயிருந்தார்.

விஜய் உண்மையில் மிகவும் மகிழ்ந்து போனான். இந்த ஒரு மாதத்தில் மதுரா விஜயின் சொந்தத் தங்கையாகவே மாறிவிட்டாள். இந்தப் புதிய உறவுகளின் பூரிப்பில் விஜய் தனது ஊரைக்கூட மறந்துவிடுவான். விஜயின் அம்மாதான் "என்னப்பா வீட்டையே மறந்துவிட்டாயா? உடம்பை நல்லா கவனித்துக்கொள்." என்று மடல் வரைந்திருப்பார். "எனக்கு ஒரு குறையுமில்லை அம்மா. எனக்கு உங்களை மாதிரி அன்பு காட்ட அம்மாவும், தங்கையும் இருக்கிறாங்க. கவலைப்படாதீங்க. உங்க உடம்பை நல்லா கவனிங்க" என விஜய் அன்பாக மடல் வரைவான். இந்தப் புதிய நேசங்களில் தன்னை மறந்திருந்த விஜய் இன்று காலை அலுவலகம் செல்லும் போது எதிர் வீட்டு பெண்ணொருத்தி தன்னோடு மதுராவையும் சேர்த்து தவறாகப் பேசியதை நினைத்ததும் விஜய்க்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அலுவலகத்தில் விஜய்யின் நண்பன் ஒருவன்கூட இதைப்பற்றி கேட்டபோது விஜய் அதிர்ந்து போனான். விஜய் முடியுமானவரை வாதாடி மதுரா தனக்கு தங்கை மாதிரி என்று சொன்னதும் அவனது நண்பன் "எனக்கு உன்னப் பத்தி தெரியும்டா விஜய்." என்று அவன் தோழமையுடன் விஜயின்



முதுகில் தட்டினான். விஜய் அந்த நிகழ்ச்சியை அன்றுடன் மறந்தாலும் விஜய் வெளியே வரும்போது மதுராவை இணைத்து விஜயின் காதுபட தவறாகப் பேசினான்.

அன்றொருநாள் இப்படித்தான் ஒருவன் விஜய்யின் காதுபட குத்தலாகக் கதைத்த போது விஜய் அவனுடன் சண்டைக்கே போய் விட்டான். மதுராதான் "வாங்க அண்ணா" என சமாதானப்படுத்தி விஜய்யை அழைத்துக் கொண்டு வந்தாள். இவற்றை யெல்லாம் நினத்துப் பார்த்த விஜய் தீர்க்கமாய் முடிவொன்று எடுத்தான்.

"சே... அந்தச் சின்னப் பெண்ணையும் என்கூட சேர்த்து... எப்படியெல்லாம் பேசுறாங்க...?" மதுரா பாவம். அவளும் வாடியிருந்தாள். தன்னை விட மதுராவின் சின்ன இதயம் என்ன பாடுபடும் என விஜய் நினைத்து மிகவும் கலங்கிப் போயிருந்தான். தனது முடிவை மதுராவிடம் சொல்ல வேண்டுமென விஜய் எதிர்பார்த்திருந்தான். மதுராவின் அம்மா சந்தைக்கு புறப்பட்டதும் மதுரா விஜய்யிடம் பாடங்களிலுள்ள சந்தேகத்தைக் கேட்டாள். விஜயும் சொல்லிக் கொடுத்தான். விஜயின் முகம் வாடி யிருப்பதைக் கண்ட மதுரா "என்ன விஜய் அண்ணா என்னவோ போல் இருக்கிறீங்க?" கேட்டதும் விஜய் மௌனமானான்.

நீண்ட நேர மௌனத்தின் பின் விஜய் "மதுரா வந்து... இந்த ஊர்ல உன்னைப் பத்தியும் என்னப் பத்தியும் தவறா பேசுறாங்க. அதனால.. நான்" விஜய் தடுமாற, "அதனால..." மதுரா கேட்க "நான் திரும்ப எங்க ஊருக்குப் போகப் போறேன் மதுரா" விஜய் முடிக்க மதுரா கலகலவென நகைத் தாள். விஜய் மதுராவை புரியாமல் பார்த்தான்.

"என்ன விஜய் அண்ணா நீங்க எவ்வளவு படிச்சிருந்தும் இப்படி பேசுறீங்களே? இந்த ஊர் சனத்தோட பேச்சுக்குப் பயந்து உங்க ஊருக்குப் போகப் போறீங்களா..?" அவள் மீண்டும் சிரிக்கிறாள். "மது நீ சின்னப் பொண்ணுடா. இது உனக்கு விளங்காது. ஒரு காலத்துல உன்னோட வாழ்க்கை பாதிக்கப்படும்" என்று சொன்ன விஜய்க்கு வயது வெறும் இருபத்தினாலுதான்.

"அதைப்பத்தி எனக்கு கவலையில்லை விஜய் அண்ணா. இந்தப் பாழாய்ப்போன சமுதாயத்தில எத்தகைய புனிதமான அன்பும் இப்படியான அழுக்கு மனம் படைச்சவங்க கண்ணுக்கு அசிங்கமாகத்தான் இருக்கும். நரம்பில்லாத நாக்கால அவங்க எதுவும் பேசட்டுமே. இதுக்குப் பயந்து கோழை மாதிரி நீங்க ஏன் ஊருக்குப் போகணும்?" நிறுத்திவிட்டு மதுரா விஜய்யை நோக்க விஜய் தொடர்ந்தான்.

"இல்ல மதுரா நான் இருந்தா உனக்குத் தானம்மா என்னால் பிரச்சனை. உனக்கு கல்யாணம் பேசும்போது இந்த ஊர்சனம் இல்லாத பொல்லாத விஷயங்களைச் சொல்லி கெடுத்திடுவாங்க. உலை வையை மூடினாலும் ஊர்வாயை மூட முடியாதும்மா. உன்னோட வாழ்க்கை என்னால பாழகிடக் கூடாது." விஜய் நிறுத்தினான்.

"இல்ல விஜய் அண்ணா நீங்க போகக்கூடாது. நீங்க ஊரை விட்டுப்போனா நீங்க என்மேல வைச்சிருக்கிற அன்புக்கு அர்த்தம் இல்லாமப் போயிடும். தவறா பேசினவங்களும் அந்தத் தவறு உண்மை அதனாலதான் நீங்க ஊருக்கு போறீங்க எனப் பேசுவாங்க. நீங்க இருக்கிறதால என் வாழ்க்கை பாழாயிடும்னு நான் நினைக்கல. அப்படி வாழ்க்கை இல்லைன்னாலும் நான் உங்க தங்கச்சியாகவே இருந்திட்டுப் போறேன். உலகம் ஆயிரம் சொல்லட்டுமே... அதெல்லாம் உண்மையாயிடுமா? நமக்கு நாமதான் நீதிபதி. யார் எது வேண்டு மானாலும் சொல்லட்டுமே...! சந்தேகப் படும் ஒருவரோட வாழ்றதைவிட நான் இப்படி சந்தோஷமாகவே வாழ விரும்புறேன்." விஜய் ஆச்சரியமாக மதுராவைப் பார்க்க மதுரா தொடர்ந்தாள்.

"இதுக்கெல்லாம் பயந்து ஒதுங்கினா கோழைகள்னு அர்த்தம். நீங்க போகக்கூடாது." என்று கூறியவாறு மதுரா வேகமாக அறையை விட்டு வெளியேறினாள். விஜய் தான் சின்னப் பெண் என நினைத்த மதுராவா இவ்வளவு அழகாகவும், அழுத்த மாகவும் பேசியது....! என நினைத்து வியந்துகொண்டிருந்தான்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# பலா மரம்

-ஒட்டமாவடி அறபாத்-



ஜன்னலருகே அமர்ந்துகொண்டு வானத்தை வெறித்தான். வெளியே சோவென மழை பெய்துகொண்டிருந்தது. மழையின் சங்கீதத்தில் மனசு இழுபட்டு ஓடியது. ஒவ்வொரு துளியும் ஒன்று சேர்ந்து, சிறு ஓடையாகி வெள்ளமாக மாறும் அற்புதத்தை வியப்புடன் பார்த்தான். பார்வைகள் நீண்டு அந்த பலாமரத்தில் சிக்கிக் கொண்டன. அதன் அடிப்பாகத்தில் கத்தியால் செதுக்கப் பட்ட இதய வடிவத்தினுள் 'ஜே.எஸ்" என்ற முதலெழுத்துக்கள் பளிச்சிட்டன. ஆழமாக செதுக்கியதால், தூரத்தில் நின்று பார்த்தாலும், துல்லியமாய் தெரிந்தது.

இந்த பலாமரத்திற்கு நேசிக்கத் தெரியும். அதன் கீழ் அடைக்கலம் பெற வரும் காதலர்களை பூஜிக்கத் தெரியும். அதன் மேனியில் செதுக்கப்படும் காதற் சின்னங்களை பொறுமையாய் இரசிக்கத் தெரியும். அவனுக்கு எதுவும் விளங்கவில்லை. வாழ்க்கை பற்றிய பிரக்ஞை தெளிவாக மனத்திரையில் விழ வில்லை. அடிக்கடி கீறல்களும் கிழிசல்களும். ஒரே வெறுப்பாய் இருந்தது. வீட்டின் முன்னிருந்த மணற் திட்டு மெல்ல மெல்ல கரையத் தொடங்கியது. மண் கட்டிகளின் வீழ்ச்சியில் பலா மரத்தின் வேர்கள் பல்லிளித்தன.

அவன் நினைவுகளின் சூட்டில் ஏதோ ஒன்று கருகுவது போலவும், உருகி வடிவது போலவும் உறைப்பாய் இருந்தது. அதோ அந்த பலா மரத்தில் சாய்ந்தவாறு அவள். கூந்தலில் முடிச்சுப் போட்டு அவிழ்த்துவிட்டு, மறுபடியும், விரல் நுனியில் அதை சுற்றி வினோதம் காட்டிக்கொண்டிருந்தாள். அந்த சௌந்தர்ய சொர்க்கத்தை தூர இருந்து இரசித்தவனுக்கு மரியாதையாகப் படவில்லை. ஓடிச் சென்றான், செல்லமாய் கோபித்துக் கொண்டாள். பின் சமாதானமாகி உணர்ச்சி மயமாய் பேசினாள். அவன் ஒரு குழந்தையாய் குதூகலித்தான்.

"ஜிப்ரி வீட்டுல எனக்கு கல்யாணம் பேசியாச்சி." அவள் சாதாரணமாய் சொன்னாள்.

அவனுக்குள் எத்தனை பூகம்பம் வெடித்ததோ, உடையாமல் நின்றான். "ஸரீனா நீங்க என்ன சொல்றீங்க?"

"இதுல மட்டும் நான் விளையாடல ஜிப்ரி. சத்தியமா எனக்கு கலியாணம்தான். இதுதான் நம்ம கடைசி பலாமர சந்திப்பு."

"அப்போ என்ன பத்தி சொல்லலியா ஸரீன்." "நிறைய சொன்னேன். எனக்கு வரப்போற அவர்கிட்டயும் சொன்னேன். "அவனுக்குள் வெடித்த பூகம்பத்தினால் சிதிலமாகி நின்றான். அவள் நாணத்துடன் புன்னகைத்தாள். முதன் முதலில் அவர்கள் சந்தித்துக் கொண்டபோது உதிர்த்த மெல்லிய புன்னகை. சலனமற்று இயல்பாய் நின்றாள். பலாமரத்தின் இலையொன்றை உள்ளங் கையில் உருட்டியவாறே சொன்னாள். "ஜிப்ரி உங்கள அறிமுகப்படுத்தும்படி 'கண்டிஷன்' வேற போட்டுட்டாரு" நாணமாய் தலை கவிழ்ந்து, மெல்ல சிரித்து அதே சிட்டுக் குருவியின் துடிப்புடன் சென்று விட்டாள்.

உயிரே சென்றதாய் நினைத்தான். அவளுக்குள் துன்பத்தின் சாயல் மருந்துக்கும் கிடையாது. அவனாகவே காதலித்து கற்பனைகளை வளர்த்து, கனவுகளை தின்று, யோசித்துப் பார்த்தான். இந்த நான்கு வருஷ நட்பில் அவள் ஆசையை தூண்டும்படி அவனுடன் பழகவுமில்லை; பேசவுமில்லை. என்றாலும் அவள் இழப்பை மனம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. பிந்திய நாட்களில் அவன் தனிமையாய் பலாமரத்தை சுற்றுவதும் அழுவதுமாய் திரிந்தான்.

அவள் திருமணத்திற்கு சென்றதும், அங்கு இருப்புக் கொள்ளாமல் நடைப் பிணமாய் அசைந்ததும், அவனுக்குள் புழுவாய் நெளிந்தான. அவனைக் கண்டதும் குதித்து வந்தாள். பின் 'அவரை' இழுத்து வந்து அறிமுகப்படுத்தினாள். "நீங்கதானா ஜிப்ரி? ஸரீனா உங்களைப் பத்தி நிறைய சொன்னா. இந்தக் காலத்துல ஆணும் பெண்ணும் வெறும் நண்பர்களா பழக முடியும் என்பதற்கு நீங்க நல்லதொரு உதாரணம். உங்கள பார்த்து நான் பெருமைப் படுறேன்." அவன் மனதை நோக்கி ஆயிரம் செருப்புகள் வீசப்பட்டதாய் உணர்ந்தான். வரமுடியாத புன்னகையை வரவழைத்து வாழ்த்துக்கள் கூறி வந்து விட்டான்.

அவளின் இதயம் தூய்மையானது. அந்த தெய்வீக மனசுக்குள் இளமையின் விபரீத காதல் எழவில்லை. ஆனால் அவன் அவளின் அசைவுகளை காதலாய் கற்பனித்து களிமண்ணாய்ப் போனான். "என்னங்க எவ்வளவு நேரமா சின்ன புள்ள மாதிரி மழையப் பார்த்துக்கிட்டு நிற்பீங்க? தேத்தண்ணி ஊத்துறேன். புள்ளய கொஞ்சம் புடிங்க" அவன் மனைவி புறுபுறுத்தாள். கடைசியாக அந்த பலாமரத்தை வெறித்தான். அவளின் ஞாபகங்களை கிளறிய அது புயல் காற்றிலும் மண் சரிவிலும் சாய்ந்து கொண்டிருந்தது.

# உறவைத் தேடி!

கல்குடா-க.பரமானந்தராஜா



கௌசி கட்டிலில் நிமிர்ந்து படுத்தி ருந்தாள். கைகள் இரண்டும் தலைக்கு மேல் கோர்த்திருந்தாள். முகம் சிவந்து கண்கள் எங்கோ வெறித்த வண்ணம் இருந்தது. சற்று முன் தன் வீட்டில் நடந்துவிட்ட விடயத்தை மீண்டும் நினைவுக்கு கொண்டு வருகிறாள்.

"கௌசி...இந்தா இதில இருக்கிற சுரேஷைத்தான் உனக்கு பேசி முடிச்சி ருக்கிறன்....". ராதாகிருஷ்ணன் புகைப் படத்தைக் கொடுக்க அதை வாங்காமல் தந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"டடி....எனக்கு கல்யாணம் வேண்டாம்..." கௌசி சொன்னது தான் தாமதம் ராதாகிருஷ்ணன் துள்ளத் தொடங்கி விட்டார்.

"எனக்குத் தெரியும். நீ ஏன் இப்படிச் சொல்றாய் என்று...ஒன்றுக்கும் வழியில்லாத அந்த பார்த்திபனோட நீ சுத்துறது தெரிஞ்சு தான் இந்த முடிவு எடுத்தனான்.."

தந்தை கூற, நிலமை எல்லை மீறியதை உணர்ந்தாள் கௌசி.

"டடி...என்ர வாழ்க்கைய நிர்ணயிக்கிறதுல எனக்கும் உரிமை இருக்கு..என்ர விருப்பத்தக் கேட்காம எதுக்கு முடிவு சொன்னீங்க..." துயரத்தின் எல்லைக்கு போய் விட்டாள் கௌசி.

"நீ..நான் பெத்த பிள்ளை...உனக்கு எது செய்ய வேணுமெண்டு எனக்குத் தெரியும்..."

"டடி....கொழுத்த சீதனத்த ஒரு பணக்காரனுக்கு கொடுத்து என்னை கட்டிக்கொடுக்கிறதவிட..ஒரு ஏழைக்குக் கொடுத்து என்னை சந்தோஷமாக வாழ வைக்க முடியும்தானே...பிளீஸ் டடி..." அவள் கெஞ்சினாள்.

"இல்ல...இந்த வீட்டில எனக்கு மருமகனா வாறதெண்டால் சுரேஷ்தான் வரணும்.... நான் வாக்குக் கொடுத்திட்டன்..."

"டடி...நானும் வாக்குக் கொடுத்திட்டன்... பணத்துக்காக ஒரு நல்ல மனத புண்படுத்தின பாவம் எனக்கு வேண்டாம் டடி..."

"கௌசி...நான் சொன்னால்...சொன்னது தான்... என்ன செய்ய வேணுமெண்டு எனக்குத்தெரியும்... நாளைக்கு பெண் பார்க்க வாறாங்க... அவளுக்கு உன்னை பிடிச்சிட்டால்... உடனே நாள் குறிச்சிட வேண்டியதுதான்..." அவர் வேறொன்றும் சொல்லாமல் சென்றுவிட்டார்.

தீயிலிட்ட புழுவாய் துடித்தாள் கௌசி. என்ன செய்வது?...அப்பா ஒரு முடி வெடுத்தால் மாற்ற முடியாது. மாற்றவும் மாட்டார். அவர் சொன்னபடியே சுரேஷை மணப்பது தான் சரியா?...இல்லை.... என் பார்த்திபனை மறக்க முடியாது. மறந்து என்னால் வாழவும் முடியாது.

பணத்துக்காக சுரேஷை மணந்தால் அன்றே என் சந்தோஷங்கள் அனைத்தும் இறந்துவிடும்.

என்ன முடிவெடுப்பது என்று அறியாது புரண்டு கொண்டிருந்தவள் ஏதோ ஒன்று மனதில் தோன்ற சற்று நிதானித்தாள்.

"யெஸ்...அதுதான் சரி...யாருக்கும் தெரியாமல் பார்த்திபனிடம் போய்விட வேண்டியதுதான். நான் அப்படி போய் விட்டால்...என்ன செய்வார்கள்..?" சற்று துணிவு வந்தது போலிருந்தது.

'என் வாழ்க்கையை பார்த்திபனுடன் அமைத்துக்கொள்வதென்றால் இதைவிட வேறு வழியில்லை. பார்த்திபனில் எந்தக் குறையும் இல்லை. ஆசிரியராக தொழில் புரியும் அந்த பண்புள்ளவரை மருமகனாக்க டடி ஏன் வெறுக்க வேணும்? சுரேஷ் பெரிய கோடீஸ்வரன்தான். ஆனால், அவன் நாளும் மதுவுடனும்... மாதுவுடனும் காலம் கழிப்பது டடிக்கு தெரியாதா? தெரிந்தும் பணத்துக்காக அவற்றை மறந்து விட்டாரா? தன்ர கௌரவத்துக்காக என்ர வாழ்க்கைய அழிக்க முடிவு செஞ்சிட்டாரா?'

நினைக்க, நினைக்க கௌசிக்கு தான் எடுத்த முடிவில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. எப்போது விடியும் என மணிக்கூட்டையே பார்த்திருந்தாள்.

நான்கு மணி என்பதை கடிகார முள் உணர்த்தியது. கடிதம் ஒன்றை எழுதி மேசை மீது வைத்துவிட்டு சிறு கைப்பை ஒன்றுடன் தன் வாழ்க்கைப் பயணத்தை தொடர ஆயத்தமானாள் அவள்.

# முதலிரவு

-கிண்ணியா அமீரலி-



அச்சம் கலந்த ஆனந்த மயக்கத்தோடு அந்த அறைக்குள் தனியாக அமர்ந் திருந்தேன்.

இன்று எனக்கு முதலிரவு.
மகிழ்ச்சியான இரவு.
மறக்க முடியாத இரவு.
அவர் இன்னும் வரவில்லை...
வியர்த்தது. பயம். மனப்பயம்.
புது அனுபவம்.
இருந்தாலும் மனசுக்குள் மத்தாப்பூ.
என் கனவுகள் இனிக் கைகூடும்.
நான் சந்தோஷமாக வாழுவேன்.
அவர் வரும்வரை, ஞாபகங்களோடு ஒரு தேவலோகப் பயணம் போய் வந்தேன்.

இன்றிலிருந்து ஆரம்பிக்கப் போகும் இந்த இனிமையான வாழ்க்கையை எனக்களித்த இறைவனை இதயத்தால் வாழ்த்தி நன்றித்து மகிழ்ந்தேன்.

அவர் வரவில்லை...

நான் விடிய விடிய விழித்திருக்கத் தானே பிறந்திருக்கிறேன்.

இது கொஞ்சம் துன்பம்...என்றாலும் இன்பம்.

அவர் சுவாரஸ்யமானவரா? சுடு மூஞ்சியா? வாட்டசாட்டமாக இருந்தாலும்... கெட்டிக்காரராக இருப்பாரா?

அவர் என்னோடு எப்படி நடந்து கொள்வாரோ? (கொல்வாரோ?)

நான் நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டும்.

மெல்லத் தூங்கிப் போனேன்.

அவர் வந்த பிறகுதான்...

'எழும்பி'...நடப்பது நடக்கும்!

நித்திரையில் நீந்தி வந்தன சில சுவனக் கனவுகள்..

கதவு தட்டப்பட்டது.

சுவனத்திலிருந்து ஓடி வந்தேன்.

கதவைத் திறந்தேன்.

சிரித்தார்.

சிரித்தேன்...

என் கை தொட்டு கொங்கிராஜு லேஷன்ஸ் என்றார்.

'நம மொக்கத?'

கிவ்'வினேன்.

என்னைப் பயப்படாமல் தைரியமாக இருக்கும்படி அன்புக் கட்டளையிட்டார். என்னை நெருங்கி வந்..."கையெழுத்'திட்டார்.

தினமுரசு வாசகர்கள் மாத்திரம் என்னை மன்னிப்பீராக!

"முதலிரவு அது-இதுன்னு என்ன ஓய் நீர் கதை விடுறீர்? என்று ஆத்திரப்படாமல்..கதையைக் கேளுங்கோ...

இது கதையல்ல நிஜம்...!

சந்தேகமா இருந்தா நேரிலே வந்து பாருங்கோ......

பழைய கோழிக்கூடு மாதிரி ஒரு சின்னக் 'கூடு'

அதனருகே...சலசல சலசல சலசல ஓடை.

பக்கத்தில் ஒரு ஜேம் மரம்.

இங்கேதான் நேற்றிரவு எனக்கு முரலிரவு.

ஆமாம்; நான் 'செக்கியூரிட்டி'யாகக் கடமையாற்றுகின்றேன்.

நான் தூக்கமா? விழிப்போடு இருக்கிறேனா? என்பதைக் கண்காணிக்க வரும் 'சீ.எஸ்.ஓ' (சீனியர் செக்கியூரிட்டி ஒபிஸர்) வைத்தான் நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன் என்பதைச் சொல்ல வந்தேன்! அட...நீங்க ஒண்ணு... முதலிரவுக்கே போய்ட்டீங்க போல...! வாழ்க்கையில் வருகின்ற மறக்க முடியாத எந்த இரவும் முரலிரவுதான்.

ஹி.....ஹி......ஹி...

# "முடிவுரை எனதல்ல"



ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி

"என் வாழ்க்கை ஏட்டின் இறை யெழுதும் முடிவுரை. எனக்குத் தெரிந்து விட்டது. நானெழுதும் கதையாயிருந்தால் மாற்றியிருக்கலாம். இறைவன் கைவிரலில் விதியெனும் பேனை. என்னால் எப்படி மாற்றிட முயலும்? இளமையில் வறுமை கொடிதென்ற ஔவையே! இளமையிலே இறப்பும் கொடிதுதானே? என் கனவுகள், கற்பனைகள் எல்லாம் வெறும் கானலாய் கலைவதுதான்... மனதுக்குள் நெருடலாய் தொடர்ந்தது. மற்றபடி வாழ்வின் தொடர்ச்சி பற்றி எனக்குள் ஏக்கமில்லை. நானில்லாத உலகைப்பற்றிய கற்பனைகள் சில....பாச நெஞ்சங்களில் கண்ணீர் எத்தனை காலம்தான் நிலைக்கும்? நினைத்திருப்பார்கள்; துக்கித்தி ருப்பார்கள்; எல்லாம் சில காலம் வரை. பின்னர்? அஞ்சலிகள்...கண்ணீரஞ்சலிகள் பத்திரிகைகள் படத்துடன் ஒருநாள் துக்கம் சொல்லும். காலம் உருண்டோட அவர்களில் இருக்கும் நானும் மறைந்திட...சிலர் முற்றாகவே மறப்பார்கள். சிலர் வருடத்துக்கொரு முறை நினைப்பார்கள்....என் ரூமை என் தங்கை எடுப்பாள். என் உடைகளையும் சேர்த் தெடுப்பாள்...சிரிப்பும் வருகிறது கூடவே கண்ணும் கலங்குகிறதே...நாளைக்கும் பூ மலரும்...நானிருக்க மாட்டேன்..."

"ஏய், என்ன செய்கிறாய்?" திடுமென வந்து விழுந்தாள் தோழி. மெதுவாக டயறியை மூடுகிறேன். "என்ன எழுதுகிறாய்?" "ஓ...ஒண்ணுமில்லை...சும்மா ஒரு கதை எழுதலாம்னு..." "கதையா?...எனக்கும் சொல்லேன்டி...காதல் கதையா?இல்ல... அறுவைக்கதையா?" - "பொறுத்திரு. தினமுரசைப் பார் முடிவு தெரியும்."

"ஐயோ...சொல்லேன்." "முடியாது." உனக்கொரு நாள் தெரிய வரத்தான் போகிறது. என் கதையின் முடிவைப் பார்த்து நீ அழத்தான் போகிறாய்!"

"ம்...அதுவும் அப்படியா? பரவாயில்லை. பெரிய எழுத்தாளர் திலகம்னு நெனப்பு. சரி.வா. வீட்ல வீடியோ போடுறோம் நல்ல படம்டி. வர்றியா?"

மௌனம். "ஏன்டி...என்னவோ மாதிரி இருக்கே? நல்ல படம். "இதயத்தை திருடாதே." அதுல பாரு. ஹீரோவுக்கு ப்ளட் கான்சர். ஹீரோயினுக்கு ஹோல் இன்த ஹார்ட். முடிவுல..."அவள் தொடர இடை மறித்தேன். "முடிவுல மரணம் தானே! 'இது எனக்கும் ஏற்கனவே தெரிஞ்ச முடிவு பெண்ணே. அந்த ஹீரோவுக்கு மட்டுமில்ல. எனக்கும் ப்ளட் கான்சர்தான். எங்கப்பாகிட்ட டொக்டர் ராஜபக்ஷ கொடுத்த மெடிக்கல் ரிப்போர்ட் வாங்கிப் பாரடி. என் முடிவும் உனக்குத் தெரிஞ்சிடும்."

மனதுக்குள் சொல்லிக்கொண்டே மௌனமாய் அவளைப் பார்க்கிறேன். "நீ வரலியா?" மீண்டும் கேட்கிறாள். "இல்லடி" மெதுவாய் சொல்கிறேன்.. "ஏன்?" ஒற்றைக் கேள்வி பிறந்தது அவளிடமிருந்து.

"ஏன்னா....முடிவு எனக்குத் தெரியும்டி. அதனால.... அதனால..." வார்த்தைகளை மென்று சிரிக்க முயல்கிறேன். ஒரு மாதிரியாய்ப் பார்த்துவிட்டு அவள் போய்விட்டாள். மீண்டும் தனிமையில் நான். டயறியைத் திறக்கிறேன். நினைவுகளில் இரத்தம் வழிகிறது. கண்களில் கண்ணீர் வழிகிறது.

(முடிவு சுபமில்லை)

# கத்தரித்த கடி ஜோக்ஸ்



ஒருவர்: என்னங்க இது? போஸ்டர்ல தலைவரை கை சூப்பின மாதிரி போட்டிருக்கீங்க?

மற்றவர்: எங்க தலைவருக்குக் குழந்தை மனசுங்கிறதை சிம்பாலிக்கா காட்டத்தான்.

இயக்குநர்: ஏழைகளை மையமா வச்சு எடுக்கிற என்னோட படத்துக்கு என்ன பெயர் வைக்கலாம்னு தீவிரமா யோசிச்சுக்கிட்டு இருக்கேன்.

நண்பர்: ப்பூ... இவ்வளவுதானா? 'வீடு ஒழுகுதுங்க'ன்னு வெச்சிடுங்க.

நோயாளியின் மனைவி: டாக்டர் ' என் மாங்கல்யத்தை நீங்கதான் காப்பாத்தனும்.

டாக்டர்: சரிம்மா, கழற்றிக்கொடு பத்திரமா வச்சுக்கிறன்.



திருடன்: ஏய்...மரியாதையா பீரோ சாவியை எடுத்துக் குடுடா!

வீட்டுக்காரர்: திருடனுக்கு என்னடா மரியாதை? இந்தாடா...பிடிடா....பரதேசி...நாயே.

அவர்: உங்க ஊர் பஸ் பிடிச்சு வர்றதுக்குள்ள பாதி உயிர் போயிடுச்சு.

இவர்: அப்போ அவசியம் இன்னொரு முறை எங்க ஊருக்கு வரணும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இலக்கிய நயம்

தருவது ரசிகன்





# கவிஞனின் காதலி

'ஏனடி பெண்ணே உன்
இதழ்களுக்கு
தாழ்பாள் போட்டாய்?
இனி என்
விழிகளுக்கு
இமைகள்
தாழ்பாள் போடுமோ
சொல்லடி......'

எழுத்தாணியை ஓலையில் வைக்க உள்ளத்துச் சோகம் உதிரமாய் கொட்டிற்று.

கவிஞன் நாச்சியப்பன் விழிகளில் கண்ணீர் குளம் கட்டியது.

அவன் இதய சோகத்துக்கு சொந்தக்காரி சாயாதேவியும் - விழிகள் சாயாதேவியாகி அரண்மனை உப்பரிகையிலே தவித்துக் கொண்டிருந்தாள்.

"என் இதயம் உங்களிடம் வந்துவிட்டது. உங்களிடமிருந்தது என்னிடம் வந்துவிட்டது. நான் நீங்களாகி விட்டேன். நீங்கள் நானாகி விட்டீர்கள்."

சாயாதேவி அன்று சொன்னது. இப்போதும், இந்த சோக மூட்டத்திலும் இருள் கிழிக்கும் சூரியக் கதிர்களாய்-அந்த வார்த்தைகள் செவியில் எதிரொலிக்க நாச்சியப்பனுக்கு உடனே அவளைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது.

அந்தச் சிரிப்பு. ஒரு குழந்தைபோல உள்ளத்து வெள்ளையை உதட்டிலே கொண்டுவந்து அவள் சிந்தும் பால் நகை. வெண்முத்துப் பல்நகை.

பொய்யாக கோபம் கொண்டு "தேவி" என்று அழைத்தாலும் செவியில் விழாதது போல் பேசாமல் அடம்பிடிக்கும் இனிய திமிர்.

பார்க்க வேண்டும். இப்போதே தேவி முகம் காணவேண்டும் என்று பரபரத்தது நாச்சியப்பனின் மனம்.

"உங்களைப் பார்க்கவே கூடாதாம்."

"யார் தேவி சொன்னது?"

"என் தந்தை."

"அதற்கு நீ என்ன விடை சொன்னாய் தேவி?"

"உங்களிடம் வருவதைத்தானே தடுக்க முடியும். உங்களுக்குள் நான் இருப்பதை எப்படி தடுக்க முடியும்?"

காதலை முறிக்க முடியாது. அது தடை வரத் தடைவர வளரும் என்று தேவி சொன்னது கேட்டு வேறொரு சமயம் என்றால் துள்ளிக்குதித்திருப்பான்.

இப்போதோ அவள் உறுதியைவிட இனி வரவே மாட்டாளோ என்று தவிப்பே பெரிதாகிப் போனது.

"அப்படியானால் நீ இனி வரவே மாட்டாயா தேவி?"

குரல் சோகத்தில் வீழ்ந்து உடைந்து போயிருந்தது.

"ஆம்." என்று சொன்னால் எப்படித் தாங்குவான். சுக்கு நூறாய் உள்ளம் உடைந்து சோகம் என்னும் இருளில் தொலைந்து போய்விடுவானே இந்த சூரியக் கவிஞன்.

எப்படி பதில் சொல்வது என்று தெரியாமல் சாயாதேவி நெருப்பில் விழுந்த பஞ்சாய் வேதனைத் தீயில் உள்ளம் கொடுத்துத் தவித்தாள்.

"எப்படி வருவது? என்ன காரணம் சொல்லிவிட்டு வருவது,"

"வரலாம் தேவி. வரவேண்டும். வரலாம்."

பிடிவாதமாய் சொன்னான். விழிகள் கலங்கிவிட்டன. மறைக்க முயன்றான். விழிகள் காட்டிக்கொடுத்துவிட்டன.

சாயாதேவி கவிஞனின் கரம் பற்றினாள். ஆசையோடு அந்தக் கரத்தில் முத்தமிட்டாள். தன் உள்ளம் கைகள் இரண்டாலும் அவன் கரத்தை பொத்தி வைத்துக்கொண்டு,

"இந்தக் கை ஓயவே கூடாது. உயர்ந்த கரம் தாழக்கூடாது. எழுதிக்கொண்டேயிருக்க வேண்டும். வற்றக்கூடாது - கவிதா உள்ளம் வரண்டு வற்றிவிடக்கூடாது."

உணர்ச்சித் துடிப்பாய் சொன்னாள்.

கவிஞன் கலங்கினான்.

"தேவி, நிலவு இல்லாத வானம் அழகாகவா இருக்கும்? நீயில்லாத வாழ்வில் நிம்மதி எப்படிக் கிடைக்கும்? நிம்மதியே நிலத்தில் உதிர்ந்த பூவாய் போனதன் பின்னால் நிறைவான கவிதை எப்படிப் பிறக்கும்?"

சாயாதேவி கவிஞன் முகத்தை இழுத்து. தன் மார்பில் போட்டுக்கொண்டாள்.

கவிஞனின் தலைமுடி கோதினாள். குனிந்து அவன் உச்சந்தலையில் இதழ்களை ஒற்றி எடுத்தாள்.

மலையென நிமிர்ந்து நின்றபோதும் மலரணைபோல் இருந்த மார்பில் கவிஞன் இனிய சுகம் கண்டான்.

தன் மார்பில் அவன் முகம் அசைய சாயாதேவி விழிகளை மூடிக்கொண்டாள்.

கவிஞன் முகம் நிமிர்த்தி அவள் கழுத்தில் உதடு பொருத்தினான். பொருத்தப்பட்ட உதடுகள் பொறுமையின்றி நகர்ந்து மேலே உயர்ந்து தேவியின் இதழ்களை ஆக்கிரமித்துக்கொள்ள,

சாயாதேவி தன் கரங்கள் விரித்து கவிஞனை கைதியாக்கினாள்.

அவள் காதுமடல்களை மெல்லக் கடித்துவிட்டு, காதோடு கேட்டான் கவிஞன்,

"தேவி வருவாய்தானே?"

"வருவேன். வருவேன்."

"என் இனிய தேவிக்குட்டி."

செழித்திருந்த கன்னத்தில் முத்தமிட்டு விட்டு, உதடு பிரித்து கடித்தான்.

■

"எங்கே போகிறாய் தேவி?"

மன்னவனும், சாயாதேவியின் தந்தையுமான விஜயபல்லவர் குறுக்கே ஒரு சுவர்போல் நின்றபடி கேட்டார்.

"தோழி பவளக் கொடியிடம்."

"கொடியிடம் போகிறாயா அல்லது படர்ந்து கொள்ள நீ வருவாய் என்று காத்திருக்கும் மரம் தேடிப் போகிறாயா மகளே?"

"அப்பா நீங்கள் என்ன பேசுகிறீர்கள்?"

"இதுதான் அமுதினும் இனிய தமிழ் மகளே! மொழி புரியாது விஜயபல்லவன் பெண்ணுக்கு என்றால் அது வெட்கம் மகளே!"

தந்தையின் கேலி கலந்த பேச்சை சாயாதேவியால் இரசிக்க முடியவில்லை. சினம் ஒரு தீ வெட்டியாய் உயர்ந்தது.

"சந்தேகப்படுகிறீர்களா தந்தையே?"

"சந்தோசப்படச் சொல்கிறாயா மகளே? நாடாளும் ஒருவனுக்கு மாலையிட வேண்டிய மன்னன் மகள், நாதியற்ற ஒரு கவிஞனை காதலிக்கிறாள் என்றால் கரவோசை செய்து களிப்படைய வேண்டும் என்று சொல்கிறாயா என் செல்ல மகளே?"

"காதலிப்பது குற்றமா தந்தையே?"

"ஆம் என்று சொன்னால், 'என் தாயும் நீங்களும் காதலித்து மனம் பரிமாறிக்கொண்ட பின்னர்தானே மணம் செய்தீர்கள். அதுவும் குற்றமல்லவா' என்று எதிர்க் கேள்வி தொடுப்பாயே மகளே?"

விஜயபல்லவர் நகைத்தார். சாயாதேவி சளைக்காமல் கேட்டாள்.

"குற்றமல்லவென்றால் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள் தந்தையாரே?"

"காதலிப்பது குற்றமல்லவென்று நான் சொன்னது பொதுவிதி. ஆனால் மன்னன் மகளுக்கு சில தனிவிதிகளும் உண்டு, பெரும் கடமைகளும் உண்டு மகளே."

தந்தையார் தன் காதலை தடுப்பது என்ற முடிவோடு, மறுக்க முடியாத வாதங்களை தயாராக வைத்திருக்கிறார் என்று சாயாதேவி புரிந்துகொண்டாள். வாதம் செய்து பயனில்லை என்று முடிவுக்கு வந்தாள். பிடிவாதம் ஒன்றே வழி என்று தீர்மானித்துப் பேசினாள்.

"விதிகள் என் விதியோடு விளையாட நான் அனுமதிக்க முடியாது."

"உன் விதியோடு விளையாட நீ என்ன, நான்கூட அனுமதிக்க மாட்டேன் மகளே. ஆனால்...,"

வார்த்தைகள் நிறுத்தி மர்மமாய் புன்னகை வீசி அவள் முகம் உற்று நோக்கினார்.

"ஏன் நிறுத்தி விட்டீர்கள்?"

"மகளே நீ கவிஞனை மட்டும் காதலிக்கிறாயா? அல்லது அவன் கவிதைகளையும் நேசிக்கிறாயா?"

"கவிஞனைக் காதலிக்கிறேன் என்பதற்குள் இரண்டுமே அடக்கம் அல்லவா? பிறகெதற்கு இந்த வினா?"

"காரணம் உண்டு மகளே. அவன் கவிதைகள் இன்னும் எழுதவேண்டுமானால் அவன் உயிர் இருக்க வேண்டும். உன் காதலில் நீ உறுதியாய் இருப்பின் கவிஞனின் சிரம் இருக்காது. எனக்குத் தெரியும்-அவன் உயிர்ப்புள்ள கவிதைகளுக்கு சொந்தக்காரன். அவன் உயிர் போவதை இலக்கிய பிடிப்புள்ள நீ மறந்தும்கூட மனம் விரும்பமாட்டாய்."

மன்னரின் பேச்சில் உறுதி தெரிந்தது. கல்லான மனம். கனியவைக்க முடியாது என்று புரிந்தது. வறட்டுக் கௌரவம் வாள் எடுத்து வீசும் என்று விளங்கியது. உடனே எதிர்வாதம் செய்து மோதுதல் பயனில்லை. என்னிடம் காட்டமுடியாத கோபத்தை எதிர்த்தரப்பில் காட்டும் மூர்க்கம் வரும். எனவே இப்போது அமைதிகொள். என்று தேவியின் மனம் சொன்னது.

எனினும் ஓடிப்போய் உள்ளே பஞ்சணையில் முகம் புதைய, விழுந்து குலுங்கி அழுதாள்.

விஜயபல்லவர் இடம் விட்டு அகன்றார்.

■

காத்திருந்தான். வழி பார்த்திருந்தான் கவிஞன்.

தேவி வரவில்லை. "பாதி உயிர் அங்கே மீதி உயிர் இங்கே வேதனை வெப்பத்தில் பனிக்கட்டியாய் உருகிக்கொண்டிருக்கிறதே தேவி." என்று கவிதை எழுதினான்.

விழிகளில் இருந்து விழுந்து அந்த வரிகளை நனைத்தது கவிஞனின் கண்ணீர். பார்க்க வேண்டும் என்று துடிப்பை, அதனால் அவளுக்கு மேலும் பாரமாகும் நிலை தோன்றிவிடுமோ என்ற எண்ணம் தடுத்தது.

■

சாயாதேவி கவிஞனை மீண்டும் காணும் நாளுக்காய் காத்திருந்தாள். இடையே நகர்ந்த நாட்கள் முழுவதும் சுமையாய் அழுத்தி, சோகம் நிரம்பி விலகும் நிலை கண்டாள்.

மகளைத் தேற்ற விஜயபல்லவன் வேண்டிய முயற்சிகள் அனைத்தும் செய்தார். அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராக, சாயாதேவியின் காதல் வெட்ட வெட்ட தளைக்கும் வெள்ளரச மரமானது.

அரண்மனை வாசம், செல்வச் செழிப்பு, சீராட்டி வெண்சாமரம் வீசும் பணிப்பெண்கள் என்னவிருந்தென்ன! நரகத்தில் வாழ்வதாய் தினமும் துடித்தாள். அழகுத் தேவதை தேய் பிறையாய் உடல் மெலிந்து போனாள்.

"சாயாதேவிக்கு என்ன குறை? ஏன் இப்படியானாள்?" பணிப்பெண் ஒருத்தி கேட்டாள்.

அடுத்தவள் அதற்கு ஒரு குறள் சொன்னாள்:

**இன்னாது இனன் இல் ஊர் வாழ்தல்**
**-அதனினும்**
**இன்னாது இனியார்ப் பிரிவு.**

குறள்-1158
அதிகாரம்-116

## குறுக்கெழுத்துப் போட்டி இல-43

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | 2 |
| | 3 | ■ | 4 | | 5 | |
| 6 | | 7 | ■ | ■ | | |
| | ■ | | ■ | 8 | | ■ |
| | ■ | | 9 | | | 10 |
| | 11 | | ■ | | ■ | |
| ■ | | | ■ | | ■ | |

### இடமிருந்து வலம்

1. பூசைகளிலும் பயன்படுத்துவ துண்டு.
4. குட்டியைப் பத்திரமாய் வயிற்றில் வைத்திருக்கும்.
6. அயல்நாட்டின் தலைநகரம்.
9. தைப்பொங்கலும் இதனுள் சேரும்.

### மேலிருந்து கீழ்

1. பிரபல நாவலாசிரியர்.
2. பறக்கவும் தெரியும்.
3. இதில் கூட கலப்படம் செய்கிறார்கள்.
5. வாயு பட்டால் ஆடும்.
7. அழகுச் சாதனங்களில் ஒன்று.
8. நட்சத்திரத்தை இப்படியும் சொல்லலாம்.
10. இவரையும் நட்சத்திரம் என்பார்கள். (தலைகீழாக இருக்கிறது)
11. செவியை அதிரவும் வைக்கும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 02.04.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-43
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-41க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 உ | ள | 2 வா | ளி | ■ | 3 ப | 4 சி |
| 5 ரு | ஷ் | டி | ■ | 6 கோ | ப | ம் |
| து | ■ | க் | 7 ப | பு | ■ | ம |
| ■ | 8 பு | கை | யி | ர | 9 த | ம் |
| 10 கு | ரு | ■ | ர் | ம் | ரு | ■ |
| ட | ஷ | ■ | ப் | ■ | 11 ம | ண் |
| ம் | ன் | ■ | பு | ■ | 12 ர் | தே |

குறுக்கெழுத்துப் போட்டி இல.41இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி. ரெமோனா பர்னாந்து கொழும்பு-13.
2. எஸ். இந்திரதாஸ் நுவரெலியா.
3. வி. நிர்மலா எல்ல.
4. ஏ. நாகராஜன் தெமட்டகொட.
5. செல்வி. எம்.எஸ். நஸீரா திருகோணமலை.
6. செல்வி. தி. ஜெகப்பிரியா புசல்லாவ.
7. ஜெகதா துரை கண்டி.
8. பி. சித்திரைச் செல்வன் குருநாகல்.
9. ஏ.ஆர்.எம். கமால் புத்தளம்.
10. செல்வி. சுஜேந்திரா ஞானப்பிரகாசம் தெஹிவளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

அரசியல்வாதியாக மாற நீங்கள் கூறும் அறிவுரை?

எஸ்.மூர்த்தி-கண்டி.

*அறிவே தேவையில்லை அதற்கு என்றாகி விட்டது. பிறகெதற்கு அறிவுரை.*

□

இனப்பிரச்சனை தீரும் என்று கனவு கண்டேன். பலிக்குமா?

வீ.பிரகாஷ்-கொழும்பு-07.

*கனவு காணும் உரிமை இல்லையா என்ன? அது சரி அது என்ன பகல்கனவா? இராக்கனவா?*

□

பிரபுதேவாவிடம் நடனம் பயில ஆசைப் படுகிறேன். முடியுமா?

த.பிரபாகரன்-தம்பிலுவில்-02.

*நீர் என்ன பிரபுதேவா போல் மாற வேண்டும் என்றா ஆசைப்படுகிறீர்? அவரிடம் நடனம் பயிலத்தானே ஆசைப்படுகிறீர்? எனவே அவரது நடனக் குழுவில் அநேகமாக இடம் தருவார் என்று நினைக்கிறேன்.*

□

ஆண்டுதோறும் தேர்தல் நடந்தால் எப்படி இருக்கும்?

நியாஸத்-எருக்கலம்பிட்டி-03.

*அரசியல்வாதிகளுக்கு அடிக்கடி மக்களை சந்திக்க வேண்டிய, மதிக்க வேண்டிய சிரமம் இருக்கும்.*

□

கண்ணுக்கும், காதலுக்கும் உள்ள தொடர்பு என்ன?

க.சுதர்சன்-செங்கலடி.

*காதல் மின்சாரம் என்றால் அதைக் கடத்திச் செல்லும் சமாச்சாரம் தெரிந்த மின்சாரக் கடத்திதான் கண்கள்.*

□

டியர் சிந்தியா, தேர்தலுக்கு முன் வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு முடிவு வருமா?

ச.ராமஜெயம்-எட்டியாந்தோட்டை.

*எப்போது நடைபெறும் தேர்தலுக்கு முன் என்று குறிப்பிடாதவரை, வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாம். வசதி தானே.*

□

மனிதனுக்கு மறதி இல்லாமல் இருந்தால் எப்படி இருக்கும்?

எம்.எச்.நிசாம்-நுககஹ கெதர.

*அரசியல்வாதிகள் பலரது நிலை தர்ம சங்கடமாகியிருக்கும்.*

□

தலையணை மந்திரத்தால் இலாபமா? நஷ்டமா?

ஆர்.பிரேம்குமார்-திருமலை.

*தலையணை இல்லாமல் தூங்கிப் பாருங்கள் தெரியும்.*

□

திடீரென்று புதையல் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

எம்.திவ்யா-பண்டாரவளை.

*தூக்கி எறிந்துவிடமாட்டேன். போதுமா?*

□

இளைய தலைமுறை என்ன செய்ய வேண்டும்?

வே.சுதர்சன்-புத்தளம்.

*கனவுகளோடு மட்டும் நின்றுவிடாமல் கனவுகள் கைப்பட உழைக்கவும் வேண்டும்.*

□

கட்டுமீறி அலைபாயும் மனதை என்னவென்று சொல்வது?

கே.பிலோமினா-நீர்கொழும்பு.

*சாரதி இல்லாத வாகனம்.*

□

உங்களுக்கு பிடித்த கதை என்ன?

அ.கோகிலராணி-கொழும்பு-11.

*எந்தக் கதையும் சொந்தக் கதைபோல் வருமா? ஆகையினாலே என் சொந்தக்கதை.*

□

தமிழ் சினிமா உலகில் வேற்று மொழிக் கலைஞர்களின் ஆதிக்கம் அதிகரிக்க காரணம் என்ன?

பி.ராஜேந்திரன்-பொரலங்கட.

*ஒன்று-அவர்களின் திறமை. காரணம் இரண்டு - அவர்களை ஒப்பந்தம் செய்யும் தயாரிப்பாளர்கள்.*

**இவ்வாரம் (27.03.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 22

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: குருச்சேத்தரப் போர்க்களம் வெகு தூரத்துக்கப்பால் இருப்பினும் அதற்கான முன்னேற்பாடுகள் இப்பொழுது முதலே நடைபெற ஆரம்பித்து விட்டன. இப்பொழுதே வெவ்வேறு அணிகள் தனித்தனியே இணையத் தொடங்கிவிட்டன. காந்தார நாட்டை மறந்த சகுனி அஸ்தினாபுரத்தில் வேரூன்றிவிட்டான். நாட்டின் நலன் மட்டுமே தன் கடமை என பீஷ்மர் கட்டுண்டு கிடக்கிறார். தன் கணவனுக்கு நல் வழிகாட்ட முடியாத நிலையில் காந்தாரி தன் கண்களையே- கணவனுக்காகக் கட்டிக் கொண்டாள். அப்பாவியான குந்தியோ இரு தலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறாள்.

துரோணாச்சாரியாரின் உள்ளத்தில் இலகுவில் ஆற்ற முடியாத காயம் ஒன்று புரையோடிப்போய் விட்டது. நட்பினால் விழைந்த இவ்வடுவுக்கு மருந்து தேட முடியாமல் தவிக்கிறார். இருப்பினும் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் அவர் போர்க்கலைகளைப் பயிற்றத் தொடங்கி விட்டார்.

-காட்சி தொடக்கம்-

குருகுலம்- துரோணாச்சாரியார் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கிறார். பீஷ்மர் அங்கு வருகிறார்.

பின்னணிப்பாடல்:

**கல்வியும் அறிவும் கடலென அருளும்
கடவுளை வணங்கிடுவோம்
நல்லவை யெல்லாம் நலமுடன் பெருகிட
நாயகன் பாதம் பணிந்திடுவோம்.**

**வில்லும் வேலும் வாளும் வீசி
வெஞ்சமர் புரிந்திடவே
பொல்லாங்கு நீங்கி நல்லோர் வாழ்ந்திட
நெஞ்சினில் உரமதைத் தந்திடுவாய்.**

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை-சகுனி வருகிறான்.

**திருத:** மைத்துனர் சகுனியின் கவலைக்கான காரணம் யாதோ?

**சகுனி:** மைத்துனரே! நீங்கள் பார்வையற்றவர்கள். காந்தாரியும் தன் பார்வையை மறைத்துக்கொண்டாள். இந்தக் குடும்பத்தை யார் கவனிப்பது? துரோணாச்சாரியாரின் வருகையே என் கவலையை அதிகரித்து விட்டது. அவரோ பிராமணர். அதேபோல் கிருபாச்சாரியாரும் அரண்மனையில் உலாவுகிறார். இவர்களை நம்ப முடியவில்லை. இவையெல்லாம் உங்கள் பெரியப்பா பீஷ்மரின் சூழ்ச்சி என்றே எனக்குப் படுகிறது.

**திருத:** நான் என்ன செய்ய வேண்டும்? நடமாடவே எனக்கு ஒருவரின் துணை தேவைப்படுகிறதே!

**சகுனி:** அதற்காகவே நான் காத்துக்கிடக்கிறேன். காந்தாரியின் கையைப் பிடித்து நடமாட வேண்டியதில்லை. அரசியலும் கணவனுக்கான கடமையும் இரு வேறு முனைகள். சொந்த நன்மைக்கும் பிறர் நலனுக்கும் பேதம் தெரியாதவள் எனது சகோதரி. அவள் குந்தியைப் பற்றியே கவலை கொள்ளுகிறாள். துரியோதனனுடைய சிரசுக்கு அரச கிரீடம் எப்போது ஏறும் என்பது தான் என் கவலை. இதற்காகவே காந்தாரத்தைத் துறந்து இங்கு காத்துக் கிடக்கிறேன்.

**திருத:** காந்தாரி இந்நாட்டின் அரசி. குந்தியையும் பாண்டு புத்திரர்களையும் கண்காணிக்க வேண்டியது அவளுடைய கடமையல்லவா?

**சகுனி:** அவளும் ஒரு தாய். தன் மகனின் நலன்களைக் கவனிக்கும் கடமையும் அவளுக்கு இருக்கிறதே!

**திருத:** தன் மகனுக்கு காந்தாரி விரோதமானவள் அல்லவே!

**சகுனி:** நட்புக்கும் பகைக்குமிடையிலான எல்லைக் கோடு மிகவும் குறுகியதே! ஆகவே நட்பு எப்போது பகையாக மாறும் என்பதை எவரும் அறியமுடியாது.

**திருத:** துரோணாச்சாரியார் பற்றிக் கூறினாயே! அவர் கற்பித்தலில் பாரபட்சமாக நடக்கக் கூடும் என்று சந்தேகிக்கிறாயா?

**சகுனி:** எனது கவலை அதுதான். அர்ச்சுனனின் சுபாவம் அவரைக் கவர்ந்து விடும். ஆகவே அஸ்வத்தாமனை குருகுலப் பள்ளியில் சேர்க்க வைப்பதால் பலன் கிட்டும்.

-காட்சி மாற்றம்-

கிருபாச்சாரியாரின் இல்லம்

**அஸ்வத்தாமன்:** மாமா! ஒரு ஆசிரியர் மாணவரிடம் அதிகம் அக்கறை கொள்வாரா அல்லது தனது மகனிடம்...!

**கிருபா:** மனித வாழ்க்கைக்கு காற்றும் வேண்டும் நீரும் வேண்டும். மகனில்லாத ஒரு மனிதனின் வாழ்க்கை பூரணத்துவமடையாது. அதேபோல் நல் மாணாக்கனை அடையாத ஆசிரியனும் பெருமையடைய முடியாது. கதிரவன் வெப்பம் தருகிறான். ஆகாயம் மழை பொழிகிறது. இவற்றைப் பெற்றுக் கொள்ள எதுவுமில்லாமல் போனால் வெப்பத்தாலும் மழையாலும் பலன் இல்லை. ஒரு மகனின் அன்பும் பக்தியும் தாய் தந்தை இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆனால் ஒரு மாணவனின் அன்பும் பக்தியும் குருவுக்கு மட்டுமே உரித்தானது. அதுசரி, இக்கேள்வியினை ஏன் தொடுத்தாய்?

**அஸ்வ:** நான் மாணவனாக இருக்க வேண்டுமா அல்லது சீடனாக இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கவே...!

**கிருபா:** அறிவு பரம்பரைச் சொத்தல்ல மகனே! அதனை முயற்சியின் பயனாகப் பெறவேண்டும்.

**அஸ்வ:** அவ்வாறானால் நான் என் தந்தையிடம் சீடனாகச் சேர விரும்புகிறேன்.

-காட்சி மாற்றம்-

துரோணாச்சாரியாரின் குருகுலம்

**துரோ:** நிமிர்ந்து நில்லுங்கள். இலக்கினை நோக்கி பார்வை இருக்கட்டும். அம்பினை நாணில் பூட்டுங்கள். புலன் முழுவதையும் ஒன்று படுத்தி அம்பினை வீசுங்கள்! இந்த அம்பு யாருடையது.....?

**அர்ச்சுனன்:** என்னுடையது குருதேவா...!

**துரோ:** சத்திரிய தர்மம் எத்தகையது..?

**அர்ச்:** அநீதிக்கும் அட்டூழியத்துக்கும் இடந்தராமல் மக்களை ஆயுதம் ஏந்தியும் காப்பது.

**துரோ:** ஓர் இளவரசரின் இலட்சியம் என்ன?

**அர்ச்:** மக்களுக்குரிய உரிமைகளை வழங்குவதுடன் நீதியை நிலைநாட்டி பாதுகாப்பளிப்பது.

**துரோ:** அர்ச்சுனா..! உனக்குரிய அடையாளம் என்ன?

**அர்ச்:** எனக்கான அடையாளம் ஒன்று மட்டுமே! அது நான் தங்களுடைய சீடன் என்பது மட்டுமே குருவே!

●●●

துரோணாச்சாரியாரிடம் அவருடைய மகன் அஸ்வத்தாமனையும் அழைத்துக்கொண்டு கிருபாச்சாரியார் வருகிறார்.

**துரோ:** வாழ்க! எனது மகனை என்னிடம் அழைத்து வந்தமைக்காக என்றும் நான் தங்களுக்குக் கடமைப்பட்டவன்.

**அஸ்வ:** அம்மாவும் வந்திருக்கிறார் அப்பா!

**துரோ:** கிருபாச்சாரியாரே! தங்கள் தங்கை கிருபாவை நான் இப்பொழுது பார்க்க முடியாத நிலையிலிருக்கிறேன். எனதுள்ளத்தில் ஏற்பட்டுள்ள ரணம் மாறாமல் என் மனைவியைச் சந்திக்கப் போவதில்லை. இவனுடைய கல்விபற்றி கவலைப்பட்டேன்.

●●●

**துரியோ:** இந்த இளைஞன் யார்?

**துச்சா:** உன் தந்தை உன் மீது அன்பு காட்டுவதுபோல் குரு இவன் மீது அன்பாக இருப்பதனால் இவன் அவருடைய மகன்.

**துரியோ:** அப்படியானால் அவனை நம் வசமாக்கி விடவேண்டும்.

●●●

கிருபாச்சாரியாரின் விடுதி-கிருபாச்சாரியாரும் தங்கை கிருபாவும்.

**கிரு. ஆச்:** கிருபா! உன்னை இப்போது பார்க்க முடியாது என்று அஸ்வத்தாமனிடம் துரோணர் கூறினார். தனது உள்ளத்தில் மாறாத வடு ஒன்றிருப்பதாக என்னிடம் கூறினார். அவருக்கு ஏற்பட்டுள்ள இந்நிலைக்கு என்ன காரணம்..?

**கிருபா:** காரணம் தெரிந்தால் நான் உங்களிடம் கூறியிருப்பேனே!

**கிரு. ஆச்:** அந்த மாவீரனின் உள்ளத்தில் இத்தகைய காயம் இருப்பது அழகல்ல. காரணத்தை அறிய முயற்சித்துப்பார். உனது ஒரே மகனான அஸ்வத்தாமன் தன் தந்தையின் உள்ளப்புண்ணை மரபு வழி உடமையாக ஏற்பதை அனுமதிக்கலாகாது. ஆகவே காரணத்தைக் கண்டறிய வேண்டியவள் நீதான்! அந்த மாவீரனை சாதாரணமான எவனும் புண்படுத்தியிருக்க முடியாது.

**கிருபா:** முழு விபரமும் எனக்குத் தெரியாது அண்ணா! அவருடன் குருகுலத்தில் துருபத நாட்டு இளவரசன் ஒன்றாகப் படித்தான். படிப்பு முடிந்து பிரியும் போது? "நாம் நண்பர்கள். எனது உடமைகளில் என்றும் பாதி உன்னுடையதே. என்றும் என்னை மறவாதே" என்று துருபதன் கூறியிருக்கிறான். அஸ்வத்தாமன் நான்கு வயதாயிருக்கும் போது, பால் கேட்டு அழுதான். அதற்கு வசதியிருக்கவில்லை. இதனால் வேதனையுடன் அவர் காணப்பட்டார்....!

-காட்சி பின்நோக்கு-

**கிருபா:** ஏன் கவலைப்படுகிறீர்கள் பிரபு!

**துரோ:** வறுமையில் வாடுகிறோம். அவனுடைய ஆசையினை எவ்வாறு நிறைவேற்றப் போகிறோம்? என்பதனைத்தான் யோசிக்கிறேன்!

**கிருபா:** இதற்காக வருந்தலாமா? ஒவ்வொரு தந்தையாலும் தமது மகனுக்கு அரியணையைப் பெற்றுத்தர முடியுமா?

-பின்நோக்கு முடிவு-

**கிருபா:** துருபத மன்னனிடம் செல்ல விரும்பினார். சிறு வயதில் கூறியவற்றை துருபதன் நினைவில் வைத்திருக்கமாட்டான் என்று கூறித் தடுத்தேன். அவன் நல்லவன். அவ்வாறு நடக்கக்கூடியவனல்ல, என்று கூறிப் புறப்பட்டார். அங்குதான் ஏதோ நடந்துள்ளது என்று கருதுகிறேன். அதன் பின்னர் எங்களிடம் அவர் வந்திருந்தால் உண்மை தெரிந்திருக்கும். அவர்தான் வரவில்லையே!

-காட்சி மாற்றம்-

துரோணர் குருகுலம்- அதிரதன் ராதேயனுடன் வந்து துரோணாச்சாரியாரை வணங்குகிறான்.

**அதிர:** எமது பணிவான வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் குருதேவரே!

**துரோ:** மகாராஜாவின் தேர்ச்சாரதியாக இருந்தவர் தானே..? இவன் உன் மகனா?

**அதிர:** ஆமாம் குருவே! பெயர் ராதேயன்.

**துரோ:** ராதேயனா...? ஏன் அப்படியான ஒரு பெயர்?

**அதிர:** அவனுடைய தாயின் பெயர் ராதை... அதனால்...!

**துரோ:** ஒளி பொருந்திய கதிரவன் போன்று பிரகாசிக்கும் அவன் முகத்துக்கு அவனை கர்ணன் என்று அழைக்கலாம்! சரி என்னிடம் இவனை அழைத்து வரக் காரணம்?

**அதிர:** போர்ப் பயிற்சி பெற ஆசை கொண்டுள்ளான்! இதற்கு தங்களுக்கு இணையான எவருமே இல்லை... அதனால் தங்களிடமே வந்தோம்.

**துரோ:** இவனுக்கான பயிற்சியை நன்கொடையாக அளிப்பதானால் நான் மகிழ்ச்சியடைவேன்!

**கர்ண:** குருதேவரே! எனது குறுக்கீடுக்கு தயவு செய்து மன்னியுங்கள். கல்வியை நன்கொடையாக நான் ஏற்கத் தயாரில்லை. தவிர கல்வி அறிவை எவரும் நன்கொடையாகத் தரவும் இயலாது.

**துரோ:** நீடூழி வாழ்க மகனே! அதிரதா! அரசகுமாரர்களும் சத்திரியர்களும் மட்டுமே பயில்வதற்கான குருகுலம் இது. ஆகவே நீ வேறு ஓர் இடம் தேடி இவனைச் சேர்த்துவிடு!

**கர்ண:** கல்வி பகிர்ந்தளிக்கப்படும் பண்டமல்ல. கல்விக்கரசியான கலைவாணி, அறிவு பெற வருவோரிடமெல்லாம் அவர்களின் தந்தையின் பெயரை கேட்டறிகிறாளோ?

**அதிர:** கர்ணா..!

**கர்ண:** அப்பா! உலகம் என்னை எப்பெயராலும் அழைக்கட்டும். ஆனால் தாங்கள் என்னை ராதேயன் என்றே அழையுங்கள். தாங்கள் என்னை கர்ணன் என்று அழைக்கும்போது நீங்களே நமது உறவை மறுப்பது போன்றிருக்கிறது. குருதேவரே! தங்களிடம் ஒன்று கேட்கலாமா?

**துரோ:** தாராளமாக...!

**கர்ண:** இந்த இளைஞன் யாரென அறியலாமோ?

**துரோ:** அவன் என் மகன்- அஸ்வத்தாமன்!

**கர்ண:** ஆச்சாரிய தேவரே! அப்போ இவன் இளவரசனுமல்ல, ஒரு சத்திரியனுமல்ல என்று வந்தனங்கள்!

**அதிர:** குருதேவரே! துடுக்குத்தனமாக வாயாடும் இவனை தயவு செய்து மன்னியுங்கள்.

●●●

சிறுவர்கள் விளையாடுகின்றனர் அர்ச்சுனன் துரோணரிடம் வருகிறான்.

**துரோ:** இதுதான் சக்கர வியூகம். இதனுள் புகுவதும் கடினம். புகுந்துவிட்டால் வெளியேறுவது மிக மிகக் கடினம்.

**அர்ச்:** குருதேவா! நானும் தங்களுடன் இருக்கலாமா?

**துரோ:** ஏன் நீ விளையாட போகவில்லையா?

**அர்ச்:** ஆசிரியர் போதனை செய்யும்போது விளையாட்டில் புலன் செல்ல முடியாது.

**துரோ:** அப்படியானால் என்னிடமிருந்து எல்லா அறிவையும் பெற்று விடுவாய் போல் தெரிகிறதே! உட்கார். சக்கர வியூகம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன்....

-காட்சி மாற்றம்-

குரு சாந்தீபரின் ஆச்சிரமம்.

**கிருஷ்ணன்:** தனது குருவிடமிருந்து ஒன்று விடாமல் மாணவன் சகல அறிவையும் பெற்றுவிடவேண்டும். ஆசிரியரிடமிருந்து எல்லாவற்றையும் பெற்றபின்னர்தான் அவர் குருதட்சணை கோருவார்.

**குசேல:** பேச்சில் இவனுக்கு எவரும் ஈடாக முடியாது.

**சாந்தீ:** ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் வெற்றி தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை. மாணவனுக்குத் தருவதற்கு ஆசிரியரிடம் ஏதாவது இருக்கும். ஆசிரியரிடமிருந்து இனிமேல் கற்றுக் கொள்ள வேண்டியதெதுவுமே இல்லை என்ற பெரும் பேற்றினை யாராவது ஒரு மாணவன் அடைவான். இதனால் குருவும் பெருமை அடைவார். கிருஷ்ணன் வீடு திரும்ப நேரமாகிவிட்டது. குருமாதா கோபம் கொள்வார். எல்லாவற்றுக்கும் நேரகாலம் உண்டல்லவா?

**பலரா:** ஆமாம். கிருஷ்ணன் உணவருந்தும் நேரமிது.

-காட்சி மாற்றம்-

துரோணாச்சாரியாரின் குருகுலம்- அர்ச்சுனன் குடிசைக்குச் செல்லும்போது உள்ளே இருளில் ஆளரவம் கேட்கிறது.

**அர்ச்:** யாரது...? பீமண்ணாவா...?

**பீமன்:** ஆமாம். சப்தம் போடாதே! யாராவது வரக்கூடும். இதில் நீயும் கொஞ்சம் சாப்பிடு!

**அர்ச்:** வேண்டாம். சிறிய அளவில் தின்றால் பசி அடங்காது. அது சரி- இருளில் உன் கை எவ்வாறு வாயுள் உணவினைக் கொண்டு செல்கிறது?

**பீமன்:** அர்ச்சுனா! கைக்கும் கண்ணுண்டு. வாயோ ஒரே இடத்திலிருக்கிறது. ஆகவே கை அந்த வாயை சுலபமாக அடைய முடிகிறது. இதெல்லாம் பயிற்சியினால் ஏற்படும் பழக்கம் தம்பி!

**அர்ச்:** பயிற்சி! ஆமாம் பயிற்சிதான்!

-காட்சி மாற்றம்-

துரோணாச்சாரியார் படுத்திருக்கிறார். அவர் நினைவில் பழைய சம்பவம் ஒன்று உருவெடுக்கிறது. அவருடன் குருகுலத்தில் ஒன்றாகப் பயின்ற போது நண்பனாகியிருந்து இன்று மன்னனாக இருக்கும் துருபதனின் வார்த்தைகள் எதிரொலிக்கின்றன.

**துருபதனின் குரல்:** *மாணவப் பருவத்தை மறந்துவிடு. பக்குவம் அடையாத பருவம் அது. அக்காலம் கடந்த காலமாகி விட்டது. சம அந்தஸ்திலுள்ளவர்களுக்குள் தான் நட்பு வளர முடியும். அதுதான் சமூக நீதி. நீயோ ஓர் அந்தணன். யாசகமாக கேள் தருகிறேன். ஆனால் மாணவப் பருவத்தில் சொன்னதை வைத்து உரிமை கொண்டாட எண்ணாதே! அதனை மறந்துவிடு.*

வெளியே அம்பு எய்யும் ஒலி கேட்டு விழித்தெழுந்த துரோணர் வெளியே வந்து பார்த்த போது அர்ச்சுனன் வில்லில் பயிற்சி செய்வதைக் காண்கிறார்.



**துரோ:** அர்ச்சுனா...! நான் இந்த வித்தையை இதுவரை சொல்லித்தரவில்லையே!

**அர்ச்:** குருதேவா! தங்களிடமே எல்லாவற்றையும் கற்றுக் கொண்டேன். இருப்பினும் இந்த முறையினை அண்ணன் பீமனிடம் கற்றுக்கொண்டேன். அவன் கடும் இருளில் உணவு தின்றுகொண்டிருந்தான். கைகளுக்கும் பார்வை உண்டென்றான். அவ்வாறானால் இருளிலும் கைகள் இலக்குகளைக் கண்டுகொள்ள முடியுமல்லவா? அதுதான் இருளில் அம்புகளை எய்து பயிற்சி பெறுகிறேன். குருவே! நான் தவறிழைத்தால் தயைகூர்ந்து மன்னியுங்கள்.

**துரோ:** இல்லை...இல்லை. நீ தவறிழைக்கவில்லை அர்ச்சுனா! என் இதயத்தில் இடம் பிடித்துக்கொண்டாய். நன் மாணாக்கனுக்குரிய அத்தனை அம்சங்களையும் உன்னிடம் காண்கிறேன். மாணவனுக்கு ஆர்வமும் கரிசனையும் இல்லாவிட்டால் ஆசிரியர் எவ்வாறு அறிவினைப் புகட்ட முடியும்? அறிவு என்பது நல்ல வளமுள்ள நிலத்தில் விதைக்கப்படும் விதையைப் போன்றது. ஒரு மாவீரனாவதற்கான அறிகுறிகளை உன்னிடம் காண்கிறேன். இந்த அவனியில் உன்னைச் சிறந்த வில் வீரனாக்குகிறேன். பிரம்மாஸ்திர வித்தையையும் உனக்கு எனது வரப்பிரசாதமாகத் தருகிறேன். அர்ச்சுனா!

சோம்பலும் உறக்கமும் ஒரு சுத்த வீரனின் எதிரிகள். அதுபோல் கடும் உழைப்பும் எப்போதும் விழிப்புடனும் எச்சரிக்கையாக இருப்பதும் அவனுடைய நண்பர்கள். மேற்கூறப்பட்ட எதிரிகளை முறியடித்து உழைப்பையும் ஊக்கத்தையும் நண்பர்களாக்கிக் கொண்ட வீரனை வெல்ல எவராலும் முடியாது. நீ பெருவீரனாகக்கடவாயாக....!

●●●

துரோணரும் மாணவர்களும் காலையில் நதிக்கரையில் நிற்கின்றனர். துரோணர் நீராடி விட்டு சூரிய நமஸ்காரம் செய்கிறார்.

- ஒரு முதலை துரோணரின் காலைப் பிடித்து நீருள் இழுக்கிறது.
- துரோணர் வேதனையில் அபயக்குரலெழுப்புகிறார்.
- கௌரவ சகோதரர்கள் பயந்து ஓடுகின்றனர்.
- அர்ச்சுனன் வில்லில் அம்பேற்றி முதலையின் திறந்த வாய்மீது பாணம் தொடுக்கிறான்.
- முதலையின் வாய் திறந்தபடியிருக்க துரோணர் விடுபடுகிறார்.

**துரோ:** அர்ச்சுனா! பரீட்சையில் நீ வெற்றி பெற்றுவிட்டாய்!

**அர்ச்:** பரீட்சையா...?

**துரோ:** ஆமாம்! அது உண்மை முதலையல்ல. அது உருவாக்கப்பட்ட ஒரு பொருள். பாண்டவர்களில் ஏனைய நால்வரும் அங்கே வருகின்றனர்.

**யுதிஷ்:** இதனை ஏற்றுக் கொள்ளுங்கள் குருதேவா!

கௌரவர்களும் வந்து சேருகின்றனர்.

**துரியோ:** நாங்கள் உதவிக்கு யாரையாவது அழைத்து வரவே போனோம் குருதேவா...!

**பீமன்:** இல்லை! நீங்கள் உதவி தேடிப்போகவில்லை. பயந்து ஓடினீர்கள். கோழைகள்.

**துரியோ:** என்னை கோழை என்றா சொன்னாய்?

**துரோ:** நீ கோழையல்ல. உனது வீரத்தை உதவியற்ற கைதிபோலாக்கி விட்டது உனது தற்பெருமை. இளவரசர்களுக்கும் வீரர்களுக்கும் அகம்பாவம் கூடாது. அது பலவீனத்தின் அறிகுறி. அகம்பாவத்தை அடக்கிக்கொள்ளக் கற்றுக்கொள் துரியோதனா! பணிவாக நடக்க முயற்சி செய்! முன்னேற்றத்துக்கு அடக்கமே ஆக்கம்தரும் வழி!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் உறைவிடம். கவலையில் ஆழ்ந்திருக்கும் அவரிடம் விதுரர் வருகிறார்.

**விதுரர்:** தாழ்மையான வணக்கம் சித்தப்பா! ஏதோ கவலையுடன் இருக்கிறீர்களே!

**பீஷ்ம:** வாழ்க மகனே விதுரா! மனக்குழப்பம் ஏற்பட்டால் கடந்த காலத்தை எண்ணிப் பார்க்கிறேன். எமது மூதாதையரின் வாழ்க்கையே இன்று வரலாறாகியது. அவர்களுடைய அனுபவங்களே எமக்கு பாடங்களாகின்றன. அவர்கள் விட்ட தவறுகளை நாம் மீண்டும் விட்டு விடாமலிருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அவர்கள் வெற்றிகளையும் தோல்விகளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**விதுர:** அது சரி சித்தப்பா! இன்று வரலாறு பற்றி ஏன் சிந்திக்கிறீர்கள்?

**பீஷ்ம:** விதுரா! நான் நிச்சயமற்ற எதிர் காலத்தைப் பார்ப்பது போல் நீயும் பார்க்கிறாய் எனக் கருதுகிறேன். நான் இந்த அரியணையுடன் கட்டுண்டு கிடக்கக் கடமைப்பட்டவன். ஆனால்..நீ...!

**விதுர:** நானோ பணிப்பெண்ணின் மகன். எனது நிலை என்ன; உரிமை எத்தகையது என்பதை நான் அறிவேன். ஆனால் காலம் வரும்போது நான் என் வாயைத் திறக்கவே செய்வேன்!

**பீஷ்ம:** விதுரா! சகுனியைச் செயலிழக்கச் செய்ய ஏதாவது மந்திர தந்தரங்களுண்டா?

**விதுர:** அவ்வாறு எதுவும் என்னிடம் இல்லை. ஆனால் இதிலிருந்து விடுபட ஒரேயொரு வழிதானுண்டு. அவனுடைய கொடிய விளையாட்டை விளையாடச் சந்தர்ப்பம் அளிக்கலாகாது.

**பீஷ்ம:** எனக்கு ஒளித்து விளையாடத் தெரியாது. இருப்பினும் சகுனியின் இக்கோபத்துக்கான அடிப்படைக் காரணத்தை நான் அறிந்தாக வேண்டும்.

**விதுர:** சித்தப்பா குருவம்சத்தின் மூத்த முதல்வரான தாங்கள் இவற்றையெல்லாம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கலாகாது. யுதிஷ்டிரனை இளவரசனாக அறிவித்து இன்றைய அதிகார வெறி வளரவொட்டாமல் தடுத்து விடுங்கள்.

**பீஷ்ம:** இதற்கு திருதராட்டிரன் என்ன சொல்வான் என்பதனை நான் அறிவேன். சகுனி கொதித்தெழுவான். இளவரசன் உரிய வயதினை அடையும் வரை தகுதியினை எடைபோட முடியாது. ஆகவே இன்றையச் சிக்கலுக்கு இது தக்க பரிகாரமாகாது என்பதனை நான் நன்கு உணர்ந்தவன். இந்தச் சிக்கலுக்கெல்லாம் என் தந்தை மீது நான் கொண்டிருந்த அபரிமிதமான அன்புதான் காரணமாகி விட்டது. இதனால் இன்று செயலிழந்து நிற்கிறேன்.

**விதுர:** அத்தகைய பயங்கரமான சாபத்தினை ஏற்றிருக்கக் கூடாதென இன்று எண்ணுகிறீர்களா?

**பீஷ்ம:** இல்லை! அத்தகைய நிலை ஏழேழு ஜென்மத்திலும் தொடர்ந்தாலும் அதே முடிவுக்குத்தான் நான் வந்திருப்பேன். ஆனால் வரலாற்றைத்தான் மீண்டும் மீண்டும் அலச வேண்டியவர்களாக இருக்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக குடிமக்கள் என்ற கடமைதான் மிகப் பெரியது. அதற்கு அமையாவிட்டால் நாட்டுக்குத் துரோகமிழைத்தவர்களாகி விடுவோம்.

**விதுர:** கிந்தம முனிவரை பாண்டு கொன்றமை தற்செயலாக நடந்த ஒரு விபத்து. அதில் ஒரு குடிமகனின் கடமை அடங்கவில்லையே! அதற்காக இன்று முழு நாடுமே தண்டனைக்குள்ளாக வேண்டியிருக்கிறதே!

**பீஷ்ம:** நான் அதற்காகத்தான் அஞ்சுகிறேன்.

**விதுர:** பெருங்கடல் சிறு துளி நீருக்கு அஞ்சலாகுமா? வரலாற்றிலிருந்து கற்க வேண்டியதுதான். ஆனால், அதனை நாம் ஒரு மறைவிடமாகக் கருதலாகாது. அண்ணன் திருதராட்டிரன் பார்வையற்றவன். அண்ணி காந்தாரியோ தன் கணவனுக்காக தன் பார்வையை மறைத்துக்கொண்டாள்.

**பீஷ்ம:** காந்தாரி தன் கண்களைத் திறந்து பார்த்தால் இங்கு நடைபெறுவனவற்றையிட்டு எத்தகைய கருத்து கொள்வாளோ தெரியாது.

-காட்சி மாற்றம்-

காந்தாரியின் அந்தப்புரம்-சகுனி வருகிறான்.

**சகுனி:** அன்புச் சகோதரியே இதுவர எங்கே போயிருந்தாய்?

**காந்தா:** குந்தியைப் பார்க்கப் போயிருந்தேன் அண்ணா?

**சகுனி:** அஸ்தினாபுரியின் மகாராணி நீ! நீ ஏன் போக வேண்டும்? அவர்கள் விரும்பினால் உன் காலடிக்கல்லவா அவர்கள் வரவேண்டும்!

**காந்தா:** குந்தி எனது சொந்த உறவினள் அல்லவா?

**சகுனி:** இருக்கலாம். அவள் உன்னைவிட வயதில் குறைந்தவள். தவிர நீ மன்னர் திருத்ராட்டிரரின்-குரு வம்சத்தின் மூத்தவனின் -மனைவி. குந்தி பாண்டுவின் விதவை. இவற்றையெல்லாம் எப்போது புரிந்துகொள்ளப் போகிறீர்களோ தெரியாது. ஒரு நாள் நீங்களெல்லாம் கண் திறந்து பார்க்கும்போது குந்தியின் மைந்தர்கள் நாட்டையே தமதுடமையாக்கி கொண்டிருப்பார்கள்...!

**காந்தா:** குந்தியையும் புதல்வர்களையும் நான் தவறாக கருத முடியாதிருக்கிறது அண்ணா!

**சகுனி:** பைத்தியக்காரப் பெண்ணாக இருக்கிறாயே!

**காந்தா:** அண்ணா! நீ காந்தார நாட்டுக்குச் செல்வதுதான் இப்பொழுது நல்லது என்று எனக்குப் படுகிறது.

**சகுனி:** இல்லை. உனது மகனுக்குரிய உரிமைகள் நிர்ணயிக்கப்படும்வரை நான் அஸ்தினாபுரத்தில் தான் இருக்கப் போகிறேன்.

பின்னணிப்பாடல்:

**சந்திர வம்சத்தின் வான்மீது
வஞ்சக மேகம் படர்கிறதே
செங்கதிர் மறைந்து மங்கும் இருளுடன்
நஞ்சது கலந்து நலிவுறுகிறதே**

**நல்வினை நாடிச் செல்வோர்என்றும்
நலத்தினை நாடிப் பேணட்டும்
பொல்லாங்கைப் போற்றிடும் புல்லறிவாளர்
அல்லற் பட்டாங்கே அழியட்டும்.**

-தொடர்ந்து வரும்-

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.



அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு–11.
தொ.பேசி: 436331




## சாயுமோ இந்த மலை?

எந்த மலை அசைந்தாலும் இந்த மலை அசையாது என்ற தோரணையில் கண் கொள்ளா காட்சி தரும் இவர் ஒரு சுமோ வீரர். மல்யுத்தத்தில் ஒரு வகைதான் சுமோ.

இவர் ஹவாய் நாட்டில் பிறந்தவர். 1993 ஜனவரி 4ம் திகதி ஜப்பான் தலைநகரில் நடைபெற்ற சுமோ மல்யுத்தத்தில் பல நாட்டு மலை உடல்கள் கலந்து கொண்டன. ஆனால் அந்த மலைகளையெல்லாம் தன் எடையால் தூக்கி வீசிய மலைதான் இவர். அதனால் உலக சாதனைப் புத்தகத்தில் பெரிய இடம் பிடித்துவிட்டார். அண்ணாரது எடை 263 கிலோ (580 இறாத்தல்) பெயர் சலீவா ஃபுவாலி அற்றிசாலோ. வாழ்க மலை!



## சாதனையோடு பிறந்த குழந்தை

பிறக்கும்போதே 12 பற்களுடன் பிறந்த குழந்தை இது. 1990 ஏப்ரல் 10ம் திகதியன்று பிறந்த இக்குழந்தையின் பற்கள் அத்தனையும் பிறந்து மூன்றாவது நாளன்றே பிடுங்கப்பட்டுவிட்டன. அக்குழந்தைக்குப் பால் கொடுப்பது பிரச்சனையாகி விட்டது என்பதனாலேயே பற்கள் பிடுங்கப்பட்டன.

பல்லோடு பிறந்த குழந்தைகள் பல உண்டு. 12 பற்களோடு பிறந்த காரணத்தால் உலக சாதனைக் குழந்தை என்ற பெருமை பெற்றுவிட்டது இந்தக் குழந்தை.

## பேரழகும்-பிரபலமும்

இவர்தான் டயானா றொஸ். பாடகியாகி 30 வருடங்கள். இவரது பாடல்களை பதிவு செய்த 35 தொகுதி இசைப் பேழைகள் இங்கிலாந்தில் வெளியாகியுள்ளன. அமெரிக்காவிலும் பல தொகுதிகள் வெளியாகியுள்ளன. இவரை ஒத்த பாடகர்களில் அதிகப் பிரபலம் பெற்றவர் என்ற சாதனை படைத்துள்ளார். இன்றும் இளமையாக ஆடைகளில் புதுமையாக அமெரிக்க, ஐரோப்பிய இரசிகர்களை கவர்கிறார்.

## எனக்கு நீ உனக்கு நான்!

பாலூட்டும்
தாய்க்கும்
பசிக்கும் தானே!
அது புரிந்து
தானும் தாய்க்கு
உணவூட்டும்
பரிவான குட்டி.






## முயன்றால் முடியும்

அஜாராகிவிட்டதே உடல் என்று ஒடுங்கிப் போய், வாழ்க்கையின் இன்பங்களில் இருந்து ஒதுங்கிப்போய் இருப்பது அவசியம் என்ன?

இப்போதெல்லாம் ஊனமுற்றவர்கள் இருப்பதோடு வாழப் பழகிக்கொண்டார்கள். சாதனை புரிக்க, துணிந்த தொடங்கிவிட்டார்கள்.

ஊனமுற்றோர்க்கான ஒலிம்பிக் போட்டிகள் 1992ல் பாரிசிலோனாவில் நடைபெற்றன.

அதில் அதிக சாதனை படைத்து 4 தங்கப் பதக்கம் வென்று தன் நாட்டுக்கே பெருமை தேடித் தந்தவர் இவர்.

சக்கர நாற்காலி ஓட்டப்போட்டிகளில் ஏற்கனவே படைக்கப்பட்ட சாதனைகளை தகர்த்தெறிந்து உலக சாதனையாளராகி விட்டார். ...

